T. 2070

T
2070
2070
Acq 12090

உ

சிவ சிவ

# காஞ்சி மாநகரம்

Kanci managaram

★

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி

## சாமிநாத சுவாமிகள் அவர்கள்

பதினோராம் ஆண்டு நினைவு மலர்

25—3—1955

GOVERNMENT ORIENTAL
22 AUG 1955
TRIPLICANE P.O. MADRAS

★

ஸ்ரீ காசிமடம் : : திருப்பனந்தாள்

உ

# திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து வெளியீடுகள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1 | விநாயகர் திருமுறை ... ... | 0 | 1 |
| 2 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் ... ... | 6 | 0 |
| 3 | சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம் ... | 3 | 0 |
| 4 | திருஞான சம்பந்தர் தேவாரம் ... ... | 2 | 8 |
| 5 | திருநாவுக்கரசர் தேவாரம் ... ... | 1 | 0 |
| 6 | சுந்தரர் தேவாரம் ... ... | 1 | 0 |
| 7 | திருவாசகம் ... ... | 0 | 6 |
| 8 | திருக்கோவையார்-பேராசிரியர் உரை ... | 2 | 0 |
| 9 | ஒன்பதாம் திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு ... ... | 0 | 9 |
| 10 | திருமந்திரம் ... ... | 1 | 8 |
| 11 | பதினோராந் திருமுறை ... ... | 1 | 4 |
| 12 | அம்மையார்-அற்புதத் திருவந்தாதி ... | 0 | 4 |
| 13 | திருக்கைலாய ஞானவுலா ... ... | 0 | 8 |
| 14 | பெரிய புராணம் ... ... | 2 | 8 |
| 15 | பெரிய புராணம்-வசனம் ... ... | 2 | 0 |
| 16 | அகத்தியர் தேவாரத் திரட்டு-குறிப்புரை ... | 0 | 6 |
| 17 | திருவிளையாடற் புராணம் ... ... | 3 | 0 |
| 18 | திருவிளையாடற் புராணம்-வசனம் (அச்சில்) ... | | |
| 19 | தாயுமான சுவாமிகள் பாடல் ... ... | 1 | 4 |
| 20 | கந்தபுராணச் சுருக்கம் ... ... | 1 | 12 |
| 21 | கந்தபுராணம்-முதல் மூன்று காண்டங்கள் ஆராய்ச்சிக் குறிப்புடன் ... ... | 2 | 12 |
| 22 | ஷை யுத்த காண்டம், தேவ காண்டம் ... | 1 | 12 |
| 23 | ஷை தக்ஷ காண்டம் குறிப்புரை ... ... | 1 | 8 |
| 24 | கந்த புராணம்-வசனம் ... ... | 2 | 8 |
| 25 | கந்தர் அலங்காரம் குறிப்புரை ... ... | 0 | 4 |
| 26 | கந்தர் அநுபூதி ஷை ... ... | 0 | 2 |
| 27 | கந்தர் கலிவெண்பா—ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ... ... | 0 | 6 |

T. 2070 Acq/1209

ஸ்ரீ திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து இலவச வெளியீடு

உ
சிவ சிவ
செந்திலாண்டவன் துணை

# காஞ்சி மாநகரம்

★

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ
காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்
அவர்கள் திருவுளப்பாங்கின்படி

ஸ்ரீ காசிமடத்து இளவரசு
ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
அவர்களால் வெளியிடப்பெற்றது

★

ஜய ஆண்டு பங்குனித் திங்கள் 12-ம் நாள்

1955

ஸ்ரீ காசிமடம் :: திருப்பனந்தாள்

உ

சிவ சிவ

# முத்தித்தலம்

---

தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம்—நெல்லைகளர்
**காஞ்சி**கழுக் குன்றமறைக் கா(டு)அருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்.

—சிவபோகசாரம்

மதியார் **கச்சி** நதியே கம்பம்
விதியால் ஏத்தப் பதியா வாரே.

—சம்பந்தர் தேவாரம்

---

உ

சிவ சிவ

# முன்னுரை

---

**ஏகம் பத்துறை எந்தாய் போற்றி !**
**பாகம் பெண்ணுரு வானாய் போற்றி !**

—திருவாசகம்

ஸ்ரீ காசியம்பதியின் திருப்பெயரைத் தன்னகத்தே கொண்டதும், எல்லையிலாகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பிய பூசனையை, இறைவி தாமே மேற்கொண்டு பூசிக்க, அக்காலை கம்பையாறு பெருகிவர, அம்பிகை தழுவக்குழைந்தமையால் 'தழுவக்குழைந்தநாதர்' ஆகி எழுந்தருளியிருப்பதும், முத்திதரும் தலங்கள் ஏழனுள் ஒன்றுவதும், சத்தித்தன்மை வாய்ந்த பிருதிவித்தலமாக விளங்குவதும், அன்புடன் நினைக்க முத்தி தரவல்லதும், அம்பிகை இனிதிருந்து உயிர்கள் உய்வான் வேண்டி முப்பத்திரண்டு அறங்களையும் செய்துகாட்டி உலகினை உய்வித்த பெருமையினையுடையதும் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறப்புவாய்ந்ததுமாகிய தலம் **காஞ்சி மாநகரம்** ஆகும். இத் தலம் பன்னிரு திருநாமங்களையுடையதும், தேவார ஆசிரியர் மூவராலும் பாடப்பெற்ற திவ்விய தலங்கள் ஐந்தினைத் தன்னகத்தே கொண்டதும், பாலியாற்றின் பெருவளத்தால் பாங்குடன் திகழ்வது மாகும்.

இத்தகைய பெருஞ் சிறப்பியல்புகளை எல்லாம் ஒருங்கே பெற்றுள்ள காஞ்சி மாநகரின் பெருமையினை இம் மாநில மக்கள் அனைவரும் நன்குணர்ந்து அதனைக்கண்டு தரிசித்து வழிபடவும், இத் தலத்துத் தேவாரம் முதலியவற்றை மக்கள் உள்ளன்புடன் ஓதியுணர்ந்து பேறுபெறவும் வேண்டும் என்ற அருள் நோக்கம் கொண்டுள்ள எங்கள் தலைவர், திருப்பனந்தாள்

ஸ்ரீ காசி மடத்தின் அதிபர் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்** திருவுளப் பாங்கின்படி, **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் அவர்களின்** பதிஞேராம் ஆண்டு நினைவு மலராக, ஜய ஆண்டு, பங்குனித் திங்கள் 12-ம் நாள் ஆகிய இந் நன்னுளில் **காஞ்சி மாநகரம்** எனும் இச் சிறுநூல் ஸ்ரீ காசி மடத்தின் இலவச வெளியீடாக வெளிவருகின்றது.

இவ்வெளியீட்டில் காஞ்சிமாநகர வரலாற்றுச் சுருக்கமும், அத்தலத்தைப்பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புகளும், தேவாரம் முதலிய திருமுறைகளும், அவற்றிற்கான சிறு குறிப்புகளும், காஞ்சி மாநகரில், ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் நிறுவியுள்ள பேரறக் கட்டளைகளும் பிறவும் இடம் பெற்றுள்ளன. இத்தகைய பேரறக் கட்டளைகளை நாளும் நிறுவிச் சைவத்தோடு தமிழினையும் பேணிப் பிற அறங்களையும் ஆற்றி வரும் **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள்** அவர்கட்குச் இம்மாநிலம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

இவ்வெளியீட்டிற்கெனச் சிறந்த ஆராய்ச்சிக் குறிப்புகள் தொகுத்து நன்முறையில் அமைத்துக் கொடுத்த, திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி பிரின்சிபால், திருவாளர் **வித்துவான் கே. எம். வேங்கடராமையா M. A., B. O. L.,** அவர்கட்கும், திருச்சி **வித்துவான் திரு. தீ. பட்டுச்சாமி ஓதுவார்** அவர்கட்கும், அச்சுப் பிரதிகளை ஒப்புநோக்கிய **வித்துவான் திரு. கோ. இரத்தினம் பிள்ளை** அவர்கட்கும் செந்திலாண்டவன் திருவருள் துணைசெய்வதாக.

இச்சீரிய சிவப்பணியினை அடியேற்கு வழங்கியருளிய **ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள்** அவர்கள் பொன்னர் திருவடி என்றும் அடியவன் சிரத்திற் கணியெனத் திகழ்வதாக. அவர்கள் திருவடி மலர்களை என்றும் வந்தித்து வழிபடுகின்றேன்.

ஸ்ரீ காசிமடம்,
திருப்பனந்தாள்,
25—3—1955.

**மகாலிங்கத் தம்பிரான்**

இளவரசு.

உ
சிவ சிவ
செந்திலாண்டவன் துணை

# காஞ்சி மாநகரம்

## தல வரலாறு

GOVERNMENT ... TRIPLICANE P.O., MADRAS
2 AUG 1955

### ஸ்ரீ ஏகாம்பரநாதர் துதி

சீர்பரவு பரஞான ஒளியாகி
வெளியாகித் தெளிதல் தேற்ற
ஏர்பரவி உருவெனவும் அருவெனவும்
உருவருவம் எனவும் தானும்
நீர்பரவி மறைமுடிவுக் கப்பாலாய்
ஆனந்த நிருத்தஞ் செய்தே
பார்பரவ வரும்ஏகாம் பரத்(து)ஒருவர்
இருபதமே பணிதல் செய்வாம்.

—பழைய காஞ்சிப்புராணம்

### தோற்றுவாய்

"மூர்த்திதலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே'

—தாயுமானவர்

இவ்வுலகிலுள்ள ஒவ்வொருவரும் இறைவனைக் காண முயலுதல் வேண்டும். அங்ஙனம் முயற்சி செய்த மக்கள் நிலையான முத்தி இன்பத்தினை அடைந்துள்ளமையை நூல்கள் வாயிலாக அறிகின்றோம்.

"ஊன டைந்த உடம்பின் பிறவியே, தான டைந்த உறுதியைச் சாருமால், தேனடைந்த மலர்ப்பொழில் தில்லையுள், மாந டஞ்செய் வரதர்பொற் றாள்தொழ" என்ற சேக்கிழார் வாக்கின்படி பெறுதற்கரிய மானிடப் பிறவி எடுத்ததன்

நோக்கம், மன மொழி மெய்களால் இறைவனை வணங்கி வழி படுதற்கேயாம். உடலைப் பெற்றும் ஊமரைப் போன்று இறைவன் புகழை இயம்பாமலும், அவன் திருவருளைச் சிந்தியாமலும், அவன் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் திருத்தலங்களைக் கண்டு தரிசியாமலும் இருப்பது பயன் அற்றதாம்.

இறைவன் உயிர்களிடத்து இரக்கங்கொண்டு எழுந்தருளித் தன்னை வழிபட்ட தேவர்கட்கும் மானுடர்க்கும் ஏனைய உயிர்கட்கும் அந்தமில் இன்பத்து அழிவில்லாத முத்தி இன்பம் தந்தருளிய இடங்களையே **திருக்கோயில்** என்பர். அவற்றுள் பெரும்பாலன இறைவன் (மூர்த்தி) பெருமை, ஊர் (தல)ப் பெருமை, தீர்த்தப் பெருமை யாவும் பொருந்தி இருக்கும்.

இத்தகைய சிறப்பியல்புகள் வாய்ந்த தலங்கள் நம் நாட்டில் மிகப் பல. அவற்றுள் முத்தி தரும் தலங்கள் எனப் பாராட்டப்படுவன அயோத்தி, மதுரை, மாயை, அவந்தி, காசி, **காஞ்சி**, துவாரகை என்ற ஏழும் ஆகும். அவ்வேழனுள் மிகச் சிறப்பு வாய்ந்தது **'கச்சி'** என வழங்கும் **காஞ்சி மாநகரம்** ஆகும்.

## பெயர்க்காரணம்

க+அஞ்சி எனப்பிரித்து, க - பிரமம், அஞ்சி - அஞ்சித்தல்; எனவே, பிரமதேவனால் விரும்பிப் பூசித்துப் பேறுபெற்ற தலம் எனப் பொருள்படும். க - தலைமை. காஞ்சி - பேரின்பம் தருவது என்றும், நில மக்கட்குக் காஞ்சி என்னும் உந்தித் தானத்தை ஒத்தது என்றும் காரணப்பொருள் கூறுவதும் உண்டு.

இத்தலம் **காஞ்சிபுரம், பிரளயசித்து, சிவபுரம், விண்டுபுரம், மும்மூர்த்தி வாசம், பிரமபுரம், காமபீடம், தபோமயம், சகல சித்தி, கன்னிகாப்பு, துண்டீரபுரம், தண்டகபுரம்** எனப் பன்னிரு திருநாமங்களையுடையது.

## காஞ்சி மாநகரச் சிறப்பு

இந்நகரம் பஞ்சபூதத் தலங்களுள் சத்தித்தன்மை வாய்ந்த பிருதிவித்தலமாகும்; எக்காலத்து அழிவில்லாத சத்து எனப்

படும் செம்மையாகிய முத்தி வளம் தரும் தன்மையினையுடையது; எல்லாச் சமயத்தவரும் ஏத்தித் துதிக்கும் ஏற்றமுடையது. சைவர்களேயன்றி வைணவர்களும், பிறரும் இந்நகரினைப் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

இந்நகரில் இருபது சிவ தலங்களும். எட்டு வைணவ தலங்களும் திகழ்கின்றன. சிவதலங்களுள் **கச்சி யேகம்பம், கச்சி மேற்றளி, திருவோணகாந்தன் தளி, திரு அனேகதங்காவதம், திருக்கச்சிநெறிக் காரைக்காடு** என்ற ஐந்தும் தேவாரத் திருப்பதிகம் பெற்ற சிறப்பு வாய்ந்த தலங்கள் ஆகும்.

## 1. கச்சி ஏகம்பம்

இஃது, அனைத்துலகும் ஈன்ற அன்னையாம் உமாதேவியார் இறைவன்பால் கேட்டருளிய ஆகம முறைப்படி உலகம் உய்ய இறைவனைப் பூசிக்கும்பொருட்டுத் திருக்கயிலையினின்றும் வந்தருளிக் கம்பையாற்றின் கரையில் முளைத்தெழுந்த மூல லிங்கத்தினைக் கண்டு பூசித்த பெருமையினை யுடையது. தாம் பூசை புரியும்போது கம்பா நதி பெருக்கெடுத்து வர, அம்மையார் அன்பின் மிகுதியால் நடுங்கி இறைவனைத் தழுவிக் கொண்டமையால் கோயில் **ஏகம்பம்** என்று அழைக்கப்படலாயிற்று. (கம்பம் - நடுக்கம்). அம்மையார் வளைக்கையால் நெருக்கி இறுகும்படி தழுவ, அப்போது இறைவன் நெகிழ்ந்து, தம் திருமேனியைக் குழைந்து காட்டி, வளைத்தழும்பும், தனச் சுவடும் பெற்றுத் **தழுவக் குழைந்த நாதராகக்** காட்சியருளினர்.

வேதங்களாகிய ஒற்றை மாமரத்தின் நிழலில் இறைவன் இருத்தலின் இத்தலம் **ஏகாம்பரம்** எனவும் பெயர் பெறும். ஏகம் - ஒன்று ; ஆம்ப்ரம் - மாமரம்.

காசி, காஞ்சி என்ற முக்கிய தலங்களுள் காஞ்சியே இறைவனுக்கு என்றும் உவப்பைத்தருவது. இது காரணமாகச் சிரசாகிய இத்தலத்தில் இறந்தவர்களின் உடல் வேகும்பொழுது தலை வெடிப்பதில்லை. இத்தலம் தியானிக்க முத்தி அளிக்க வல்லதும், ஓர் இரவு தங்கித் தரிசிக்க பெரும் பயன் தருவதும் ஆகும்.

திருவெற்றியூரில் சபதம் பிழைத்த காரணமாகக் கண்ணிழந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் "ஆலந்தான் உகந்து அமுது செய்தானை" என்ற திருப்பதிகம் பாடி இடக்கண் பெற்றதும், திருக்குறிப்புத்தொண்ட நாயனுர் தொண்டு செய்து திருவடிப் பேறு அடைந்ததும், சாக்கிய நாயனுரும், ஐயடிகள் காடவர் கோன் நாயனுரும் பேறு பெற்றதும் இத்தலமேயாகும்.

இத்தலத்துள் பிரமன் பூசித்த **வெள்ளக் கம்பரும்,** (தெற்கில்) மாயவன் பூசித்த **கள்ளக் கம்பரும்** (108 சிவலிங்கத்திற்கு மூன்ருவது), உருத்திரன் பூசித்த **நல்ல கம்பரும்** (நிலாத்திங்கள் துண்டப் பெருமானுக்கு வடபுறம்) கோயில்கொண்டெழுந்தருளியுள்ளனர். ஏகம்பத்தினுள் கொடிமரத்தின்முன் முன்னூழியில் தேவர்களைச் சமிதையாகக்கொண்டு சிவபெருமான் வேள்வி செய்த **திருக்கச்சி மயானம்** என்னும் திருக்கோயிலும், ஆயிரக்கால் மண்டபத்தின் முன்புறம் **விகட சக்கர விநாயகர்** ஆலயமும் உள்ளன.

இங்குக் காமாட்சியம்மையார் எழுந்தருளிய திருக்கோயில் * **காமக்கோட்டம்** எனப்படும். இங்கு அம்மையார் ஏகாம்பர நாதரால் இருநாழி நெல் பெற்று முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்து உலகுயிர்களைக் காத்து வந்தார்.

"எண்ண ரும்பெரு வரங்கள்முன் பெற்றங்கு
எம்பி ராட்டிதம் பிரான்மகிழ்ந் தருள
மண்ணின் மேல்வழி பாடுசெய் தருளி
மனைய றம்பெருக் குங்கரு ணையினல்

* இக்காமக்கோட்டத்தில் இருந்த அம்பிகையின் உற்சவ முகூர்த்தமே தற்பொழுது தஞ்சையில் மேலராச வீதியின்கண் எழுந்தருளியிருக்கும் **ஸ்ரீ பங்காரு காமாட்சியம்மன்** என்பர். இம்முகூர்த்தம் மகம்மதியர் ஆட்சியில் சிவப்பிராமணர்களால் தஞ்சைக்கு எடுத்துச்செல்லப்பெற்றது: இன்றும் இச்சந்நிதியில் மூலத்தானத்தில் எழுந்தருளியிருக்கும் முகூர்த்தம் இதுவேயாகும்; சிலாவுருவம் கிடையாது.

காஞ்சி மாநகரில் உள்ள எல்லாச் சிவாலயங்களிலும் தனியாக அம்மன் சந்நிதி இல்லை; இக்காமக்கோட்டமே பொதுவாக அம்மன் சந்நிதியாகும்.

நண்ணு மன்னுயிர் யாவையும் பல்கு
நாடு காதலின் நீடிய வாழ்க்கை
புண்ணி யத்திருக் காமக்கோட் டத்துப்
பொலிய முப்பதோ டிரண்டறம் புரக்கும்''

உமாதேவியார் உலகினுக்குத் தாம் வந்ததை அறிவிக்கும் பொருட்டு, ஆண்டுக்கு ஒருமுறை முச்சுடர்போல் **மூன்று நீல மலர்கள்** மலரும் அற்புதம் உடையது காமக்கோட்டம். இதன் பக்கத்தில் **உலகாணித் தீர்த்தம்** என்ற ஒரு தடாகம் உளது; அற்புதங்கள் பலவுங்கொண்டுள்ளது. ஆதிசங்கரர் கோயிலும் இங்குளது. வெள்ளிக்கிழமை மிக விசேடம்.

இறைவன்: **ஏகாம்பரநாதர்.**
அம்மை: **காமாட்சியம்மையார்.**

## 2. கச்சி மேற்றளி

இத்தலம் கச்சியேகம்பத்திற்கு மேற்கில் ஒரு கல் தொலைவில் உள்ளது. இது திருமேற்றளி, காஞ்சிமேற்றளி எனவும் வழங்கப்பெறும் (மேல் - மேற்கு. தளி - கோயில்)

சிவசாரூபம் எய்தப் பெருந்தவம் புரிந்து வந்த திருமால், ஆளுடைய பிள்ளையாரின் திருப்பதிகத்தைக் கேட்டதன் பயனால் சிவபெருமான் திருவருளின் வழி அதனைப் பெற்றார் என்பது வரலாறு. இத்தலம் உருத்திரர்கள் பூசித்த நூற்றுப்பதினெட்டுத் தலங்களிலும் முதன்மையானது.

திருமால் திருஞானசம்பந்தரின் பதிகத்தைக் கேட்டு உள முருகிச் சிவலிங்க வடிவமாகிய **'ஓத உருகீசுரர்'** என்ற திருப்பெயருடன் இங்கு எழுந்தருளியுள்ளார். இஃது ஒரு தனி சந்நிதியாகும்.

இறைவன்: **மேற்றளிநாதர்.**
அம்மை: **காமாட்சியம்மையார்.**

திருக்கச்சி எல்லையுள் முருகப்பெருமான் எழுந்தருளிய **குமரக்கோட்டம்** என்னும் திருக்கோயிலும் உள்ளது. இங்குத் தான் முருகக் கடவுளின் திருவருளால் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் கந்தபுராணம் பாடி முடித்தனர்.

## 3. திருஓண காந்தன் தளி

இத்தலம் கச்சி ஏகம்பத்திற்கு மேற்கில் சர்வ தீர்த்தத்தி லிருந்து சிறிது வடமேற்காக அரைகல் தொலைவில் உள்ளது. **ஓணன், காந்தன்** என்ற அசுரர்கள் இருவரும் பூசித்தமையால் இத்தலம் இப்பெயர் பெற்றது. இரண்டு சந்நிதிகள் தனித் தனியாய்த் தனிப் பிரகாரத்துடன் ஒரே ஆலயத்துள் அமைந் துள்ளன. "அருளிச் செய்யீர் தளியுளீரே" என்ற பன்மைகள் இக்குறிப்பினை உடையன போலும்! சலந்தரன் பூசித்த மூர்த்தி தென்புறம் தனி ஆலயத்தில் உள்ளது.

இங்கு ஆரூடை நம்பிகள் பதிகத்திற்கிரங்கிய இறைவன் சந்நிதியின் முன்புறமுள்ள மாமரத்தினின்றும் பொன் உதிர்ந்த தாக ஐதீகம்.

இறைவன் : **ஓணேசுவரர் – காந்தேசுவரர்.**
அம்மை : **காமாட்சி அம்மையார்.**

## 4. திருக்கச்சி அனேகதங்காவதம் :

இத்தலம் திருவேகம்பத்திற்குத் தென்மேற்கில் புத்தேரித் தெருவுக்கு மேற்கே சுமார் ஒருகல் தொலைவில் வயல் வெளியில் உள்ளது. இங்கு விநாயகர் குபேரன் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றனர். (அனேகதம் - யானை.)

இங்கு, விநாயகர் இறைவனை **அநேகபேச்சுரர்** என்ற திரு நாமமிட்டு வழிபட்டுப் பேறுபெற்று **வல்லபையைத்** திருமணம் புரிய வரம் பெற்றனர். இத்தலத்தில் விநாயகர் சிவலிங்க வழிபாடு செய்தமையின், இது எல்லாவற்றிலும் சிறந்ததாகும்.

இறைவன் : **அநேகதங்காவதேசர்.**
அம்மை : **காமாட்சி அம்மையார்.**

## 5. திருக்கச்சி நெறிக் காரைக்காடு

இத்தலம் காஞ்சிமாநகரத்தில் கீழக் கோடியில், ஆடிசன் பேட்டைக் கடைத்தெருவிலிருந்து வடகிழக்கில் சுமார் $1\frac{1}{2}$ கல் தொலைவில் உள்ளது. காரைமரம் அடர்ந்த காடாக இருந்த தால் இப்பெயர் பெற்றது. இதற்குத் திருக்காலிமேடு, சத்திய விரதம், இந்திரபுரம் எனப் பல பெயர் வழங்கப்பெறும்.

இத்தலத்துள் இந்திரனும் புதனும் வழிபட்டுப் பேறு பெற்றனர். இங்கு இந்திர தீர்த்தம் மிக விசேடம்; புதன் கிழமை நீராடுதல் மிகச் சிறப்பு.

இறைவன் : **சத்தியவிரதீசர் — காரைத்திருநாதர்.**
அம்மை : **காமாட்சி அம்மையார்.**

## தீர்த்தங்கள்

இத்தலத்துள் படிந்து நீராடியவரது தொல்வினைகள் எல்லாவற்றையும் போக்கி இன்பந்தரும் புண்ணிய தீர்த்தங்கள் மிகப் பலவுண்டு. அவற்றுள் மலைபோலக் குவிந்த பாவங்களைப் போக்கி இன்பத்தையே தரும் **புண்ணிய தீர்த்தமும்,** வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும் **இட்ட சித்தி தீர்த்தமும்,** எல்லாவித நன்மையையும் தரும் **மங்கல தீர்த்தமும்,** தேவர்களது நீண்ட காவலையுடைய **காப்புடைத் தீர்த்தமும்,** மூவுலகங்களிலுமுள்ள எல்லாத் தீர்த்தங்களும் ஒருங்குகூடி இலங்கும் **சர்வ தீர்த்தமும்,** உலகம் தன்வடிவாய் விளங்கப் பெற்ற **உலகாணித் தீர்த்தமும், சிவகங்கைத் தீர்த்தமும், கம்பாநதித் தீர்த்தமும்** மிகச் சிறந்தன ஆகும்.

காஞ்சி மாநகரம் தன் எல்லையுள் கணக்கிறந்த பதிகளைக் கொண்டு விளங்குகின்றது. இந்நகரின் பெருமையினைக் கந்த புராணம், காஞ்சிப் புராணம் முதலிய புராணங்களாலும், திருத்தொண்டர் புராணம்—திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணத்தாலும் நன்கு அறியலாகும்.

இந்நகரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் மிகப் பல உள. அவற்றுள் சில கீழே வருமாறு:—

## கரிகாலனும் காஞ்சிபுரமும்

கரிகாலன் இமயஞ் செல்லும்பொழுது வேடன் ஒருவனால் காஞ்சிமாநகரின் பெருமை முதலியவற்றை நன்கு அறிந்து, அந்நகரத்தைத் தனது ஆக்கி, அதனை நான்கு காத தூரம் சுற்றெல்லை உடையதாக விரிவுப்படுத்திக் குன்றுபோன்ற மதிலை

எழுப்பிப் பல மக்களை குடியேற்றினன். இச்செய்திகளைப் பின் வரும் திருக்குறிப்புத்தொண்ட நாயனர் புராணச் செய்யுளால் அறியலாகும்.

என்றும் உள்ளஇந் நகர்கலி யுகத்தில்
இலங்கு வேற்கரி கால்பெரு வளத்தோன்
வன்தி றற்புலி இமயமால் வரைமேல்
வைக்க ஏகுவோன் தனக்கிதன் வளமை
சென்று வேடன்முன் கண்டுரை செய்யத்
திருந்து காதநான் குட்பட வகுத்துக்
குன்று போலுமா மதில்புடை போக்கிக்
குடியி ருத்தின கொள்கையின் விளங்கும்.

கரிகாற்சோழனது ஆட்சிக் காலம் கி. மு. 60 முதல் கி. மு. 20-க்கு உட்பட்டதாக இருக்கலாம் என்பர் ஆராய்ச்சியாளர்.

இக்கரிகாலன் சாத்தன் அருளால் காஞ்சியில் செண்டு பெற்ருன் என்பதையும், அச்செண்டுகொண்டு இமயத்தைச் செண்டால் அடித்தான் என்பதையும்,

"கச்சி வளைக்கைச்சி காமக்கோட் டங்காவல்
மெச்சி யினிதிருக்கு மெய்ச்சாத்தன்—கைச்செண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
செம்பொற் கிரிதிரித்த செண்டு"

எனவரும் சிலப்பதிகாரம் இந்திரவிழவூர் எடுத்த காதை உரை மேற்கோளினல் அறியலாம்.

## காஞ்சிபுரமும் பெரும்பாணுற்றுப் படையும்

**சோலையினையும்**, திண்ணிய தேர்கள் பல்கால் ஓடிக் குழித்த நெடிய **தெருவினையும்**, கெடுதல் அறியாத வலி மிகுகின்ற புகழினையுடைய **படையினையும்**, பண்டங்கள் விற்றலும் கொள்ள லும் பொருந்தி அவ்விடத்து நெருங்கின பல **குடியினையும் கடை**

**யினையும்**, உலகத்துக் கொடுப்பாரைக் கொடாமல் தடுத்த பரிசிலர்க்கு அடையாத **வாயிலினையும்**, காவற்காடு சூழ்ந்த **பக்கத்தினையும்**, செங்கலாற் செய்யப்பட்டு உயர்ந்த புறப்படை வீட்டைச் சூழ்ந்த **மதிலினையும்**, பல சமயத்தாரும் தொழும்படி எடுத்த விழாக்களாலே ஏனை நகர்களின் மேலான **வெற்றியினையும்** கொண்டு, நச்சிச் சென்ருேர்க்கு ஏமம் ஆகிய **மூதூர் கச்சி** [*397—421* அடிகள்] எனக் காஞ்சியைக் குறித்துப் பெரும்பாணற்றுப்படையில் கூறப்பெற்றுளது.

## காஞ்சியின் பழமை

**இயூன் சங்** என்ற சீன யாத்திரிகன் கி. பி. 640-ல் காஞ்சி மாநகரத்துக்கு வந்தவன், புத்தர் கி. மு. 5-ம் நூற்ருண்டில் காஞ்சிபுரத்துக்கு வந்து சமய உண்மைகளை உரைத்தார் என்றும், அசோகன் தூபிகள் பல எடுப்பித்து, பௌத்த மதக் கொள்கைகளைப் பரப்பினுன் என்றும் கூறியுள்ளான். வடநாட்டிலிருந்த நாலந்தா பல்கலைக் கழகத்தில் சிறந்த பேராசிரியராகத் திகழ்ந்த **தர்மபாலர்** காஞ்சி மாநகரத்தவர் என்று சொல்லப்பெறுகிறது. கி. பி. 4, 5-ம் நூற்ருண்டுகளில் காஞ்சிபுரத்தில் ஒரு வடமொழிக் கல்லூரி இருந்ததாக அறிகிருேம். கதம்ப அரசர் மரபைத் தோற்றுவித்த **மயூரசன்மன்** காஞ்சியில் இருந்த இவ்வடமொழிக் கல்லூரியில் (இருபிறப்பாளர்தம் கடிகாவில்) படித்ததாகச் சொல்லப்பெறுகிறது. அப்பர் சுவாமிகளும் **'கல்வியிற் கரையிலாத காஞ்சிமா நகரம்'** என்றும் குறித்துள்ளார்.

## ஐயடிகள் காடவர்கோன்

இவர் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர்; வடமொழியிலும் தென்மொழியிலும் புலமைசான்றவர். கி. பி. 550—575-ல் காஞ்சிபுரத்தில் அரசாண்ட பல்லவ அரசராகிய மூன்ரும் சிம்ம வர்மனே இந்நாயனுர் ஆவர் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். இவர் **க்ஷேத்திர வெண்பா** என்ற ஒரு நூலைப் பாடியுள்ளார். இந்நூல் 11-ம் திருமுறையில் சேர்க்கப்பெற்

றுள்ளது; 24 பாடல்களைக்கொண்டது. அவற்றுள் காஞ்சி புரத்தைப்பற்றிய பாடலினைப் பின்னர் காண்க.

## முதலாம் மகேந்திரவர்மன்

இவன் கி. பி. 615-630-ல் காஞ்சியில் ஆண்ட பல்லவ அரசன். இவன் முதலில் சமண சமயச்சார்பினனாய் இருந்தான். அக்காலத்தில் **மருணீக்கியார்** சமணராகித் தருமசேனர் ஆனார்; நம்பர் அருளால் சூலைநோய் காரணமாகத் திருவதி கையை அடைந்து சைவஞ் சார்ந்தார்; திருநாவுக்கரசரானார். இதனை அறிந்த சமணர்கள் மகேந்திர பல்லவனைக்கொண்டு திருநாவுக்கரசரை நீற்றறையிலிட்டும், நஞ்சு கலந்த பாற் சோறருத்தியும், யானையை ஏவியும் துன்புறுத்தினர். இவ் வாதனைகளை யெல்லாம் திருநாவுக்கரசர் இறைவனருளால் வென்றார். இறுதியாகச் சமணர்கள் திருநாவுக்கரசரைக் கல்லிற் பிணித்துக் கடலிலிட்டனர். இறையருளால் கல்லே தெப்பமாக மிதந்து திருப்பாதிரிப்புலியூர்ப் பக்கம் [கரை யேறவிட்ட குப்பத்தில்] கரையேறினார். இவற்றை யறிந்த குணபரன் என்னும் மகேந்திரவர்மன் சைவ சமயத்தைச் சார்ந்தான்; சமணப் பள்ளிகளை இடித்துத் திருவதிகையில் **குணதரவீச்சரம்** எனும் கோயிலைக் கட்டினன்; தானும் சைவனானன். இவன் சைவன் ஆன செய்தியைப் பின்வரும் திருச்சிராப்பள்ளி வடமொழிக் கல்வெட்டின் தமிழ் மொழி பெயர்ப்பினின்று அறியலாகும் :—

"லிங்கத்தை வழிபடும் குணபரன் என்னும் அரசன் இந்த லிங்கத்தினால் புறச்சமயத்திலிருந்து திரும்பிய ஞானம் உலகத்தில் நீண்டநாள் நிலைநிற்பதாக" என்பது.

## முதலாம் நரசிம்மவர்மன்

இவன் மேற்குறித்த மகேந்திரவர்மனின் மகன்; கி. பி. 630-668-ல் காஞ்சியில் ஆண்ட பல்லவப் பேரரசன். இவன் காலத்தில் மேலைச்சளுக்கியரோடு பெரும்போர் நிகழ்ந்தது.

சளுக்கிய அரசனுகிய இரண்டாம் புலிகேசி என்பவனே இவ்வரசன் முறியடித்துத் துறத்தினுன்; அவனது தலைநகராகிய **வாதாவி**யைக் கைப்பற்றினுன்; அத்தொன்னகரைத் துகளாக்கினுன். இப்போரில் பல்லவர்க்குப் படைத்தலைவராக இருந்தவர் **பரஞ்சோதியார்** (சிறுத்தொண்டர்) என்று சேக்கிழார் சுவாமிகள் சிறுத்தொண்ட நாயனுர் புராணத்தில் பின்வருமாறு கூறியுள்ளார் :—

"மன்னவற்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாவித்
தொன்னகரந் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்துப்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனஎண் ணிலகவர்ந்தங்(கு) இகலரசன் முன்கொணர்ந்தார்"

## பரமேசுவரவர்மன்

இவன் முதலாம் நரசிம்மவர்மனின் பேரன்; கி. பி. 670–685-ல் காஞ்சியில் ஆண்டவன்; பரம சிவபக்தன்; பல சிவன் கோயில்களைக் கட்டினுன்; கூரம் என்ற சிற்றூரில் சிவன் கோயில் ஒன்றைக் கட்டினுன்; அதற்கு **வித்யாவிநோத பல்லவ பரமேசுவர கிரகம்** என்ற பெயரை வைத்தான். இவன் மகாபலிபுரத்தில் கணேசர் கோயில் ஒன்றைக் கட்டினுன். அதில் வெட்டுவித்த பதினெரு வடமொழிச் சுலோகங்கள் அரசனுக்கும் சிவபெருமானுக்கும் பொருந்தும்படி சிலேடையாக அமைந்தவையாம். இவ்வரசன் தலைமீது சங்கரன் எப்போதும் குடிகொண்டிருக்கப் பெற்றுள்ளான் என்று ஒரு சுலோகத்தில் காணப்பெறுகிறது.

"கண்மணிகளைக்கொண்டு சிவலிங்க வடிவாக அமைக்கப்பட்ட முடியைத் தலையில் தரித்திருந்தான்" என்பது அச்சுலோகத்தின் பொருள். (கண்மணி—உருத்திராட்சம்)

## இராசசிம்மன்

இவன் பரமேசுவரவர்மனுடைய மகன்; கி. பி. 685–705-ல் ஆண்ட காஞ்சிப் பல்லவ அரசன். இவனே காஞ்சிமா

நகரில் கயிலாசநாதர் கோயிலைக் கட்டியவன். அக்கோயிலிற் காணும் கல் வெட்டுக்களில் இவன் "ரிஷப லாஞ்சனன்; ஸ்ரீ சங்கர பக்தன்; ஸ்ரீ ஆகமப் பிரியன்; சிவ சூடாமணி; சைவ சித்தாந்தத்தில் பேரறிவுடையவன்; சைவ நெறியில் நடந்து மலத்தை யெல்லாம் ஒழித்தவன்; **வானொலியைக் கேட்டவன்;** சைவ சித்தாந்தப்படி நடப்பவன்; மகாதேவனுக்கு அடியவன்" என்று புகழப் பெறுகிறான். இவ்வரசன் காலத்தவரே திருநின்றவூர்ப் **பூசலார் நாயனார்** என்பவர்.

இராசசிம்மன் கைலாசநாதர் கோயிலைக் கட்டிக் கும்பாபிஷேகம் வைத்துக் கொண்ட நாளும், பூசலார் மனக்கோயில் கட்டிக் கடவுள் மங்கலம் செய்ய நினைத்த நாளும் ஒன்றாயிற்று. ஆகலின் சிவபெருமான் முன்னாள் இரவில் அரசன் கனவிற் றோன்றித் தாம் பூசலார் கட்டிய கோயிலில் எழுந்தருளப் போவதாகவும், அரசன் கடவுள் மங்கலத்துக்கு வேறு நாளைக் குறித்துக் கொள்ளலாம் என்றும் அருளினார். 'இறைவன் கனவிற் கூறினார்' என்ற செய்தியையே, கல் வெட்டில் "அரசன் வானொலி கேட்டான்" என்று கூறப்பட்டுள்ளது என்று ஆராய்ச்சியாளர் கருதுகிறார்கள்.

இராசசிம்மன் கட்டிய **கயிலாசநாதர் கோயில்** காஞ்சிமாநகரத்தில் மேற்றிசையில் இருக்கிறது. இது கட்டப்பெற்ற காலத்தில் நகரத்தின் தெருக்களுக்கு இடையில் இருந்தது என்று கல் வெட்டுக்களினின்று அறியலாம்.

"கயிலாசநாதர் கோயில் பல்லவரது சிற்பக் கலையை உலகத்திற்கு அறிவிக்க எழுந்த **சிற்பக்கலைக்கூடம்**" என்னலாம். இக்கோயில் கருப்பக்கிரகத்தில் ஒரு தனிச் சிறப்பு உண்டு: "இறையிடத்தைச் சுற்றி வரும் திருச்சுற்று ஏறத்தாழ இரண்டடி அகலம் உடையது. இடது பக்கம் உள்ள புழையில் படுத்து நுழைந்து ஊர்ந்து வலப்பக்கம் தரையை ஒட்டினாற்போல் உள்ள சிறிய வழியே வெளி வருதல் வேண்டும்; இங்ஙனம் இறைவனைத் தரிசிப்பவர் கருவிற் புகார்" என்று கூறப் பெறுகிறது.

## மூன்றும் நந்திவர்மன்

இவன் கி. பி. 825–850-ல் ஆண்ட பல்லவப் பேரரசன். இவன் நந்திக் கலம்பகத்தில் "**கழல் நந்தி**" என்றும், "பல்லவர் கோள் **அரி**" என்றும் கூறப் பெறுவதாலும், யாப்பருங்கல விருத்தியுரையில் "கச்சியார் கோ**சிங்கன்**" என்றும் "கோன் **நந்தி**" என்றும் கூறப் பெறுதலினின்றும் இவ்வரசனே "காடவர் கோன் **கழற்சிங்கன்**" என்ற நாயனாராக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். இக் கழற்சிங்கரைச் சுந்தரர்,

"கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்"

என்று திருத்தொண்டத் தொகையில் பாடியுள்ளார்.

இந்நந்திவர்மன் காலத்தில் திருப்பதியம் விண்ணப்பம் செய்வார் உள்ளிட்ட பல பணி செய்வார்க்கு நிபந்தம் விடப் பெற்றதாகத் திருவல்லம் கோயில் சாஸனத்தால் அறியலாம்.

## காஞ்சியைப்பற்றி வரும் பாடல்கள்

ஏரி யிரண்டுஞ் சிறகா வெயில்வயிறுக்
காருடைய பீலி கடிகாவா—நீர்வண்ணன்
அத்தியூர் வாயா அணிமயிலே போன்றதே
பொற்றேரான் கச்சிப் பொலிவு. 1

மலிதேரான் கச்சியு மாகடலுந் தம்முள்
ஒலியும் பெருமையு மொக்கும்—மலிதேரான்
கச்சி படுவ கடல்படா கச்சி
கடல்படுவ வெல்லாம் படும். 2

ஆடவர்க ளெவ்வா றகன்றொழிவார் வெஃகாவும்
பாடகமு மூரகமும் பஞ்சரமா—நீடியமால்
நின்றான் இருந்தான் கிடந்தான் இதுவன்றோ
மன்றூர் மதிற்கச்சி மாண்பு. 3

பூண்டாங்கு கொங்கை பொரவே குழைபொருப்பும்
தூண்டாத தெய்வச் சுடர்விளக்கும்—நாண் தாங்கு
வண்மைசால் சான்றவரும் காஞ்சி வளம்பதியின்
உண்மையால் உண்டிவ் வுலகு. 4

தொல்லை மறைதேர் துணைவன்பா லாண்டுவரை
எல்லை யிருநாழி நெற்கொண்டோர்—மெல்லியலாள்
ஓங்குலகில் வாழும் உயிரனைத்தும் ஊட்டுமால்
ஏங்கொலிநீர்க் காஞ்சி யிடை. 5

**— தண்டியலங்கார மேற்கோள்**

" வையக மெல்லாங் கழனியா வையகத்துச்
செய்யகமே நாற்றிசையின் தேயங்கள் செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள் சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாங் கட்டியுள்
தானேற்ற மாய சருக்கரை மாமணியே
ஆனேற்ருன் கச்சி யகம்." 6

**—யாப்பருங்கலக்காரிகை மேற்கோள்**

இத்தகைய சிறப்பியல்கள் வாய்ந்த காஞ்சி மாநகரினை யடைந்து, ஆங்குள்ள பல தீர்த்தங்களிலும் நீராடித் திருவேகம்பம் முதலான பல திருக்கோயில்களிலும் இறைவனை வழிபட்டு, அவனது திருவருளைப்பெற்று இன்பநிலை எய்துவதே கற்றறிந்த மாந்தர் கடன்.

**உலகெலாம் சிவநாமமே பரவுவதாக.**

உ

சிவ சிவ

செந்திலாண்டவன் துணை

# திருக்கச்சியேகம்பம்

## தேவாரத் திருப்பதிகங்கள்

## திருஞானசம்பந்த சுவாமிகள்

## தேவாரம்

**பண் - மேகராகக்குறிஞ்சி** [1-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

**வெ**ந்தவெண் பொடிப்பூசு மார்பின்விரி
நூலொருபால் பொருந்தக்
கந்தமல்கு குழலியோடுங் கடிபொழிற்
கச்சி தன்னுள்
அந்தமில் குணத்தா ரவர்போற்ற
அணங்கினொ டாடல்புரி
எந்தை மேவிய ஏகம்பந்
தொழுதேத்த இடர்கெடுமே. 1

வரந்திகழும் அவுணர் மாநகர்மூன்
றுடன்மாய்ந் தவியச்
சரந்துரந் தெரிசெய்த தாழ்சடைச்
சங்கரன் மேயஇடம்

---

1. வெண்பொடி - திருவெண்ணீறு. கந்தமல்கு குழலி – இயற்கை வாசனை நிறைந்த கூந்தலையுடைய உமாதேவியார். கச்சி - காஞ்சிபுரம். அந்தமில் குணத்தாரவர் - சிவனடியார்கள். அணங்கு - உமாதேவியார். ஏகம்பம் - ஏகாம்பரநாதர் எழுந்தருளிய தலம்.

2. அவுணர் - இங்குத் திரிபுரர். அவிய – அணைய. சங்கரன் - சுகத்தைச் செய்பவன். துரந்து - செலுத்தி. மாதவி - குருக்கத்தி. குரா - ஒருவகை மரம். மரவம் - வெண்கடம்பு.

TRIPLICANE P.O. MADRAS
2 AUG 195

குருந்தம் மல்லிகை கோங்குமா
 தவிநல்ல குராமரவம்
திருந்துபைம் பொழிற்கச்சி யேகம்பஞ்
 சேர இடர்கெடுமே. 2

வண்ணவெண் பொடிப்பூசு மார்பின்
 வரியர வம்புனைந்து
பெண்ணமர்ந் தெரியாடல் பேணிய
 பிஞ்ஞகன் மேயவிடம்
விண்ணமர் நெடுமாட மோங்கி
 விளங்கிய கச்சிதன்னுள்
திண்ணமாம் பொழில்சூழ்ந்த ஏகம்பஞ்
 சேர இடர்கெடுமே. 3

தோலும்நா லுந்துதைந்த வரைமார்பிற்
 சுடலைவெண் ணீறணிந்து
காலன்மாள் வுறக்காலாற் காய்ந்த
 கடவுள் கருதுமிடம்
மாலைவெண் மதிதோயும் மாமதிற்
 கச்சி மாநகருள்
ஏலநாறிய சோலைசூழ் ஏகம்பம்
 ஏத்த இடர்கெடுமே. 4

தோடணிம் மலர்க்கொன்றை சேர்சடைத்
 தூமதி யம்புனைந்து
பாடல்நான் மறையாகப் பல்கணப்
 பேய்க ளவைசூழ

---

3. பெண் அமர்ந்து - உமாதேவியை ஒருபால் விரும்பி. பிஞ்ஞகன் - தலைக்கோலமுடையவன்; இறைவன். விளங்கிய கச்சி - (முத்தி நகரத்துள் சிறந்து) விளங்கிய காஞ்சி.

4. தோல் - இங்கு யானைத்தோல். காலன் - இயமன். ஏலம் - வாசனை. நாறுதல் - வீசுதல்.

5. தோடு - இதழ். தூமதி - பிறைச்சந்திரன். பாடனுன் மறையாக - நான்மறை பாடலாக. வெண்டலை - பிரம கபாலம். சேடர் -

வாடல்வெண் டலையோ டனலேந்தி
மகிழ்ந்துட னாடல்புரி
சேடர்சேர் கலிக்கச்சி யேகம்பஞ்
சேர இடர்கெடுமே. 5

சாகம்பொன் வரையாகத் தானவர்
மும்மதில் சாயவெய்து
ஆகம்பெண் ணொருபாக மாக
அரவொடு நூலணிந்து
மாகந்தோய் மணிமாட மாமதிற்
கச்சி மாநகருள்
ஏகம்பத் துறையீசன் சேவடி
யேத்த இடர்கெடுமே. 6 - 7

வாணிலா மதிபுல்கு செஞ்சடை
வாளர வம்அணிந்து
நாணிடத் தினில்வாழ்க்கை பேணி
நகுதலையிற் பலிதேர்ந்(து)
ஏணிலா அரக்கன்றன் நீள்முடி
பத்தும் இறுத்தவனூர்
சேணுலாம் பொழிற்கச்சி யேகம்பஞ்
சேர இடர்கெடுமே. 8

---

உலகம் அழியத் தான்மட்டும் எஞ்சி நிற்பவர்; இறைவர். கலி - ஆரவாரம். சேர - அடைய; அல்லது தியானிக்க.

6. சாகம் - வில். சாபம் என்பது எதுகை நோக்கிச் சாகம் என ஆயிற்று. பொன்வரை - மேருமலை. தானவர் - திரிபுரர்; அவர் தாரகாட்சன், கமலாட்சன், வித்தியுன்மாலி என்போர். மும்மதில் - பொன், வெள்ளி, இரும்பு இம்மூன்றினால் ஆய மதில். ஆகம் - உடல். மாகம் - ஆகாயம். மா - பெரிய.

8. வாணிலா (வாள் நிலா) - ஒளி பொருந்திய பிறைச்சந்திரன். புல்கு - தழுவிய; அணிந்த. நாண் - நாணம். இடத்தினில் - இடப் பாகத்தினில். இல்வாழ்க்கை - இங்கு உமாதேவியார். நகுதலை - மண்டையோடு. பலி - பிச்சை. ஏண் - உறுதி. அரக்கன் - (இங்கு) இராவணன். இறுத்தவன் - நசுக்கிய இறைவன். சேண் - ஆகாயம். பொழில் - சோலை.

பிரமனுந் திருமாலுங் கைதொழப்
 பேரழ லாயபெம்மான்
அரவஞ் சேர்சடை யந்தணன்
 அணங்கினொ டமருமிடம்
கரவில்வண் கையினர்கள் வாழ்கலிக்
 கச்சி மாநகருள்
மரவஞ்சூழ் பொழிலேகம் பந்தொழ
 வல்வினை மாய்ந்தறுமே. 9

குண்டுபட் டமணா யவரொடுங்
 கூறைதம் மெய்போர்க்கும்
மிண்டர் கட்டிய கட்டுரை
 யவைகொண்டு விரும்பேன்மின்
விண்டவர் புரம்மூன்றும் வெங்கணை
 யொன்றினால் அவியக்
கண்டவன் கலிக்கச்சி யேகம்பங்
 காண இடர்கெடுமே. 10

ஏரினார் பொழில்சூழ்ந்த கச்சி
 யேகம்பம் மேயவனைக்
காரினார் மணிமாட மோங்கு
 கழுமல நன்னகருள்

---

9. பேரழலாய பெருமான் - அக்கினி வடிவமாக எழுந்தருளிய சிவ பெருமான். அந்தணன் - கருணை வடிவுடையவன்; சிவபெருமான் கரவு இல் - வஞ்சகம் இல்லாத. வண் கையினார்கள் - வள்ளல்கள். மரவம் - குங்கும மரம். வல்வினை - முற்பிறவியில் தொடர்ந்த தீவினை. அறும் - அடியோடு கெட்டொழியும்.

10. குண்டுபட்டு - உடல் பருத்து. அமண் - சமண். கூறை - துணி. மிண்டர் - புறச்சமயிகள். கட்டிய கட்டுரை - பொய் வார்த்தைகளை. விரும்பேன்மின் - நம்பாதீர்கள். விண்டவர் - பகைவர்; திரிபுரர். வெங்கணை – இங்குச் சிரித்தலினால் நேர்ந்த அக்கினிப் பொறி. அவிய - அழிந்து போகும்படி.

11. ஏரின் ஆர் பொழில் - அழகு நிறைந்த சோலை. காரின் ஆர் - மேகங்கள் கவிந்த. கழுமலம் - சீகாழி. பரவிய - துதித்த. வல்லவர் - துதிக்கவல்லவர். சீர் - சிறப்பு.

பாரினுர் தமிழ்ஞான சம்பந்தன்
பரவிய பத்தும்வல்லார்
சீரினுர் புகழோங்கி விண்ணவ
ரோடுஞ் சேர்பவரே. 11

திருச்சிற்றம்பலம்

---

**பண் - இந்தளம்** *[2-ஆம் திருமுறை]*

திருச்சிற்றம்பலம்

மறையானை மாசிலாப் புன்சடை மல்குவெண்
பிறையானைப் பெண்ணெடா ணுகிய பெம்மானை
இறையானை யேர்கொள்கச் சித்திரு வேகம்பத்
துறைவானை யல்லதுள் காதென துள்ளமே. 1

நொச்சியே வன்னிகொன் றைமதி கூவிளம்
உச்சியே புனைதல்வே டம்விடை யூர்தியான்
கச்சியே கம்பம்மே யகறைக் கண்டனை
நச்சியே தொழுமின்நும் மேல்வினை நையுமே. 2

பாராரு முழவமொந் தைகுழல் யாழொலி
சீராலே பாடலா டல்சிதை வில்லதோர்
ஏரார்பூங் கச்சியே கம்பனை யெம்மானைச்
சேராதார் இன்பமா யந்நெறி சேராரே. 3

---

1. மறையானை - வேதங்களைக் கூறியவனை. புன்சடை - சிறு சடாமுடி. மல்கு - நிறைந்த; தங்கிய பெண்ணெடு ஆணுகிய பெம்மான் - அர்த்தநாரீசுவரர். ஏர் - அழகு. உள்காது - (வேறு ஒருவரையும்) நினைக்காது.

2. நொச்சி - வெண் நொச்சியிலை. வன்னி-வன்னி இலை. கூவிளம்- வில்வம். கறை - விடம். நச்சி - விரும்பி. நும் - உம்முடைய. நையும் - கெடும்.

3. முழவம் - மத்தளம் மொந்தை - ஒரு வாத்தியம். சிதைவு - (எக்காலத்தும்) அழிவு. சேராதார் - அடையாதவர். 'சேராதார் நன்னெறிக்கட் சேரார்தாரே" என்பது அப்பர் தேவாரம்.

குன்றேய்க்கு நெடுவெண்மா டக்கொடி கூடிப்போய்
மின்றேய்க்கும் முகில்கள்தோ யும்வியன் கச்சியுள்
மன்றேய்க்கு மல்குசீ ரான்மலி யேகம்பம்
சென்றேய்க்குஞ் சிந்தையார் மேல்வினை சேராவே. 4

சடையானைத் தலைகையேந் திப்பலி தருவார்தம்
கடையேபோய் மூன்றுங்கொண் டான்கலிக் கச்சியுள்
புடையேபொன் மலருங்கம் பைக்கரை யேகம்பம்
உடையானை யல்லதுள் காதென துள்ளமே. 5

மழுவாளோ டெழில்கொள்சூ லப்படை வல்லார்தம்
கெழுவாளோ ரிமையாருச் சியுமை யாள்கங்கை
வழுவாமே மல்குசீ ரால்வள ரேகம்பம்
தொழுவாரே விழுமியார் மேல்வினை துன்னாவே. 6

விண்ணுளார் மறைகள்வே தம்விரித் தோதுவார்
கண்ணுளார் கழலின்வெல் வார்கரி காலனை
நண்ணுவா ரெழில்கொள்கச் சிநக ரேகம்பத்(து)
அண்ணலா ராடுகின் றஅலங் காரமே. 7

தூயானைத் தூயவா யம்மறை யோதிய
வாயானை வாளரக் கன்வலி வாட்டிய
தீயானைத் தீதில்கச் சித்திரு வேகம்பம்
மேயானை மேவுவா ரென்தலை மேலாரே. 8

---

4. மின் தேய்க்கும் - மின்னலுடன் கூடிய. சென்று ஏய்க்கும் - சென்று பொருந்தும்.

5. கடை - முன்வாசல். மூன்றும் - மனம் வாக்குக் காயம் என்ற மூன்றும். புடை - பக்கம். கம்பை - கம்பா நதி.

6. வல்லார் - இங்கு சிவன். கெழுவுதல் - பற்றிக்கொள்ளுதல்; வணங்குதல். இமையார் - தேவர்கள். உச்சி - சிரசு. துன்னா - அடையா.

7. மறைகள் வேதம் - மறைகளாகிய வேதங்கள். கழல் - வீரக் கழல். கரிகாலன் - கரிய இயமன். ஆடுகின்ற அலங்காரம் - திருக் கூத்து ஆடுகின்ற அற்புதம்.

8. வாள் அரக்கன் - இராவணன். மேவுவார் - அடைந்து வழி படுபவர். என் தலை மேலார் - என்னால் வணங்கப்படும் மேன்மையர்.

TRIPLICANE P.O. MADRAS 2 AUG 1955

நாகம்பூண் ஏறதே றல்நறுங் கொன்றைதார்
பாகம்பெண் பலியுமேற் பர்மறை பாடுவர்
ஏகம்பம் மேவியா டுமிறை இருவர்க்கும்
மாகம்பம் அறியும்வண் ணத்தவ னல்லனே. 9

போதியார் பிண்டியா ரென்றிவர் பொய்ந்நூலை
வாதியா வம்மினம் மாவெனுங் கச்சியுள்
ஆதியார் மேவியா டுந்திரு வேகம்பம்
நீதியால் தொழுமின்நும் மேல்வினை நில்லாவே. 10

அந்தண்பூங் கச்சியே கம்பனை யம்மானைக்
கந்தண்பூங் காழியூ ரன்கலிக் கோவையால்
சந்தமே பாடவல் லதமிழ் ஞானசம்
பந்தன்சொற் பாடியா டக்கெடும் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

---

யண் - கொல்லி [3-ஆம் திருமுறை]

## திருவிருக்குக்குறள்

திருச்சிற்றம்பலம்

கருவார் கச்சித், திருவே கம்பத்
தொருவா வென்ன, மருவா வினையே. 1

---

9. பூண் - ஆபரணம். தேறல் - தேன். இருவர் - பரமனும் திருமாலும். மாகம்பம் - பெரிய அக்கினித் தம்பம்.

10. போதி - அரச மரம். பிண்டி - அசோக மரம். வாதியா - வாதியாமல். உம்மேல் - உம்மிடத்து.

11. கந்தண் - (கம் + தண்) குளிர்ந்த மேகம். கலிக்கோவை - பதிகம்.

1. கரு - கருப்பம்; இது பிரமன் முதலியோரைப் படைத்தலைக் குறிக்கும். ஒருவா - நீங்காது இருக்க. மருவா - அடையா.

மதியார் கச்சி, நதியே கம்பம்
விதியா லேத்தப், பதியா வாரே. 2

கலியார் கச்சி, மலியே கம்பம்
பலியாற் போற்ற, நலியா வினையே. 3

வரமார் கச்சிப், புரமே கம்பம்
பரவா வேத்த, விரவா வினையே. 4

படமார் கச்சி, இடமே கம்பத்
துடையா யென்ன, அடையா வினையே. 5

நலமார் கச்சி, நிலவே கம்பம்
குலவா வேத்தக், கலவா வினையே. 6

கரியின் உரியன், திருவே கம்பன்
பெரிய புரமூன், றெரிசெய் தானே. 7

இலங்கை யரசைத், துலங்க வூன்றும்
நலங்கொள் கம்பன், இலங்கு சரணே. 8

மறையோன் அரியும், அறியா அனலன்
நெறியே கம்பம், குறியால் தொழுமே. 9

பறியாத் தேரர், நெறியில் கச்சிச்
செறிகொள் கம்பம், குறுகு வோமே. 10

---

2. மதியார் - சந்திரன் தவழும். நதி - கம்பா நதி. விதி - சிவாகம முறைப்படி. பதி - சிவத்தன்மை.

3. கலி - முழக்கம். பலி - பூசை; விழா.

4. கச்சிப்புரம் - காஞ்சிபுரம். பரவா - துதித்து

5. படம் ஆர் - கொடிப்படங்கள் நிறைந்த.

6. நலம் - பல நன்மைகள். கலவா - அடையா.

7. கரியின் உரியன் - யானைத்தோல் போர்த்த இறைவன்.

8. ஊன்றும் - விரலால் ஊன்றும் சரண் - பாதம்.

9. மறையோன் - பிரமனும். அனலன் - அக்கினி வடிவுடையவன்; சிவன். குறி - அடையாளம்.

10. தேரர் - ஒருவகைப் புறமதத்தார். செறிகொள் - சகல வளங்களும் பற்பல திருக்கோயில்களும் நிறைந்த. நெறியில் - முறையில்லாத.

**கொச்சை வேந்தன்**, கச்சிக் கம்பம்
மெச்சுஞ் சொல்லை, நச்சும் புகழே. 11

திருச்சிற்றம்பலம்

---

**பண் - பழம்பஞ்சுரம்** [3-ஆம் திருமுறை]

## திருவியமகம்

திருச்சிற்றம்பலம்

**பா**யுமால்விடை மேலொரு பாகனே
பாவைதன்னுரு மேலொரு பாகனே
தூயவானவர் வேதத் துவனியே
சோதிமாலெரி வேதத் துவனியே
ஆயுநன்பொருள் நுண்பொரு ளாதியே
ஆலநீழல் அரும்பொரு ளாதியே
காயவின்மதன் பட்டது கம்பமே
கண்ணுதற்பர மற்கிடங் கம்பமே. 1

சடையணிந்ததும் வெண்டலை மாலையே
தம்முடம்பிலும் வெண்டலை மாலையே
படையிலங்கையிற் சூலம தென்பதே
பரந்திலங்கையிற் சூலம தென்பதே
புடைபரப்பன பூதக ணங்களே
போற்றிசைப்பன பூதக ணங்களே
கடைகள்தோறும் இரப்பது மிச்சையே
கம்பமேவியி ருப்பது மிச்சையே. 2

---

11. கொச்சை - சீகாழி. கொச்சை வேந்தன் - திருஞான சம்பந்தர். நச்சும் புகழ் - புகழ் விரும்பி வரும்.

1. மால்விடை - பெரிய இடபம்; திருமாலாகிய இடபமுமாம். பாகன் - செலுத்துபவன்; பங்குடையவன். துவனி - ஒலி. வனி - (வன்னி) அக்கினி. நுண்பொருள் - பிரணவம்.

2. புடை - பக்கங்களில். கடைகள்தோறும் - வீடுகள்தோறும். இச்சை - விருப்பம்.

வெள்ளெருக்கொடு தும்பை மிலைச்சியே
வேறுமுன்செலத் தும்பை மிலைச்சியே
அள்ளிநீறது பூசுவ தாகமே
யானமாசுண மூசுவ தாகமே
புள்ளியாடை யுடுப்ப துகத்துமே
போனவூழி யுடுப்ப துகத்துமே
கள்ளுலாமலர்க் கம்ப மிருப்பதே
காஞ்சிமாநகர்க் கம்ப மிருப்பதே. 3

முற்றலாமை யணிந்த முதல்வரே
மூரியாமை யணிந்த முதல்வரே
பற்றிவாளர வாட்டும் பரிசரே
பாலுநெய்யுகந் தாட்டும் பரிசரே
வற்றலோடு கலம்பலி தேர்வதே
வானிரேடு கலம்பலி தேர்வதே
கற்றிலாமனங் கம்ப மிருப்பதே
காஞ்சிமாநகர்க் கம்ப மிருப்பதே. 4

வேடனாகி விசையற் கருளியே
வேலைநஞ்ச மிசையற் கருளியே
ஆடுபாம்பரை யார்த்த துடையதே
யஞ்சுபூதமு மார்த்த துடையதே
கோடுவான்மதிக் கண்ணி யழகிதே
குற்றமின்மதிக் கண்ணி யழகிதே
காடுவாழ்பதி யாவது மும்மதே
கம்பமாபதி யாவது மும்மதே. 5

---

3. தும்பை - தும்பை மலர். மிலைச்சுதல் - அணிதல். ஆகம் - உடல். மாசுணம் - பாம்பு. புள்ளி ஆடை - புலித்தோல் ஆடை. கள் - தேன். மலர்க்கம்பம் – மலரின் அசைவு.

4. முற்றல் ஆமை - முதிர்ந்த ஆமையோடு. மை - கருப்பு; விடம். பரிசு - தன்மை. வற்றல் - தசைப்பற்று இல்லாத. கற்றிலா மனம் – கல்வியறிவு அற்ற மனம், கம்பம் – நடுக்கம்.

5. விசையன் - அருச்சுனன். அஞ்சுபூதம் - பஞ்சபூதம். கண்ணி - மாலை; உமை.

இரும்புகைக்கொ டிதங்கழல் கையதே
  இமயமாமகள் தங்கழல் கையதே
அரும்புமொய்த்த மலர்ப்பொறை தாங்கியே
  ஆழியான்றன் மலர்ப்பொறை தாங்கியே
பெரும்பகல்நட மாடுதல் செய்துமே
  பேதைமார்மனம் வாடுதல் செய்துமே
கரும்புமொய்த்தெழு கம்ப மிருப்பதே
  காஞ்சிமாநகர்க் கம்ப மிருப்பதே. 6

முதிரமங்கை தவஞ்செய்த காலமே
  முன்புமங்கை தவஞ்செய்த காலமே
வெதிர்களோடகில் சந்தமு ருட்டியே
  வேழமோடகில் சந்தமு ருட்டியே
அதிரவாறு வரத்தழு வத்தொடே
  ஆன்நெய்ஆடு வரத்தழு வத்தொடே
கதிர்கொள்பூண்முலைக் கம்பம் இருப்பதே
  காஞ்சிமாநகர்க் கம்பம் இருப்பதே. 7

பண்டரக்க னெடுத்த பலத்தையே
  பாய்ந்தரக்க னெடுத்த பலத்தையே
கொண்டரக்கிய துங்கால் விரலையே
  கோளரக்கிய துங்கால் விரலையே
உண்டுழன்றது முண்டத் தலையிலே
  உடுபதிக்கிட முண்டத் தலையிலே
கண்டநஞ்சம் அடக்கினை கம்பமே
  கடவுள்நீயிடங் கொண்டது கம்பமே. 8

---

6. இரும் புகைக்கொடி - பெரிய புகை ஒழுங்கு. மொய்த்த - நிறைந்த. பெரும்பகல் - ஊழிக்காலம். மொய்த்து எழு - நிறைந்து எழுந்து ஓங்கிய.

7. வெதிர் - மூங்கில். சந்தம் - சந்தனம். வேழம் - யானை. பூண்முலை - உமாதேவி.

8. பண்டு - முற்காலத்தில். அரக்கியதும் - நசுக்கியதும். உடுபதி - சந்திரன். முண்டகத்தலை - மண்டையோடு. கண்ட நெஞ்சம் - கண்டத்தில் விஷத்தினை.

தூணியான சுடர்விடு சோதியே
  சுத்தமான சுடர்விடு சோதியே
பேணியோடு பிரமப் பறவையே
  பித்தனான பிரமப் பறவையே
சேணினோடு கீழூழி திரிந்துமே
  சித்தமோடு கீழூழி திரிந்துமே
காணநின்றனர் உற்றது கம்பமே
  கடவுள்நீயிடம் உற்றது கம்பமே. 9

ஒருடம்பினை யீருரு வாகவே
  யுன்பொருட்டிற மீருரு வாகவே
ஆருமெய்தற் கரிது பெரிதுமே
  ஆற்றவெய்தற் கரிது பெரிதுமே
தேரரும்மறி யாதுதி கைப்பரே
  சித்தமும்மறி யாதுதி கைப்பரே
கார்நிறத்தம ணர்க்கொரு கம்பமே
  கடவுள்நீயிடங் கொண்டது கம்பமே. 10

கந்தமார் பொழில் சூழ்தரு கம்பமே
  காதல்செய்பவர் தீர்த்திடு கம்பமே
புந்திசெய்து விரும்பிப்பு கலியே
  பூசுரன்றன் விரும்பிப்பு கலியே
அந்தமில்பொரு ளாயின கொண்டுமே
  அண்ணலின்பொரு ளாயின கொண்டுமே
**பந்தன்** இன்னியல் பாடிய பத்துமே
பாடவல்லவ ராயின பத்துமே. 11

திருச்சிற்றம்பலம்

---

9. பிரமப்பறவை - அன்னம். சேண் - ஆகாயம். கீழ் - பாதாளம். ஊழி - ஊழிக்காலம்.

10. சித்தம் - கருத்து; உண்மை. அமணர் - சமணர்.

11. கந்தம் - வாசனை. கம்பம் - பிறவியால் வரும் துன்பம். புகலி - சீகாழி. பூசுரன் - இங்குத் திருஞான சம்பந்தர். பந்தன் - ஞான சம்பந்தன்.

TRIPLICANE P.O. MADRAS 2 AUG 1955

# திருநாவுக்கரசு சுவாமிகள்
## தேவாரம்

**பண் - காந்தாரம்** [4-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

**க**ரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாடச் சடைதாழ அங்கையினில் அனலேந்தி
இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே. 1

தேனோக்குங் கிளிமழலை உமைகேள்வன் செழும்பவளம்
தானோக்குந் திருமேனி தழலுருவாஞ் சங்கரனை
வானோக்கும் வளர்மதிசேர் சடையானை வானோர்க்கும்
ஏனோர்க்கும் பெருமானை என்மனத்தே வைத்தேனே. 2

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
**எப்போதும் இனியானை** என்மனத்தே வைத்தேனே. 3

---

1. கரவு ஆடும் வல் நெஞ்சர் - வஞ்சகத்தை மனத்திலே கொண்ட அன்பில்லாதவர்; கரவார்பால் - கள்ளமனம் இல்லாதவரிடத்து; விரவாடும் - கலந்து நிற்கும்; வித்தகன் - மேலானவன்; இரவு - நடு இரவு; ஊழிக்காலம்.

2. தேன் நோக்கும் - தேன்போன்ற; கிளிமழலை - கிளியின் சொல் போன்ற மழலைச்சொல்; பவளம்தான் நோக்கும் - பவளம் போன்ற. ஏனோர்க்கும் - ஏனைய மண்ணுலக மக்களுக்கும்.

3. கை - கையின்கண்கொண்ட; முப்போதும் - முக்காலங் களிலும்; அப் போது மலர் - புதிதாக மலர்ந்த பூக்கொண்டு; தூவி - பூசை செய்து; இது புறப்பூசை. ஐம்புலனும் அகத்தடக்கி - இஃது அந்தர்யாகம்; அகப்பூசை; எப்போது இனியான் - எக்காலத்தும் இனிமையானவன்; சிவபெருமான்.

அண்டமாய் ஆதியாய் அருமறையோ டைம்பூதப்
பிண்டமாய் உலகுக்கோர் பெய்பொருளாம் பிஞ்ஞகனைத்
தொண்டர்தாம் மலர்தூவிச் சொல்மாலை புனைகின்ற
இண்டைசேர் சடையானை என்மனத்தே வைத்தேனே. 4

ஆறேறு சடையானை **ஆயிரம்பே ரம்மானைப்**
பாறேறு படுதலையிற் பலிகொள்ளும் பரம்பரனை
நீறேறு திருமேனி நின்மலனை நெடுந்தூவி
ஏறேறும் பெருமானை என்மனத்தே வைத்தேனே. 5

தேசனைத் தேசங்கள் தொழநின்ற திருமாலால்
பூசனைப் பூசனைகள் உகப்பானைப் பூவின்கண்
வாசனை மலைநிலநீர் தீவளிஆ காசமாம்
ஈசனை எம்மானை என்மனத்தே வைத்தேனே. 6

நல்லானை நல்லான நான்மறையொ டாறங்கம்
வல்லானை வல்லார்கள் மனத்துறையும் மைந்தனைச்
சொல்லானைச் சொல்லார்ந்த பொருளானைத் துகளேதும்
இல்லானை எம்மானை என்மனத்தே வைத்தேனே. 7

விரித்தானை நால்வர்க்கு வெவ்வேறு வேதங்கள்
புரிந்தானைப் பதஞ்சந்திப் பொருளுருவாம் புண்ணியனைத்
தரித்தானைக் கங்கைநீர் தாழ்சடைமேல் மதில்மூன்றும்
எரித்தானை எம்மானை என்மனத்தே வைத்தேனே. 8

---

4. ஆதியாய் - முதல்வனாய்; ஐம் பூதப் பிண்டமாய் உலகு - பஞ்சபூதத்தால் ஆகிய உலகம்; பெய்பொருள் - அடையப்படும் பொருள்; இண்டை - சிரமாலை;

5. பாறு - கழுகு; நெடுந்தூவி ஏறு - பெரிய திமிலையுடைய இடபம்;

6. தேசனை - ஒளியுள்ளவனை; பூசனை - பூசிக்கப்படுபவனை; மலை - மலையினையுடைய. நிலம் நீர் தீ வளி ஆகாசமாம் ஈசனை - பஞ்சபூதமும் தன் திருமேனியாக உடைய இறைவனை.

7. வல்லவர்கள் - மாயையினை வென்ற வல்லமையையுடைய வீராகிய மெய்யன்பர்கள்; மைந்தன் - வலிமையுடையவன்; சொல்லார்ந்த பொருளானை - சத்தியும் சிவமும் ஆனவனை;

8. புரிந்தான் - சொன்னவன்; பதம் சந்தி - வேதம் ஓதும்முறை: புண்ணியன் - தூய்மையானவன்;

ஆகம்பத் தரவணையான் அயன்அறிதற் கரியானைப்
பாகம்பெண் ணுண்பாக மாய்நின்ற பசுபதியை
மாகம்ப மறையோதும் இறையானை மதிற்கச்சி
ஏகம்ப மேயானை என்மனத்தே வைத்தேனே. 9

அடுத்தானை உரித்தானை அருச்சுனற்குப் பாசுபதம்
கொடுத்தானைக் குலவரையே சிலையாகக் கூரம்பு
தொடுத்தானைப் புரமெரியச் சினமல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை என்மனத்தே வைத்தேனே. 10

திருச்சிற்றம்பலம்

---

## திருநேரிசை [4-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

**ந**ம்பனை நகர மூன்றும் எரியுண வெருவ நோக்கும்
அம்பனை அமுதை யாற்றை அணிபொழிற் கச்சி யுள்ளே
கம்பனைக் கதிர்வெண் திங்கட் செஞ்சடைக் கடவுள் தன்னைச்
செம்பொனைப் பவளத் தூணைச் சிந்தியா எழுகின் றேனே. 1

ஒருமுழம் உள்ள குட்டம் ஒன்பது துறையு டைத்தாய்
அரைமுழம் அதன்அகலம் அதனில்வாழ் முதலை ஐந்து
பெருமுழை வாய்தல் பற்றி கிடந்துநான் பிதற்று கின்றேன்
கருமுகில் தவழும் மாடக் கச்சிஏ கம்ப னீரே. 2

---

9. ஆகம் பத்து அரவணையான் – பத்துப் பிறவியையுடைய திருமால்; மாகம்ப மறை ஓதும்–உரத்த குரலில் வேதத்தை ஓதும்.

10. அடுத்து ஆனை – நெருங்கி வந்த யானையின் (தோலை); குலவரை - மேருமலை; சிலை – வில்; அம்பு – திருமாலாகிய அம்பு; கயிலாயம் எடுத்தான் - இங்கு இராவணன்.

1. நகரம் மூன்றும் - திரிபுரம்; கம்பனை - ஏகம்பனை; சிந்தியா - சிந்தித்து.

2. குட்டம் - ஆழம்; ஒன்பது துறை - உடலின் ஒன்பது வாசல்; முதலை ஐந்து – ஐம்பொறி; பெருமுழை வாய்தல் - பெரியவாய்.

மலையினார் மகளோர் பாக மைந்தனார் மழுவொன் றேந்திச்
சிலையினால் மதில்கள் மூன்றுந் தீஎழச் செற்ற செல்வர்
இலையினார் சூலம் ஏந்தி ஏகம்பம் மேவி னாரைத்
தலையினால் வணங்க வல்லார் தலைவர்க்குந் தலைவர் தாமே. 3

பூத்தபொற் கொன்றை மாலை புரிசடைக் கணிந்த செல்வர்
தீர்த்தமாங் கங்கை யாளைத் திருமுடி திகழ வைத்து
ஏத்துவார் ஏத்த நின்ற ஏகம்பம் மேவி னாரை
வாழ்த்துமா றறிய மாட்டேன் மால்கொடு மயங்கி னேனே. 4

மையினார் மலர்நெ டுங்கண் மங்கையோர் பங்க ராகிக்
கையிலோர் கபாலம் ஏந்திக் கடைதொறும் பலிகொள் வார்தாம்
எய்வதோர் ஏனம் ஓட்டி ஏகம்பம் மேவி னாரைக்
கையினால் தொழவல் லார்க்குக் கடுவினை களைய லாமே. 5

தருவினை மருவுங் கங்கை தங்கிய சடையன் எங்கள்
அருவினை அகல நல்கும் அண்ணலை அமரர் போற்றுந்
திருவினைத் திருவே கம்பஞ் செப்பிட உறைய வல்ல
உருவினை உருகி ஆங்கே உள்ளத்தால் உகக்கின் றேனே. 6

கொண்டதோர் கோல மாகிக் **கோலக்கா** வுடைய கூத்தன்
உண்டதோர் நஞ்ச மாகில் உலகெலாம் உய்ய உண்டான்
எண்டிசை யோரும் ஏத்த நின்றஏ கம்பன் தன்னைக்
கண்டுநான் அடிமை செய்வான் கருதியே திரிகின் றேனே. 7

---

3. சிலை - வில்; செற்ற - அழித்த; இலையினார் - இலை வடிவம் அமைந்த;

4. பொன் - பொன்னிறமான; புரி - கட்டமைந்த; தீர்த்தம் - பரிசுத்தம்; மால்கொடு - மயக்கம்கொண்டு;

5. மை - கருமை; கடைதோறும் - வாசல்தோறும்; ஏனம் - பன்றி; ஓட்டி—(வேடுவ வேடங்கொண்டு) விரட்டி; கடுவினை - தீவினை;

6. திருவினை - முத்திச் செல்வமுடையவனை; செப்பிட - சொல்ல. உருவினை - உருவம் இல்லாதவனை; உகத்தல் - மகிழ்தல்;

7. கோலக்கா - திருக்கோலக்கா என்னும் தலம்; நஞ்சம் - விஷம்: செய்வான்—செய்யும்பொருட்டு.

படமுடை அரவி னேடு பனிமதி யதனைச் சூடிக்
கடமுடை யுரிவை மூடிக் கண்டவர் அஞ்ச அம்ம
இடமுடைக் கச்சி தன்னுள் ஏகம்பம் மேவி னான்றன்
நடமுடை யாடல் காண ஞாலந்தான் உய்ந்த வாறே. 8

பொன்றிகழ் கொன்றை மாலை பொருந்திய நெடுந்தண் மார்பர்
நன்றியில் புகுந்தென் னுள்ளம் மெள்ளவே நவில நின்று
குன்றியில் அடுத்த மேனிக் குவளையங் கண்டர் எம்மை
இன்துயில் போது கண்டார் இனியர்ஏ கம்ப னாரே. 9

துருத்தியார் பழனத் துள்ளார் தொண்டர்கள் பலரும் ஏத்த
அருத்தியால் அன்பு செய்வார் அவரவர்க் கருள்கள் செய்தே
எருத்தினை இசைய ஏறி ஏகம்பம் மேவி னார்க்கு
வருத்திநின் றடிமை செய்வார் வல்வினை மாயு மன்றே. 10

திருச்சிற்றம்பலம்

---

## திருவிருத்தம் [4-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

ஓதுவித் தாய்முன் அறவுரை காட்டி அமணரொடே
காதுவித் தாய்கட்ட நோய்பிணி தீர்த்தாய் கலந்தருளிப்
போதுவித் தாய்நின் பணிபிழைக் கிற்புளி யம்வளாரால்
மோதுவிப் பாய் உகப் பாய்முனி வாய்கச்சி யேகம்பனே. 1

---

8. கடம் - மதம்; இங்கு யானை; உரிவை - தோல்; காண - கண்டு; ஞாலம் - உலகம்; ஆகுபெயர்.

9. நவில - சொல்ல; குன்றி - குன்றிமணி; குவளையங்கண்டர் - நீலகண்டர்; இங்குச் சிவந்தமேனியில் சிறிது கருமை தோன்றுவதற்கு குன்றிமணியை உவமை கூறினர்.

10. அருத்தி - ஆசை; எருத்து - எருது; இடபம். வருந்தி - உடலை வருத்தி; மாயும் - அழியும்.

1. அறவுரை - கொல்லாமை முதலிய நீதிகளை; காதுவித்தாய் - துன்பப்படுத்தினாய்; கட்டநோய் பிணி - சூலைநோய்; நின்பணி - உமது தொண்டு; புளியம்வளார் - புளியின் சிறு கொம்பு.

எத்தைக்கொண் டெத்தகை ஏழை அமணொ டிசைவித்தெனைக்
கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டு வித்தென்னைக் கோகு செய்தாய்
முத்தில் திரளும் பளிங்கினிற் சோதியும் மொய்பவளத்
தொத்தினை யேய்க்கும் படியாய் பொழிற்கச்சி யேகம்பனே. 2

மெய்யம்பு கோத்த விசயனொ டன்றொரு வேடுவனாய்ப்
பொய்யம்பெய் தாவ மருளிச்செய் தாய்புர மூன்றெரியக்
கையம்பெய் தாய்நுன் கழலடி போற்றாக் கயவர்நெஞ்சில்
குய்யம்பெய் தாய்கொடி மாமதில் சூழ்கச்சி யேகம்பனே. 3

குறிக்கொண் டிருந்துசெந் தாமரை ஆயிரம் வைகல்வைகல்
நெறிப்பட இண்டை புனைகின்ற மாலை நிறையழிப்பான்
கறைக்கண்ட நீயொரு பூக்குறை வித்துக்கண் சூல்விப்பதே
பிறைத்துண்ட வார்சடை யாய்பெருங் காஞ்சியெம் பிஞ்ஞகனே. 4

உரைக்குங் கழிந்திங் குணர்வரி யான்உள்கு வார்வினையைக்
கரைக்கு மெனக்கிக தொழுவதல் லாற்கதி ரோர்களெல்லாம்
விரைக்கொண் மலரவன் மால்எண் வசுக்கள்ஏ காதசர்கள்
இரைக்கும் அமிர்தர்க் கறியவொண் ணான்எங்கள் ஏகம்பனே. 5

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென் உள்ளமும் நானுங் கிடந்தலந் தெய்த்தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவால வாயா திருவா ரூரா
ஒருபற்றி லாமையுங் கண்டிரங் காய்கச்சி யேகம்பனே. 6

---

2. கொத்தை - குருடன்; மூங்கர் - ஊமை; கோடு - வஞ்சனை. தொத்து - கொத்து.

3. ஆவம் - அம்பு; இங்குப் பாசுபதாத்திரம்; கயவர் - கீழோர் குய்யம் - வஞ்சகம்.

4. வைகல் வைகல் - ஒவ்வொருநாளும்; இண்டை - சிரமாலை; கண் - கண்ணை; சூல்வித்தல் - தோண்டுதல்;

5. உரைக்கும் கழிந்து - சொல்லுக்கும் எட்டாத. உள்குவார் - நினைப்பார்; ஏகாதசகர்கள் - பதினொரு உருத்திரர்;

6. கருவுற்ற - தாயின் வயிற்றிலே கருவில் தோன்றிய; அலந்து - வருந்தி; ஒருபற்று - வேறு ஒரு பற்றும்; பற்று - ஆசை;

அரிஅயன் இந்திரன் சந்திரா தித்தர் அமரரெல்லாம்
உரியநின் கொற்றக் கடைத்தலை யார்உணங் காக்கிடந்தார்
புரிதரு புன்சடைப் போக முனிவர் புலம்புகின்றார்
எரிதரு செஞ்சடை ஏகம்ப என்னே திருக்குறிப்பே. 7

பாம்பரைச் சேர்த்திப் படருஞ் சடைமுடிப் பால்வண்ணனே
கூம்பலைச் செய்த கரதலத் தன்பர்கள் கூடிப்பன்னாள்
சாம்பலைப் பூசித் தரையிற் புரண்டுநின் தாள்சரணென்(று)
ஏம்பலிப் பார்கட் கிரங்குகண் டாய்கச்சி யேகம்பனே. 8

ஏன்றுகொண் டாயென்னை எம்பெரு மான்இனி யல்லமென்னில்
சான்றுகண் டாய்இவ் வுலகமெல் லாந்தனி யேனென்றென்னை
ஊன்றிநின் றைவர்க் கொற்றிவைத் தாய்பின்னை ஒற்றியெல்லாம்
சோன்றுகொண் டாய்கச்சி யேகம்ப மேய சுடர்வண்ணனே. 9

உந்திநின் றார்உன்றன் ஓலக்கச் சூளைகள் வாய்தல்பற்றித்
துன்றிநின் றார்தொல்லை வானவர் ஈட்டம் பணியறிவான்
வந்துநின் றார்அய னுந்திரு மாலும் மதிற்கச்சியாய்
இந்தநின் றோமினி எங்ஙன மோவந் திறைஞ்சுவதே. 10

திருச்சிற்றம்பலம்

---

7. கொற்றம் – வெற்றி; கடைத்தலை - திருவாயிலின் புறம். உணங்குதல் – வருந்தி வாடுதல். போக முனிவர் – இன்பங்களை விரும்பித்தவம் செய்யும் முனிவர்கள். எரிதரு - தீ போன்ற.

8. அரை – இடையில். கூம்பல் – கூப்புதல்; கும்பிடுதல். சாம்பல் – விபூதி; ஏம்பலிப்பார் – வருந்துவார்.

9. ஏன்றுகொண்டாய் – ஏற்று ஆட்கொண்டாய். சான்று – சாட்சி. ஐவர் – ஐம்பொறி. ஒற்றிவைத்தல்–ஈடாகவைத்தல். சோன்று கொள்ளல் – மீட்டுக்கொள்ளுதல்.

10. ஓலக்கச்சூளைகள் – திருவோலக்க மண்டபத்தில் காவல்புரியும் காவலாளர்கள். இந்த – இப்பக்கம்; இதோ எனினுமாம்.

### திருக்குறுந்தொகை [5-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

**ப**ண்டு செய்த பழவினை யின்பயன்
கண்டுங் கண்டும் களித்திகாண் நெஞ்சமே
வண்டு லாமலர்ச் செஞ்சடை ஏகம்பன்
தொண்ட னாய்த்திரி யாய்துயர் தீரவே. 1

நச்சி நாளும் நயந்தடி யார்தொழ
இச்சை யால்உமை நங்கை வழிபடக்
கொச்சை யார்குறு கார்செறி தீம்பொழில்
கச்சி யேகம்ப மேகை தொழுமினே. 2

ஊனி லாவி இயங்கி உலகெலாம்
தானு லாவிய தன்மைய ராகிலும்
வானு லாவிய பாணி பிறங்கவெங்
கானி லாடுவர் கச்சியே கம்பரே. 3

இமையா முக்கணர் என்நெஞ்சத் துள்ளவர்
தமையா ரும்மறி வொண்ணாத் தகைமையர்
இமையோ ரேத்த இருந்தவன் ஏகம்பன்
நமையா ளும்மவ னைத்தொழு மின்களே. 4

மருந்தி னோடுநற் சுற்றமும் மக்களும்
பொருந்தி நின்றெனக் காயஎம் புண்ணியன்

---

1. பண்டு – முற்பிறப்பில். களித்தி – மகிழ்ந்து திரிவாய். துயர் – பிறவித்துன்பம்.

2. நச்சி – விரும்பி. இச்சை – விருப்பம். உமை நங்கை – உமா தேவியார்; காமாட்சியம்மையார். கொச்சையர் – கீழ்மக்கள்.

3. ஊன் – உயிர்களின் உடலில். நிலாவி – பொருந்தி. பாணி பிறங்க – கைகொட்ட. வெங்கான் – சுடுகாடு.

4. தமை – தம்மை. தகைமையர் – தன்மையர்;

5. மருந்து – தேவாமிர்தம். உமை கைதொழ இருந்தவன் – காமாட்சி பூசிக்க இருந்த இறைவன்.

கருந்தடங் கண்ணி னாளுமை கைதொழ
இருந்த வன்கச்சி யேகம்பத் தெந்தையே. 5

பொருளி னோடுநற் சுற்றமும் பற்றிலர்க்(கு)
அருளும் நன்மைதந் தாயஅ ரும்பொருள்
சுருள்கொள் செஞ்சடை யான்கச்சி யேகம்பம்
இருள்கெ டச்சென்று கைதொழு தேத்துமே. 6

மூக்கு வாய்செவி கண்ணுட லாகிவந்(து)
ஆக்கும் ஐவர்தம் ஆப்பை அவிழ்த்தருள்
நோக்கு வான்நமை நோய்வினை வாராமே
காக்கும் நாயகன் கச்சியே கம்பனே. 7

பண்ணில் ஓசை பழத்தினில் இன்சுவை
பெண்ணொ டாணென்று பேசற் கரியவன்
வண்ண மில்லி வடிவுவே றாயவன்
கண்ணி லுண்மணி கச்சியே கம்பனே. 8

திருவின் நாயகன் செம்மலர் மேலயன்
வெருவ நீண்ட விளங்கொளிச் சோதியான்
ஒருவ னாய்உணர் வாய்உணர் வல்லதோர்
கருவுள் நாயகன் கச்சியே கம்பனே. 9

இடுகு நுண்ணிடை ஏந்திள மென்முலை
வடிவின் மாதர் திறம்மனம் வையன்மின்
பொடிகொள் மேனியன் பூம்பொழிற் கச்சியுள்
அடிகள் எம்மை அருந்துயர் தீர்ப்பரே. 10

---

6. பற்றிலர் – பற்றற்றவர். சுருள்கொள் – சுருண்ட. இருள் – ஆணவ இருள்.

7. ஐவர் – ஐம்பொறி. ஐவர்தம் ஆப்பு – ஐம்புல ஆசை என்கின்ற கட்டுக்கள்.

8. பண்ணில் – இசையில். வண்ணம் இல்லி – அழகு இல்லாதவன்.

9. திருவின் நாயகன் – திருமால். கருவுள் – கருவினுள் (கலந்து நிற்கும்).

10. இடுகு – சிறுத்த. திறம் – இடம். வையன்மின் – வைக்காதீர்கள். பொடி – திருவெண்ணீறு.

இலங்கை வேந்தன் இராவணன் சென்றுதன்
விலங்க லையெடுக் கவ்விர லூன்றலும்
கலங்கிக் கச்சியே கம்பவோ என்றலும்
நலங்கொள் செலவளித் தானெங்கள் நாதனே. 11

திருச்சிற்றம்பலம்

---

## திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பூமே லானும் பூமகள் கேள்வனும்
நாமே தேவ ரெனுமை நடுக்குறத்
தீமே வும்முரு வாதிரு வேகம்பா
ஆமோ அல்லற் படவடி யோங்களே. 1

அருந்தி றல்அம ரர்அயன் மாலொடு
திருந்த நின்று வழிபடத் தேவியோ(டு)
இருந்த வன்எழி லார்கச்சி யேகம்பம்
பொருந்தச் சென்று புடைபட் டெழுதுமே. 2

கறைகொள் கண்டத்தெண் தோளிறை முக்கணன்
மறைகொள் நாவினன் வானவர்க் காதியான்
உறையும் பூம்பொழில் சூழ்கச்சி யேகம்பம்
முறைமை யாற்சென்று முந்தித் தொழுதுமே. 3

பொறிப்பு லன்களைப் போக்கறுத் துள்ளத்தை
நெறிப்ப டுத்து நினைந்தவர் சிந்தையுள்

---

11. விலங்கல் – கயிலைமலை; செலவளித்தான் – விடையளித்தான்.

1. நாமே தேவர் - தாம்தாம் கடவுள். எனுமை - என்று கூறுமல். அல்லல் - துன்பம்.

2. திறல் - திறமை. புடைபட்டு - நெருங்கி.

3. கறை - விடம். முறைமையால் - ஆளாகும் முறைப்படி.

4. பொறிப் புலன்களை - ஐம்பொறிகளின் வழியே ஐம்புலன்களால் செல்லும் ஆசை. போக்கு - போதல். அறிப்பு - அறிதல். குறிப்பு - குறிக்கோள்.

அறிப்பு றும்மமு தாயவன் ஏகம்பம்
குறிப்பி னூற்சென்று கூடித் தொழுதுமே. 4

சிந்தை யுட்சிவ மாய்நின்ற செம்மையோ(டு)
அந்தி யாய்அன லாய்ப்புனல் வானமாய்ப்
புந்தி யாய்ப்புகுந் துள்ள நிறைந்தவெம்
எந்தை யேகம்பம் ஏத்தித் தொழுமினே. 5

சாக்கி யத்தொடு மற்றுஞ் சமண்படும்
பாக்கி யம்மிலார் பாடுசெ லாதுறப்
பூக்கொள் சேவடி யான்கச்சி யேகம்பம்
நாக்கொ டேத்தி நயந்து தொழுதுமே. 6

மூப்பி னோடு முனிவுறுத் தெந்தமை
ஆர்ப்ப தன்முன் னணிஅம ரர்க்கிறை
காப்ப தாய கடிபொழில் ஏகம்பம்
சேர்ப்ப தாகநாஞ் சென்றடைந் துய்துமே. 7

ஆலு மாமயிற் சாயல்நல் லாரொடும்
சால நீயுறு மால்தவிர் நெஞ்சமே
நீல மாமிடற் றண்ணல்ஏ கம்பனார்
கோல மாமலர்ப் பாதமே கும்பிடே. 8

பொய்ய னைத்தையும் விட்டவர் புந்தியுள்
மெய்ய னைச்சுடர் வெண்மழு வேந்திய
கைய னைக்கச்சி யேகம்பம் மேவிய
ஐய னைத்தொழு வார்க்கில்லை யல்லலே. 9

---

5. சிந்தையுட் சிவம் - மனத்தினுள் ஒளித்து நின்ற சிவம். புந்தி - புத்தி

6. சாக்கியம் - சாக்கிய மதம்; புத்தம். பாக்கியம் - சிவநெறிப் பேறு. பாடு - துன்பம்.

7. அமரர்க்கு இறை - இங்குச் சிவன். காப்பு - படைப்பு; காவலுமாம். சேர்ப்பது - சேர்வது.

8. ஆலும் - ஆடும். சால - மிகுதி. கோலம் - அழகு.

9. மெய்யன் - உண்மையன். ஐயனை - தலைவனை.

அரக்கன் தன்வலி உன்னிக் கயிலையை
நெருக்கிச் சென்றெடுத் தான்முடி தோள்நெரித்(து)
இரக்க இன்னிசை கேட்டவன் ஏகம்பம்
தருக்க தாகநாஞ் சார்ந்து தொழுதுமே. 10

திருச்சிற்றம்பலம்

---

## திருத்தாண்டகம் [6-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

கூற்றுவன்காண் கூற்றுவனைக் குமைத்த கோன்காண்
குவலயன்காண் குவலயத்தின் நீரா னான்காண்
காற்றவன்காண் கனலவன்காண் கலிக்கும் மின்காண்
கனபவளச் செம்மேனி கலந்த வெள்ளை
நீற்றவன்காண் நிலாவூருஞ் சென்னி யான்காண்
நிறையார்ந்த புனற்கங்கை நிமிர்ச டைமேல்
ஏற்றவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 1

பரந்தவன்காண் பல்லுயிர்க ளாகி யெங்கும்
பணிந்தெழுவார் பாவமும் வினையும் போகத்
துரந்தவன்காண் தூமலரங் கண்ணி யான்காண்
தோற்ற நிலையிறுதிப் பொருளாய் வந்த
மருந்தவன்காண் வையகங்கள் பொறைதீர்ப் பான்காண்
மலர்தூவி நினைந்தெழுவா ருள்ளம் நீங்கா
திருந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 2

---

10. உன்னி - நினைத்து. தருக்கதாக - செருக்காக.

1. கூற்றுவன் - வேதங்களைக் கூறியவன். குமைத்த - அழித்த. கலிக்கும் - ஒலிக்கும். நீற்றவன் - விபூதியணிந்தவன். ஊரும் - அசையும்.

2. கண்ணி - சிரமாலை. தோற்றம் நிலை இறுதி - படைத்தல், காத்தல், அழித்தல். மருந்தவன் - மருந்தையுடையவன்; வைத்திய நாதன். பொறை - உடற்சுமை. தீர்ப்பான் - அழிப்பவன்.

நீற்றவன்காண் நீராகித் தீயா னான்காண்
நிறைமழுவுந் தமருகமும் எரியுங் கையில்
தோற்றவன்காண் தோற்றக்கே டில்லா தான்காண்
துணையிலிகாண் துணையென்று தொழுவா ருள்ளம்
போற்றவன்காண் புகழ்கள் தமைப் படைத்தான் தான்காண்
பொறியரவும் விரிசடைமேற் புனலுங் கங்கை
ஏற்றவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 3

தாயவன்காண் உலகிற்குத் தன்னொப் பில்லாத்
தத்துவன்காண் மலைமங்கை பங்கா வென்பார்
வாயவன்காண் வரும்பிறவி நோய்தீர்ப் பான்காண்
வானவர்க்குந் தானவர்க்கும் மண்ணு ளோர்க்குஞ்
சேயவன்காண் நினையார்க்குச் சித்த மாரத்
திருவடியே உள்கிநினைந் தெழுவா ருள்ளம்
ஏயவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 4

அடுத்தானை யுரித்தான்காண்........................* 5

அழித்தவன்காண் எயில்மூன்றும் அயில்வா யம்பால்
ஐயாறும் இடைமருதும் ஆள்வான் தான்காண்
பழித்தவன்காண் அடையாரை அடைவார் தங்கள்
பற்றவன்காண் புற்றரவ நாணி னான்காண்
சுழித்தவன்காண் முடிக்கங்கை அடியே போற்றுந்
தூயமா முனிவர்க்காய்ப் பார்மேல் நிற்க
இழித்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 6

---

3. தமருகம் - உடுக்கை. எரி - மழு. துணையிலி - ஒப்பில்லாதவன். பொறி - புள்ளி.

4. தாயவன் - தாயானவன். தத்துவன் - தத்துவ வடிவானவன். வாயவன் - வாக்கில் திகழ்பவன்.

5. ஆனை - யானை. இது தாருகவனத்து யானை.

6 அயில் - கூர்மை. ஐயாறு - திருவையாறு. அடையார் - பகைவர். பற்றவன் - விருப்பமுடையவன்.

* இச்செய்யுளில் எஞ்சிய பாகம் சிதைந்து போயிற்று

அசைந்தவன்காண் நடமாடிப் பாடல் பேணி
அழல்வண்ணத் தில்லடியும் முடியுந் தேடப்
பசைந்தவன்காண் பேய்க்கணங்கள் பரவி யேத்தும்
பான்மையன்காண் பரவினேர் தெழுவார் தம்பால்
கசிந்தவன்காண் கரியினுரி போர்த்தான் தான்காண்
கடலில்விடம் உண்டமரர்க் கமுதமீய
இசைந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 7

முடித்தவன்காண் வன்கூற்றைச் சீற்றத் தீயால்
வலியார்தம் புரமூன்றும் வேவச் சாபம்
பிடித்தவன்காண் பிஞ்ஞகனும் வேடத் தான்காண்
பிணையல்வெறி கமழ்கொன்றை அரவு சென்னி
முடித்தவன்காண் மூவிலைநல் வேலி ஞன்காண்
முழங்கியுரு மெனத்தோன்றும் மழையாய் மின்னி
இடித்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 8

வருந்தான்காண் மனமுருகி நினையா தார்க்கு
வஞ்சகன்காண் **அஞ்செழுத்து** நினைவார்க் கென்றும்
மருந்தவன்காண் வான்பிணிகள் தீரும் வண்ணம்
வானகமும் மண்ணகமும் மற்று மாகிப்
பரந்தவன்காண் படர்சடையெட் டுடையான் தான்காண்
பங்கயத்தோன் தன்சிரத்தை யேந்தி யூரூர்
இரந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 9

---

7. பேணி - விரும்பி. அழல் வண்ணத்தில் - சோதி வடிவத்தில். பரவுதல் - துதித்தல்.

8. சீற்றத் தீயால் - கோபமாகிய தீயால். சாபம் - வில். வேல் - ஆயுதப் பொது; சூலம். உரும் - இடி.

9. வஞ்சகன் - வெளிப்படாது இருப்பவன். மருந்தவன் - பிறவி நோய் தீர்க்கும் மருந்துபோன்றவன். அஞ்செழுத்து - திருவைந்தெழுத்து; பஞ்சாட்சரம்.

வெம்மான உழுவையத ளுரிபோர்த் தான்காண்
வேதத்தின் பொருளான்காண் என்றி யம்பி
விம்மாநின் றமுவார்கட் களிப்பான் தான்காண்
விடையேறித் திரிவான்காண் நடஞ்செய் பூதத்
தம்மான்காண் அகலிடங்கள் தாங்கி னான்காண்
அற்புதன்காண் சொற்பதமுங் கடந்து நின்ற,
எம்மான்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 10

அறுத்தான்காண் அயன்சிரத்தை அமரர் வேண்ட
ஆழ்கடலின் நஞ்சுண்டங் கணிநீர்க் கங்கை
செறுத்தான்காண் தேவர்க்குந் தேவன் தான்காண்
திசையனைத்துந் தொழுதேத்தக் கலைமான் கையில்
பொறுத்தான்காண் புகலிடத்தை நலிய வந்து
பொருகயிலை எடுத்தவன்தன் முடிதோள் நாலஞ்
சிறுத்தான்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 11

திருச்சிற்றம்பலம்

---

## திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

**உ**ரித்தவன்காண் உரக்களிற்றை உமையாள் ஒல்க
**ஓங்காரத் தொருவன்காண்** உணர்மெய்ஞ் ஞானம்
விரித்தவன்காண் விரித்த நால்வேதத் தான்காண்
வியனுலகிற் பல்லுயிரை விதியி னாலே

---

10. வெம்மான உழுவை - மிகக் கொடிய புலி அதள் - தோல். எம்மான் - எமது தலைவன்.

11. அயன் - பிரமன். திசை அனைத்தும் - திசையிலுள்ள யாவரும். பொறுத்தான் - தாங்கினான்.

1. உரம் - வலிமை. ஒல்க - அஞ்ச. ஓங்காரம் - பிரணவம். உணர் - உணரவேண்டிய. விரித்தவன் - உபதேசித்தவன். சில் உரு - மிக நுண்ணிய வடிவு.

தெரிந்தவன்காண் சில்லுருவாய்த் தோன்றி யெங்குந்
திரண்டவன்காண் திரிபுரத்தை வேவ வில்லால்
எரித்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 1

நேசன்காண் நேசர்க்கு நேசந் தன்பால்
இல்லாத நெஞ்சத்து நீசர் தம்மைக்
கூசன்காண் கூசாதார் நெஞ்சு தஞ்சே
குடிகொண்ட குழகன்காண் அழகார் கொன்றை
வாசன்காண் மலைமங்கை பங்கன் றான்காண்
வானவர்கள் எப்பொழுதும் வணங்கி யேத்தும்
ஈசன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 2

பொறையவன்காண் பூமியேழ் தாங்கி யோங்கும்
புண்ணியன்காண் நண்ணியபுண் டரீகப் போதில்
மறையவன்காண் மறையவனைப் பயந்தோன் தான்காண்
வார்சடைமா சுணமணிந்து வளரும் பிள்ளைப்
பிறையவன்காண் பிறைதிகழும் எயிற்றுப் பேழ்வாய்ப்
பேயோடங் கிடுகாட்டில் எல்லி யாடும்
இறையவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 3

பாரவன்காண் விசும்பவன்காண் பவ்வந் தான்காண்
பனிவரைகள் இரவிநெடு பகலாய் நின்ற
சீரவன்காண் திசையவன்காண் திசைக ளெட்டுஞ்
செறிந்தவன்காண் சிறந்தடியார் சிந்தை செய்யும்

---

2. நேசன் - அன்பன். நீசர் - கீழ்மக்கள். கூசன் - பார்க்கக் கூசுபவன். குழகன் - அழகன். ஈசன் - தலைவன்.

3. பொறையவன் - வலிமையுடையவன். புண்டரீகப்போது - அன்பர்களது இதயதாமரை. மறையவனை - பிரமனை. மாசுணம் - பாம்பு. எல்லி - இரவு; ஊழிக்காலம்.

4. பார் - பூமி. பௌவம் - கடல். செறிந்தவன் - நிறைந்தவன். பேர் ஆயிரம் - ஆயிரம் திருநாமங்கள். பெற்றம் - இடபம். ஏரவன் - அழகன்.

பேரவன்காண் பேரா யிரங்க ளேத்தும்
பெரியவன்காண் அரியவன்காண் பெற்றம் ஊர்ந்த
ஏரவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 4

பெருந்தவத்தெம் பிஞ்ஞகன்காண் பிறைசூ டிகாண்
பேதையேன் வாதையுறு பிணியைத் தீர்க்கும்
மருந்தவன்காண் மந்திரங்க ளாயி னான்காண்
வானவர்கள் தாம்வணங்கும் மாதே வன்காண்
அருந்தவத்தாள் ஆயிழையாள் உமையாள் பாகம்
அமர்ந்தவன்காண் அமரர்கள்தாம் அர்ச்சித் தேத்த
இருந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 5

ஆய்ந்தவன்காண் அருமறையோ டங்கம் ஆறும்
அணிந்தவன்காண் ஆடரவோ டென்பு மாமை
காய்ந்தவன்காண் கண்ணழலாற் காமன் ஆகங்
கனன்றெழுந்த காலனுடல் பொடியாய் வீழப்
பாய்ந்தவன்காண் பண்டுபல சருகால் பந்தர்
பயின்றநூற் சிலந்திக்குப் பாராள் செல்வம்
ஈந்தவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 6

உமையவளை யொருபாகஞ் சேர்த்தி னான்காண்
உகந்தொலிநீர்க் கங்கைசடை ஒழுக்கி னான்காண்
* இமய வடகயிலைச் செல்வன் தான்காண்
இல்பலிக்குச் சென்றுழலும் நல்கூர்ந் தான்காண்

---

5. வாதையுறுபிணி - இங்குத் திருநாவுக்கரசரை வருத்திய சூலை நோயைக் குறிக்கும். அருந்தவத்தாள் ஆயிழையாள் - இங்குக் காமாட்சி யம்மையார்.

6. ஆய்ந்தவன் - ஆராய்ந்தவன். ஆகம் - உடல். பாராள் செல்வம் - அரசச் செல்வம். இங்குக் கோச்செங்கட் சோழர் சரிதக் குறிப்பு.

7. உகந்து - விரும்பி. இமய வடகயிலை - இமய மலையிலுள்ள கைலாச மலை. சமயம் அவை ஆறினுக்கும் தலைவன் - அகச் சமயம் ஆறுக்கும் தலைவன்; இங்கு அவரவர் பக்குவத்திற்கேற்ப அருள்புரிபவன்.

* பா - ம்: இமயவரை - வடகயிலை.

சமயமவை யாறினுக்குந் தலைவன் தான்காண்
தத்துவன்காண் உத்தமன்காண் தானே யாய
இமையவன்காண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 7

தொண்டுபடு தொண்டர் துயர் தீர்ப்பான் தான்காண்
தூமலர்ச்சே வடியிணையெம் சோதி யான்காண்
உண்டுபடு விடங்கண்டத் தொடுக்கி னான்காண்
ஒலிகடலில் அமுதமரர்க் குதவி னான்காண்
வண்டுபடு மலர்க்கொன்றை மாலை யான்காண்
வாண்மதியாய் நாண்மீனு மாயி னான்காண்
எண்டிசையும் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 8

முந்தைகாண் மூவரினும் முதலா னான்காண்
மூவிலைவேல் மூர்த்திகாண் முருக வேட்குத்
தந்தைகாண் தண்கடமா முகத்தி னாற்குத்
தாதைகாண் தாழ்ந்தடியே வணங்கு வார்க்குச்
சிந்தைகாண் சிந்தாத சித்தத் தார்க்குச்
சிவனவன்காண் செங்கண்மால் விடையொன் றேறும்
எந்தைகாண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 9

பொன்னிசையும் புரிசடையெம் புனிதன் தான்காண்
பூதகண நாதன்காண் புலித்தோ லாடை
தன்னிசைய வைத்தளழி லரவி னான்காண்
சங்கவெண் குழைக்காதிற் சதுரன் தான்காண்

---

8. தொண்டுபடு - சிவத் தொண்டினைப் புரிகின்ற. உண்டுபடு - உண்ணப்பட்ட. நாள்மீன் - நட்சத்திரம்.

9. முந்தை - எல்லார்க்கும் முன்னவன். கடமா முகத்தினாற்கு - விநாயகக் கடவுளுக்கு. செங்கண்மால்விடை - திருமாலாகிய இடபம்; சிவந்த கண்களையுடைய பெரிய இடபமுமாம். சிவன் - இன்பம் அளிப்பவன்.

10. பொன்னிசை - பொன்னிறம். புரி - கட்டமைந்த. சதுரன் - சதுரப்பாடுடையவன். அடி அடர்ப்ப - விரலால் ஊன்ற. இன்னிசை - சாமவேதம்.

மின்னிசையும் வெள்ளெயிற்றோன் வெகுண்டு வெற்பை
யெடுக்கஅடி யடர்ப்பமீண் டவன்றன் வாயில்
இன்னிசைகேட் டிலங்கொளிவாள் ஈந்தோன் கச்சி
ஏகம்பன் காண்அவனென் எண்ணத் தானே. 10

திருச்சிற்றம்பலம்

---

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்
## தேவாரம்

**பண் - தக்கேசி [7-ஆம் திருமுறை]**

திருச்சிற்றம்பலம்

ஆலந் தான்உகந் தமுதுசெய் தானை
ஆதி யைஅம ரர்தொழு தேத்தும்
**சீலந் தான்பெரி தும்முடை யானைச்**
**சிந்திப் பாரவர் சிந்தையு ளானை**
ஏல வார்குழ லாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 1

உற்ற வர்க்குத வும்பெரு மானை
ஊர்வ தொன்றுடை யான்உம்பர் கோனைப்
பற்றி னார்க்கென்றும் பற்றவன் றன்னைப்
பாவிப் பார்மனம் பாவிக்கொண் டானை
அற்ற மில்புக ழாள்உமை நங்கை
ஆத ரித்து வழிபடப் பெற்ற
கற்றை வார்சடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 2

---

1. உகந்து - விரும்பி. சீலம் - ஒழுக்கம்; மேன்மை. ஏலம் - வாசனை. வார் - நீண்ட. கம்பன் - ஏகம்பன். காணக் கண் - தரிசிப்பதற்குக் கண்ணை.

2. உற்றவர்க்கு - தன்னை அடைந்தவர்க்கு. பற்றவன் - அன்புடையவன். பாவிப்பார் - நினைப்பவர். அற்றம் - முடிவு. ஆதரித்து - விரும்பி.

திரியும் முப்புரம் தீப்பிழம் பாகச்
செங்கண் மால்விடை மேற்றிகழ் வானைக்
கரியின் ஈருரி போர்த்துகந் தானைக்
காம னைக்கன லாவிழித் தானை
வரிகொள் வெள்வளை யாள்உமை நங்கை
மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
**பெரிய கம்பனை** எங்கள்பி ரானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 3

குண்ட லந்திகழ் காதுடை யானைக்
கூற்று தைத்த கொடுந்தொழி லானை
வண்ட லம்புமலர்க் கொன்றையி னானை
வாள ராமதி சேர்சடை யானைக்
கெண்டை யந்தடங் கண்ணுமை நங்கை
கெழுமி ஏத்தி வழிபடப் பெற்ற
கண்டம் நஞ்சுடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 4

வெல்லும் வெண்மழு ஒன்றுடை யானை
வேலைநஞ் சுண்ட வித்தகன் றன்னை
**அல்லல் தீர்த்தருள் செய்யவல் லானை**
அருமறையவை அங்கம்வல் லானை
எல்லை யில்புக ழாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
**நல்ல கம்பனை** எங்கள் பிரானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 5

---

3. திரியும் - அலையும். ஈர்உரி - பெரிய தோல். வரி - கோடு; ரேகை. பெரிய கம்பன் - இவர் காமாட்சியம்மையாரால் பூசிக்கப் பெற்ற சிவலிங்கப் பெருமான்; ஏகாம்பரநாதர்.

4. வண்டு அலம்பும் - வண்டுகள் ஒலிக்கின்ற. கெண்டை - சேல் மீன். கெழுமி - அன்போடு விரும்பி.

5. வித்தகன் - மேலானவன். அங்கம் - வேதாங்கம். நல்ல கம்பன் - இவர் உருத்திரரால் பூசிக்கப்பெற்ற சிவலிங்கப் பெருமான்.

திங்கள் தங்கிய சடையுடை யானைத்
தேவ தேவனைச் செழுங்கடல் வளரும்
சங்க வெண்குழைக் காதுடை யானைச்
சாம வேதம் பெரிதுகப்பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
கங்கை யாளனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 6

விண்ண வர்தொழு தேத்தநின் றானை
வேதந் தான்விரித் தோதவல் லானை
**நண்ணி னார்க்கென்றும் நல்லவன் றன்னை**
நாளும் நாம்உகக் கின்றபி ரானை
எண்ணில் தொல்புக ழாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கண்ணும் மூன்றுடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 7

**சிந்தித் தென்றும் நினைந்தெழு வார்கள்**
**சிந்தை யில்திக ழுஞ்சிவன் றன்னைப்**
**பந்தித் தவினைப் பற்றறுப் பானைப்**
**பாலோ டானைஞ்சும் ஆட்டுகந் தானை**
அந்த மில்புக ழாள்உமை நங்கை
ஆத ரித்து வழிபடப் பெற்ற
கந்த வார்சடைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 8

---

6. கடல் வளரும் சங்கம் - கடலில் தோன்றிய சங்கு. பெரிது - மிகவும். உகப்பானை - விரும்புபவனை.

7. நண்ணினார்க்கு - தன்னை வந்து அடைந்தவர்க்கு. நாளும் - எப்போதும். எண் இல் - அளவு இல்லாத.

8. பந்தித்த - கட்டுப்பட்ட. ஆன் ஐஞ்சும் - பஞ்ச கௌவியம். அந்தமில் - எல்லை இல்லாத. ஆதரித்து - அன்பு கொண்டு. கந்தம் - வாசனை.

வரங்கள் பெற்றுழல் வாளரக் கர்தம்
வாலி யபுரம் மூன்றெரித் தானை
நிரம்பி யதக்கன் றன்பெரு வேள்வி
நிரந்த ரஞ்செய்த நிட்கண் டகனைப்
பரந்த தொல்புக ழாள்உமை நங்கை
பரவி ஏத்தி வழிபடப் பெற்ற
கரங்கள் எட்டுடைக் கம்பன்எம் மானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 9

எள்கல் இன்றி இமையவர் கோனை
ஈச னைவழி பாடுசெய் வாள்போல்
உள்ளத் துள்கி உகந்துமை நங்கை
வழிப டச்சென்று நின்றவா கண்டு
வெள்ளங் காட்டி வெருட்டிட அஞ்சி
வெருவி ஓடித் தழுவ வெளிப்பட்ட
**கள்ளக் கம்பனை** எங்கள் பிரானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற வாறே. 10

பெற்றம் ஏறுகந் தேறவல் லானைப்
பெரிய எம்பெரு மான்என் றெப்போதும்
கற்ற வர்பர வப்படு வானைக்
காணக் கண்அடி யேன்பெற்ற தென்று
கொற்ற வன்கம்பன் கூத்தன்எம் மானைக்
குளிர்பொ ழில்**திரு நாவலா ரூரன்**
நற்ற மிழ்இவை ஈரைந்தும் வல்லார்
நன்னெ றிஉல கெய்துவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

---

9. வாலிய - வலிமையுள்ள. புரம் - ஊர். நிரந்தரம் செய்த - அழியும்படி செய்த. நிட்கண்டகன் - பட்சபாதம் இல்லாதவன்.

10. எள்கல் - இகழ்தல். நின்றவா - நின்ற தன்மையை. வெள்ளம் - கம்பாநதியின் பெருக்கை. கள்ளக்கம்பன் - இவர் திருமாலால் பூசிக்கப்பெற்ற சிவலிங்கப் பெருமான்.

11. பெற்றம் ஏறு - இடபம். பரவுதல் - துதித்தல். கொற்றவன் - வெற்றியை உடையவன்.

## மாணிக்கவாசக சுவாமிகள்

## திருவாசகம்

[8-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

**ஏகம் பத்தின்** இயல்பாய் இருந்து
பாகம் பெண்ணோ டாயின பரிசும். 1

—கீர்த்தித் திருவகவல்

**ஏகம் பத்துறை** எந்தாய் போற்றி!
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி! 2

—போற்றித் திருவகவல்

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தி
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்**கச்சித்**
**திருவேகம் பன்**செம்பொற் கோயில்பாடி
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே. 3

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்கவொட்டோம்

---

1. பாகம் - இடது பாகம். பரிசும் – சிறப்பும்.

2. எந்தாய் - எமது தந்தையே. போற்றி - வணக்கம்.

3. காசு - பொன் மணி. காம்பு - பட்டுத்துணி, கறையுரல் - கருங்காலியாற் செய்யப்பெற்ற உரல். நேசம் - அன்பு. பாசவினை - வினைப்பாசங்கள். சுண்ணம் - பொடி.

4. அறுகு - மங்கல தீபம். நறுமுறு - (தம்முள் பொருது) முறு முறுக்கின்ற. நம்மில் பின்பு அல்லது - நமக்குப் பின்னால் அல்லது. முறுவல் - புன்சிரிப்பு. ஆட - திருமஞ்சனம் செய்ய.

செறிவுடை மும்மதில் எய்தவில்லி
**திருவேகம் பன்**செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் ! முக்கணப்பற்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 4

—திருப்பொற் சுண்ணம்

படமாக என்னுள்ளே தன்னிணைப்போ தவையளித்திங்(கு)
இடமாகக் கொண்டிருந்(து) **ஏகம்பம்** மேயபிரான்
தடமார் மதில்தில்லை அம்பலமே தானிடமா
நடமாடு மாபாடிப் பூவல்லி கொய்யாமோ. 5

—திருப்பூவல்லி

ஈரம்பு கண்டிலம் **ஏகம்பர்** தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை உந்தீபற. 6

—திருவுந்தியார்

---

## திருப்பிரபந்தமாலை

[11-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

என்னெஞ்சே ! உன்னை இரந்தும் உரைக்கின்றேன்
கன்னஞ்செய் வாயாகிற் காலத்தால்—வன்னெஞ்சேய்
மாகம்பத் தானை யுரித்தானை வண்**கச்சி**
**ஏகம்பத் தானை** இறைஞ்சு. 7

—க்ஷேத்திரத் திருவெண்பா

---

5. படம் - சித்திரம். இணைப்போது - இரண்டு திருவடிமலர்கள். தடம் - குளம்; நீர் நிலைகள்.

6. ஈர் அம்பு - இரண்டு அம்புகள். ஓர் அம்பே - திருமாலாகிய ஒரு அம்பே. மிகை - மிகுதியாய் பயன்படாது ஒழிந்தது.

7. இரந்தும் - மிக யாசித்தும். கன்னஞ்செய்வாயாகில் - கேட்பாயாகில். காலத்தால் - உயிருள்ள காலத்திலே. வல் நெஞ்சு - வலிய மனம். மா - பெரிய. கம்பம் - அசைகின்ற. ஆனை - யானை.

## திருத்தொண்டர் புராணம்

[12-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

விடையின் மேலவர் மலைமகள் வேண்ட
விரும்பு பூசனை மேவிவீற் றிருந்தே
இடையறு அறம் வளர்க் கும்வித் தாக
இகப ரத்திரு நாழிநெல் அளித்துக்
கடைய ராகியும் உயர்ந்தவ ராகியும்
காஞ்சி வாழ்பவர் தாஞ்செய் தீவினையும்
தடைப டாதுமெய்ந் நெறியடை வதற்காந்
தவங்க ளாகவும் உவந்தருள் செய்தார். 8

—திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம்

திருச்சிற்றம்பலம்

---

# திருக்கச்சி மேற்றளி

## திருநாவுக்கரசு சுவாமிகள்

## தேவாரம்

### திருநேரிசை [4-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

மறையது பாடிப் பிச்சைக்
கென்றகந் திரிந்து வாழ்வார்
பிறையது சடைமு டிமேற்
பெய்வளை யாள்தன் னோடும்

---

8. மலைமகள் - உமாதேவியார். வித்து - விதை. இகபரத்து இரு நாழி - இகமாகிய இம்மைக்கு ஒருநாழிகையும், பரமாகிய மறுமைக்கு ஒருநாழிகையும். (நாழி - ஒரு அளவு)

1. பிச்சைக்கு என்று – பிச்சையின் நிமித்தமாக. வாழ்வார் - வாழ வைப்பவர். பெய்வளை - இங்குக் கங்காதேவியாரைக் குறிக்கும். மேற்றளி - காஞ்சிநகர எல்லைக்குள் மேற்கில் உள்ள கோயில். (தளி - கோயில்.)

கறையது கண்டங் கொண்டார்
காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
இறையவர் பாடலாடல்
இலங்குமேற் றளிய னாரே. 1

மாலன மாயன் தன்னை
மகிழ்ந்தனர் விருத்த ராகும்
பாலனார் பசுப தியார்
பால்வெள்ளை நீறு பூசிக்
காலனைக் காலாற் செற்றார்
காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
ஏலநற் **கடம்பன் தாதை**
இலங்குமேற் றளிய னாரே. 2

விண்ணிடை விண்ண வர்கள்
விரும்பிவந் திறைஞ்சி வாழ்த்தப்
பண்ணிடைச் சுவையின் மிக்க
கின்னரம் பாடல் கேட்டார்
கண்ணிடை மணியின் ஒப்பார்
காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
**எண்ணிடை எழுத்து மானார்**
இலங்குமேற் றளிய னாரே. 3

சோமனை அரவி னோடு
சூழ்தரக் கங்கை சூடும்
வாமனை வான வர்கள்
வலங்கொடு வந்து போற்றக்

---

2. விருத்தர் ஆகும் பாலர் - இது விருத்த குமார பாலரான திருவிளையாடலைக் குறிக்கும். ஏலம் - வாசனை. கடம்பன் - முருகன்.

3. கின்னரம் - ஒரு பறவை. கண்ணிடைமணி - கண்மணி. எண்ணிடை எழுத்துமானார் - எண்ணும் எழுத்தும் ஆனவர்; உயிரின் அறிவினை விளக்குபவர்.

4. சோமன் - சந்திரன். வாமன் - வாமதேவன். ஏமம் - நடுயாமம்.

காமனைக் காய்ந்த கண்ணார்
  காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
ஏமநின் றாடும் எந்தை
  இலங்குமேற் றளிய னாரே. 4

ஊனவ னுயிரி னோடும்
  உலகங்கள் ஊழி யாகித்
தானவர் தனமு மாகித்
  தனஞ்சய னோடெ திர்ந்த
கானவர் காள கண்டர்
  காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
ஏனமக் கோடு பூண்டார்
  இலங்குமேற் றளிய னாரே. 5

மாயனாய் மால னாகி
  மலரவ னாகி மண்ணாய்த்
தேயமாய்த் திசையெட் டாகித்
  தீர்த்தமாய்த் திரிதர் கின்ற
காயமாய்க் காயத் துள்ளார்
  காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
ஏயமென் தோளி பாகர்
  இலங்குமேற் றளிய னாரே. 6

மண்ணினை யுண்ட மாயன்
  தன்னையோர் பாகங் கொண்டார்
பண்ணினைப் பாடி யாடும்
  பத்தர்கள் சித்தங் கொண்டார்

---

5. ஊன் - இங்கு உடல். தனஞ்சயன் - அருச்சுனன். காளகண்டர் - நீலகண்டர். ஏனம் அக்கோடு - பன்றிக் கொம்பு.

6. மாயனாய் - மாயையினை இயக்குபவனாய். தேயம் - தேசம். தீர்த்தம் - பரிசுத்தம். மென்தோளி - மெல்லிய தோள்களையுடைய உமாதேவியார்.

7. மயன்தன்னை ஓர் பாகம் கொண்டார் - இது சங்கர நாராயணர் வடிவம். சித்தம் - மனம்.

கண்ணினை மூன்றுங் கொண்டார்
காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
எண்ணினை யெண்ண வைத்தார்
இலங்குமேற் றளிய னாரே. 7

செல்வியைப் பாகங் கொண்டார்
**சேந்தனை மகனக் கொண்டார்**
மல்லிகைக் கண்ணி யோடு
மாமலர்க் கொன்றை சூடிக்
கல்வியைக் கரையி லாத
காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
எல்லியை விளங்க நின்றார்
இலங்குமேற் றளிய னாரே. 8

வேறிணை இன்றி என்றும்
விளங்கொளி மருங்கி னாளைக்
கூறியல் பாகம் வைத்தார்
கோளரா மதியும் வைத்தார்
ஆறினைச் சடையுள் வைத்தார்
அணிபொழிற் கச்சி தன்னுள்
ஏறினை ஏறும் எந்தை
இலங்குமேற் றளிய னாரே. 9

தென்னவன் மலையெ டுக்கச்
சேயிழை நடுங்கக் கண்டு
மன்னவன் விரலால் ஊன்ற
மணிமுடி நெரிய வாயால்

---

8. செல்வி - உமை. சேந்தன் - முருகன். மல்லிகைக் கண்ணி - மல்லிகைமாலை. கல்வியைக் கரையிலாத காஞ்சி - அளவில்லாத கல்வி பயின்ற பெரியோர் வாழுமிடம் காஞ்சிபுரம். "தொண்டைநாடு சான்றோருடைத்து" என்பதும் இதுவே. எல்லி - இரவு.

9. வேறு இணை - வேறு ஒப்பு. அரா - பாம்பு. ஆறு - கங்கை. ஏறு - இடபம்.

10. தென்னவன் - தென் திசையில் உள்ள இராவணன். சேயிழை - உமை. கன்னலின் - கரும்பு போன்ற. இன்னவற்கு - இவ்விராவண

கன்னலின் கீதம் பாடக்
கேட்டவர் காஞ்சி தன்னுள்
இன்னவற் கருளிச் செய்தார்
இலங்குமேற் றளிய னாரே. 10

திருச்சிற்றம்பலம்

---

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்
## தேவாரம்
### பண் - நட்டராகம் [7-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

நொந்தா ஒண்சுடரே நுனையே நினைந்திருந்தேன்
வந்தாய் போயறியாய் மனமே புகுந்துநின்ற
சிந்தாய் எந்தைபிரான் திருமேற் றளியுறையும்
எந்தாய் உன்னைஅல்லால் இனிஏத்த மாட்டேனே. 1

ஆட்டான் பட்டமையால் அடியார்க்குத் தொண்டுபட்டுக்
கேட்டேன் கேட்பதெல்லாம் பிறவாமை கேட்டொழிந்தேன்
சேட்டார் மாளிகைசூழ் திருமேற் றளியுறையும்
மாட்டே உன்னையல்லால் மகிழ்ந்தேத்த மாட்டேனே. 2

மோரூந்(து) ஒரொருகால் நினையா திருந்தாலும்
வேறுவந் தென்னுள்ளம் புகவல்ல மெய்ப்பொருளே
சேரூர் தண்கழனித் திருமேற் றளியுறையும்
ஏறே உன்னையல்லால் இனிஏத்த மாட்டேனே. 3

---

னுக்கு. அருளிச் செய்தார் - இங்கு வாழ்நாளும் வாளும் அருள் புரிந்தார்.

1. நொந்தா – தூண்டாத. ஒண்சுடரே - ஒளிமிக்க தீபமே. நுனையே - உன்னையே. சிந்தாய் - கருணைக்கடலே; சிந்தையில் இருப்பவனே.

2. ஆட்டான் – (ஆள் + தான்) நான் உமக்கு அடிமைப்பட்டமையால். சேடு – பெருமை, இங்கு: "வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை" என்ற திருக்குறள் அடி நினைக்கற்பாலது. மாடே - செல்வமே.

3. மோரூந்து - செருக்குற்று. ஏறே – ஆண்சிங்கமே.

உற்றார் சுற்றமெனும் அதுவிட்டு நுன்அடைந்தேன்
எற்றால் என்குறை(வு) என் இடரைத் துறந்தொழிந்தேன்
செற்றாய் மும்மதிலுந் திருமேற் றளியுறையும்
பற்றேன் உன்னைஅல்லால் பணிந்தேத்த மாட்டேனே. 4

எம்மான் எம்அனையென் றவரிட்(டு) இறந்தொழிந்தார்
மெய்ம்மால் ஆயினதீர்த் தருள்செய்யும் மெய்ப்பொருளே
கைம்மா ஈருரியாய் கனமேற் றளியுறையும்
பெம்மான் உன்னையல்லால் பெரிதேத்த மாட்டேனே. 5

நானேல் உன்னடியே நினைந்தேன் நினைதலுமே
ஊனேர் இவ்வுடலம் புகுந்தாயென் ஒண்சுடரே
தேனே இன்னமுதே திருமேற் றளியுறையும்
கோனே உன்னையல்லால் குளிர்ந்தேத்த மாட்டேனே. 6

கையார் வெஞ்சிலைநா ணதன்மேற் சரங்கோத்தே
எய்தாய் மும்மதிலும் எரிஉண்ண எம்பெருமான்
செய்யார் பைங்கமலத் திருமேற் றளியுறையும்
ஐயா உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே. 7

விரையார் கொன்றையினாய் விமலா இனி உன்னையல்லால்
உரையேன் நாவதனால் உடலில்லுயிர் உள்ளளவும்
திரையார் தண்கழனித் திருமேற் றளியுறையும்
அரையா உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே. 8

நிலையாய் நின்னடியே நினைந்தேன் நினைதலுமே
தலைவா நின்னினையப் பணித்தாய் சலமொழிந்தேன்

---

4. எற்றால் – எவ்விதத்தாலும். செற்றாய் – அழித்தாய். பற்றே – ஆதாரமே!

5. எம்மான் – எமது தந்தை. எம்அனை - எம்தாய். இட்டு – இவ்வுலகில் விட்டு. மால் – மயக்கம்.

6. நானேல் – நானே எனில். ஊன்ஏர் - ஊனால் ஆகிய. கோனே – அரசே.

7. சரம் – அம்பு. செய்ஆர் – வயல்கள் நிறைந்த. ஐயா – தலைவனே.

8. விரை – வாசனை. அரையா - தலைவனே.

சிலையார் மாமதில்சூழ் திருமேற் றளியுறையும்
மலையே உன்னையல்லால் மகிழ்ந்தேத்த மாட்டேனே. 9

பாரூர் பல்லவனூர் மதிற்காஞ்சி மாநகர்வாய்ச்
சீரூ ரும்புறவில் திருமேற்ற ளிச்சிவனை
ஆரூ ரன்னடியான் அடித்தொண்டன் ஆரூரன்சொன்ன
சீரூர் பாடல்வல்லார் சிவலோகஞ் சேர்வாரே. 10

திருச்சிற்றம்பலம்

---

## திருவோணகாந்தன் தளி

### சுந்தரமூர்த்தி சுவாமிகள்

### தேவாரம்

**பண் – இந்தளம்** [7-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

**நெ**ய்யும்பாலுந் தயிருங்கொண்டு
நித்தல்பூசனை செய்யலுற்றார்
கையில்ஒன்றும் காணம்இல்லைக்
கழலடிதொழு துய்யின்அல்லால்
ஐவர்கொண்டிங் காட்டஆடி
ஆழ்குழிப்பட் டழுந்துவேனுக்(கு)
உய்யுமாறென் றருளிச்செய்யீர்
ஓண காந்தன் தளியுளீரே. 1

திங்கள்தங்கு சடையின்மேலோர்
திரைகள்வந்து புரளவீசும்
கங்கையாளேல் வாய்திறவாள்
கணபதியேல் வயிறுதாரி

---

9. நிலையாய் - இடைவிடாமல். சலம் - சஞ்சலம்.

10. பார்ஊர் – பெருமை பொருந்திய. பல்லவன் ஊர் - பல்லவர் இராசதானி. புறவு - முல்லை.

1. செய்யல் உற்றார் – (அன்பர்கள்) செய்யத் தொடங்கினார்கள். காணம் – பொற்காசு. ஐவர் - ஐம்புலன். ஆட்ட - அலைக்க. ஆறு - வழி.

GOV... TRIPLICANE P.O. MADRAS 22 AUG 1955

அங்கைவேலோன் குமரன்பிள்ளை
  தேவியார்கொற் றட்டியாளால்
உங்களுக்காட் செய்யமாட்டோம்
  ஓணகாந்தன் தளியுளீரே. 2

பெற்றபோழ்தும் பெருதபோழ்தும்
  பேணிஉம்கழல் ஏத்துவார்கள்
மற்றோர்பற்றிலர் என்றிரங்கி
  மதியுடையவர் செய்கைசெய்யீர்
அற்றபோழ்தும் அலந்தபோழ்தும்
  ஆபற்காலத் தடிகேள்உம்மை
ஒற்றிவைத்திங் குண்ணவாமோ
  ஓணகாந்தன் தளியுளீரே. 3

வல்லதெல்லாம் சொல்லிஉம்மை
  வாழ்த்தினும் வாய்திறந்தொன்(று)
இல்லைஎன்னீர் உண்டும்என்னீர்
  எம்மைஆள்வான் இருப்பதென்னீர்
பல்லைஉக்க படுதலையிற்
  பகலெலாம்போய்ப் பலிதிரிந்திங்(கு)
ஒல்லைவாழ்க்கை ஒழியமாட்டீர்
  ஓணகாந்தன் தளியுளீரே, 4

கூடிக்கூடித் தொண்டர்தங்கள்
  கொண்டபாணி குறைபடாமே
ஆடிப்பாடி அழுதுநெக்கங்(கு)
  அன்புடையவர்க் கின்பம்ஓரீர்

---

2. ஏல் - எனில். கோற்றட்டியாள் – யாழ் வாசிப்பவள். ஆல் - ஆதலால்.

3. பற்று - ஆதரவு. அற்றபோழ்தும் – கைப்பொருள் இல்லாத காலத்தும். அலந்தபோழ்தும் – துன்பப்படுங் காலத்தும். ஒற்றி - அடகு.

4. உண்டும் - உள்ளதும். ஒல்லைவாழ்க்கை – பழமையாக வரும் பலிஏற்கும் வாழ்க்கை.

5. பாணி - பாட்டு. இன்பம் ஓரீர் – இன்பம் தரமாட்டீர். பற்று - பிடி.

தேடித்தேடித் திரிந்தெய்த்தாலும்
சித்தம்என்பால் வைக்கமாட்டீர்
ஓடிப்போகீர் பற்றுந்தாரீர்
ஓணகாந்தன் தளியுளீரே. 5

வாரிருங்குழல் வாள்நெடுங்கண்
மலைமகள்மது விம்முகொன்றைத்
தாரிருந்தட மார்புநீங்காத்
தையலாள்உல குய்யவைத்த
காரிரும்பொழிற் கச்சிமூதூர்க்
காமக்கோட்டம்உண் டாகநீர்போய்
ஊரிடும்பிச்சை கொள்வதென்னே
ஓணகாந்தன் தளியுளீரே. 6

**பொய்ம்மையாலே போதுபோக்கிப்**
**புறத்தும்இல்லை அகத்தும்இல்லை**
மெய்ம்மைசொல்லி ஆளமாட்டீர்
மேலைநாள்ஒன் றிடவுங்கில்லீர்
எம்மைப்பெற்றால் ஏதும்வேண்டீர்
ஏதுந்தாரீர் ஏதும்ஓதீர்
உம்மையன்றே எம்பெருமான்
ஓணகாந்தன் தளியுளீரே. 7

வலையம்வைத்த கூற்றம்மீவான்
வந்துநின்ற வார்த்தைகேட்டுச்
சிலைஅமைத்த சிந்தையாலே
திருவடிதொழு(து) உய்யின்அல்லால்

---

6. வார் இருங் கூந்தல் - நீண்டு அடர்ந்த கூந்தல். மது - தேன். விம்மு - பெருகுகின்ற. காமக்கோட்டம் - காஞ்சிபுரத்தில் உமாதேவியாரால் 32 அறங்களையும் வளர்த்த அறச்சாலை.

7. பொய்ம்மையாலே போது போக்கி - இங்கு "பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையனேன்" என்பது திருவாசகம். மேலைநாள் - பிற்காலத்தில். உம்மையன்றே - உம்மையல்லது இல்லை.

கலையமைத்த காமச்செற்றக்
குரோதலோபம் மதவருடை
உலைஅமைத்திங் கொன்றமாட்டேன்
ஓணகாந்தன் தளியுளீரே. 8

வாரமாகித் திருவடிக்குப்
பணிசெய்தொண்டர் பெறுவதென்னே
ஆரம்பாம்பு வாழ்வதாரூர்
**ஒற்றியூரேல் உம்மதன்று**
தாரமாகக் கங்கையாளைச்
சடையில்வைத்த அடிகேள்உந்தம்
ஊரும்காடு உடையும்தோலே
ஓணகாந்தன் தளியுளீரே. 9

ஓவணமேல் எருதொன்றேறும்
ஓணகாந்தன் தளியுளார்தாம்
ஆவணஞ்செய் தாளுங்கொண்டு
அரைதுகிலொடு பட்டுவீக்கிக்
கோவணமேற் கொண்டவேடம்
கோவையாக**ஆரூரன்**சொன்ன
பாவணத்தமிழ் பத்தும்வல்லார்
பறையுந்தாஞ்செய்த பாவந்தானே. 10

திருச்சிற்றம்பலம்

---

8. வலையம் வைத்த - பிடிப்பதற்குப் பாசத்தை வைத்த. மீவான் - மேலிடமாகிய ஆகாயத்தில். சிலை அமைத்த - இங்கு, தளர்ச்சியடைந்த. கலை - நூல். உலை - இங்குக் கெடுவழி.

9. வாரம் ஆதி - அன்புபூண்டு. ஒற்றியூர் - ஒற்றி வைக்கப்பட்ட ஊர். தாரம் - மனைவி.

10. ஓவண்(ண)ம் ஏல் - ஓங்காரத்தின் உருவத்தைப் பெற்ற. ஆவணம் - முறியோலை. வீக்கி - கட்டி. பறையும் - கெட்டு ஒழியும்.

# திருவனேகதங்காவதம்

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

## தேவாரம்

பண் - இந்தளம் [7-ஆம் திருமுறை]

திருச்சிற்றம்பலம்

**தே**னெய்புரிந் துழல் செஞ்சடைஎம்பெரு
மான(து)இடம்திகழ் ஐங்கணையக்
கோனைஎரித்தெரி யாடி இடங்குல
வானதிடம்குறை யாமறையாம்
மானையிடத்ததொர் கையனிடம்மதம்
மாறுபடப்பொழி யும்மலைபோல்
யானைஉரித்தபி ரானதிடங்கலிக்
கச்சிஅனேகதங் காவதமே. 1

கூறுநடைக்குழி கட்பகுவாயன
பேயுகந்தாடநின் றோரியிட
வேறுபடக்குட கத்திலையம்பல
வாணன்நின்றாடல் விரும்பும்இடம்
ஏறுவிடைக்கொடி எம்பெருமான் இமை
யோர்பெருமான்உமை யாள்கணவன்
ஆறுசடைக்குடை அப்பனிடங்கலிக்
கச்சிஅனேகதங் காவதமே. 2

கொடிகளிடைக்குயில் கூவும்இடம்மயில்
ஆலுமிடம்மழு வாளுடைய
கடிகொள்புனற்சடை கொண்டநுதற்கறைக்
கண்டன் இடம்பிறைத் துண்டமுடிச்

---

1. தேன் - தேன் வண்டுகள். நெய் புரிந்து - நெய்யை விரும்பி. ஐங்கணை அக்கோன் - மன்மதன். மறையாம் மானை - வேதமாகிய மானை.

2. கூறு நடை - குறுகிய நடை. பகுவாய் - பிளந்த வாய். ஓரி - நரி. குடகம் - மேற்கு. தில்லை - தில்லை. குடகத்தில்லை அம்பலவாணன் - திருப்பேரூர்த்தலத்தில் எழுந்தருளிய நடராசப் பெருமான்.

செடிகொள்வினைப்பகை தீரும்இடந்திரு
வாகும்இடம்திரு மார்பகலத்(து)
அடிகளிடம்அழல் வண்ணன்இடங்கலிக்
கச்சிஅனேகதங் காவதமே. 3

கொங்குநுழைத்தன வண்டறைகொன்றையும்
கங்கையுந்திங்களுஞ் சூடுசடை
மங்குல்நுழைமலை மங்கையைநங்கையைப்
பங்கினில்தங்க உவந்தருள்செய்
சங்குகுழைச்செவி கொண்டருவித்திரள்
பாயவியர்த்தழல் போலுடைத்தம்
அங்கைமழுத்திகழ் கையன்இடம்கலிக்
கச்சிஅனேகதங் காவதமே. 4

பைத்தபடத்தலை ஆடரவம்பயில்
கின்றஇடம்பயி லப்புகுவார்
சித்தம்ஒருநெறி வைத்தஇடம்திகழ்
கின்றஇடந்திரு வானடிக்கே
வைத்தமனத்தவர் பத்தர்மனங்கொள
வைத்தஇடம்மழு வாளுடைய
அத்தன்இடம்அழல் வண்ணன்இடம்கலிக்
கச்சிஅனேகதங் காவதமே. 5

**தண்டமுடைத்தரு மன்தமர்என்தம**
**ரைச்செயும்வன்துயர் தீர்க்குமிடம்**
பிண்டமுடைப்பிற வித்தலைநின்று
நினைப்பவர்ஆக்கையை நீக்குமிடம்

---

3. நுதல் - நெற்றி. இடம் திரு - இடதுபாகம் அம்பிகை.

4. கொங்கு - வாசனை. மங்குல் - மேகம். நுழை - தவழ்கின்ற. அங்கை - அகம் + கை.

5. பைத்த - விரிந்த. பயிலப் புகுவார் - தவத்தில் பழகுபவர்கள். திருவான் - எல்லாச் செல்வங்களையும் உடையவன்.

6. தண்டம் - தண்டாயுதம். தருமன் தமர் - யமதூதர். கருநஞ்சை - கொடிய விஷத்தை.

கண்டமுடைக்கரு நஞ்சைநுகர்ந்தபி
ரானதிடங்கடல் ஏழுகடந்(து)
அண்டமுடைப்பெரு மானதிடங்கலிக்
கச்சிஅனேகதங் காவதமே. 6

கட்டுமயக்கம் அறுத்தவர்கைதொழு
தேத்தும்இடம்கதி ரோன்ஒளியால்
விட்டும்இடம்விடை ஊர்திஇடம்குயிற்
பேடைதன்சேவலொ டாடும்இடம்
மட்டுமயங்கிஅ விழ்ந்தமலர்ஒரு
மாதவியோடு மணம்புணரும்
அட்டபுயங்கப் பிரானதிடங்கலிக்
கச்சிஅனேக தங்காவதமே. 7

புல்லிஇடந்தொழு துய்தும்என்றவர்
தம்புரமூன்றும் பொடிபடுத்த
வில்லிஇடம்விர வாதுயிர்உண்ணும்வெங்
காலனைக்கால்கொடு வீந்(து)அவியக்
கொல்லிஇடங்குளிர் மாதவிமவ்வல்
குராவகுளங்குருக் கத்திபுன்னை
அல்லியிடைப்பெடை வண்டுறங்கும்கலிக்
கச்சிஅனேகதங் காவதமே. 8

சங்கையவர்புணர் தற்கரியான்தள
வேனகையாள் தவிராமிகுசீர்
மங்கையவள்மகி ழச்சுடுகாட்டை
நட்டம்நின்றாடிய சங்கரன்எம்

---

7. கட்டுமயக்கம் - பாசத்தினால் உண்டாகிய மயக்கம். அறுத்தவர் - நீக்கிய அடியவர்கள். விட்டவிடம் - பிரகாசிக்கும் இடம். அட்டபுயங்கம் - அட்டபுயங்கம் என்னும் ஒரு கூத்து.

8. புல்லி - எல்லாப் பொருளிலும் தழுவி. விரவாது - பகைத்து. வீந்து அவிய - இறந்துபட, மாதவி - வசந்த மல்லிகை. மவ்வல் - முல்லை. அல்லி - உள் இதழ்.

9. சங்கையவர் - சந்தேகமுள்ளவர். புணர்தற்கு - அடைவதற்கு. தளவு ஏல் நகை - முல்லையைப் போன்ற பற்களையுடைய. அனல் - மழு.

அங்கையினல்லனல் ஏந்துமவன்கனல்
சேரொளிஅன்னதோர் பேரகலத்
தங்கையவன்உறை கின்றஇடங்கலிக்
கச்சிஅனேகதங் காவதமே. 9

வீடுபெறப்பல ஊழிகள்நின்று
நினைக்கும்இடம்வினை தீரும்இடம்
பீடுபெறப்பெரி யோர*திடங்
கலிக்கச்சியனேகதங் காப்பனிடம்
பாடும்இடத்தடி யான்புகழ்ஊரன்
உரைத்தஇம்மாலைகள் பத்தும்வல்லார்
கூடும்இடம்சிவ லோகன்இடங்கலிக்
கச்சிஅனேகதங் காவதமே. 10

திருச்சிற்றம்பலம்

---

## திருக்கச்சிநெறிக் காரைக்காடு

### திருஞான சம்பந்த சுவாமிகள்

### தே வா ர ம்

**பண் - பஞ்சமம்** *[3-ஆம் திருமுறை]*

திருச்சிற்றம்பலம்

**வா**ரணவு முலைமங்கை பங்கினராய் அங்கையினில்
போரணவு மழுவொன்றங் கேந்திவெண் பொடியணிவர்
காரணவு மணிமாடங் கடைநவின்ற கலிக்கச்சி
நீரணவு மலர்ப்பொய்கை நெறிக்காரைக் காட்டாரே. 1

காரூரும் மணிமிடற்றூர் கரிகாடர் உடைதலைகொண்டு
ஊரூரன் பலிக்குழல்வார் உழைமானின் உரியதளர்

---

10. பீடு - பெருமை. ஊரன் - நம்பியாரூரன்.

1. வார் - கச்சை. அணவும் - பொருந்தும். கார் - மேகம். கடை நவின்ற - சிறந்து விளங்கும். காரை - காரைமரம்.

* பா - ம்: திடங் கொண்டு மேவினர் தங்களைக் காக்குமிடம்.

தேரூரும் நெடுவீதிச் செழுங்கச்சி மாநகர்வாய்
நீரூரும் மலர்ப்பொய்கை நெறிக்காரைக் காட்டாரே. 2

கூறணிந்தார் கொடியிடையைக் குளிர்சடைமேல் இளமதியோ
டாறணிந்தார் ஆடரவம் பூண்டுகந்தார் ஆன்வெள்ளை
ஏறணிந்தார் கொடியதன்மேல் என்பணிந்தார் வரைமார்பில்
நீறணிந்தார் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 3

பிறைநவின்ற செஞ்சடைகள் பின்தாழப் பூதங்கள்
மறைநவின்ற பாடலோ டாடலராய் மழுவேந்திச்
சிறைநவின்ற வண்டினங்கள் தீங்கனிவாய்த் தேன்கதுவும்
நிறைநவின்ற கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 4

அன்றாலின் கீழிருந்தங் கறம்புரிந்த அருளாளர்
குன்றாத வெஞ்சிலையிற் கோளரவ நாண்கொளுவி
ஒன்றாதார் புரம்மூன்றும் ஓங்கெரியில் வெந்தவிய
நின்றாருங் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 5

பன்மலர்கள் கொண்டடிக்கீழ் வானோர்கள் பணிந்திறைஞ்ச
நன்மையிலா வல்லவுணர் நகர்மூன்றும் ஒருநொடியில்
வின்மலையின் நாண்கொளுவி வெங்கணையா லெய்தழித்த
நின்மலனார் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 6

புற்றிடைவாள் அரவினொடு புனைகொன்றை மதமத்தம்
எற்றொழியா அலைபுனலோ டிளமதியம் ஏந்துசடைப்

---

2. கார் - கருமை. உழைமான் - இளமான். அதளர் - தோலுடையர்.

3. கூறு - பாகம். கொடியிடை - உமாதேவியார். ஆன் வெள்ளை - வெள்ளிய இடபம். கொடியதன்மேல் ஏறு அணிந்தார் - இடபக் கொடியினை ஏற்றார்.

4. நவின்ற - விளங்கிய. மறை - வேதம். சிறை - இறகு. நிறைநவின்ற - மிக நிறைந்த.

5. அன்று - (உமாதேவியார் பிரிந்த) அக்காலத்தில். ஆல் - ஆல மரம். குன்றாத - வளையாத. ஒன்றாதார் - திரிபுரர். நின்றார் - போர் புரியாமல் நின்றார்.

6. பன்மலர் - பலவித மலர்கள். நன்மையிலா - நற்செய்கை இல்லாத. நின்மலனார் - பரிசுத்தமானவர்.

பெற்றுடையார் ஒருபாகம் பெண்ணுடையார் கண்ணமரும்
நெற்றியினர் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 7

ஏழ்கடல்சூழ் தென்னிலங்கைக் கோமானை யெழில்வரைவாய்த்
தாழ்விரலால் ஊன்றியதோர் தன்மையினர் நன்மையினர்
ஆழ்கிடங்குஞ் சூழ்வயலு மதில்புல்கி யழகமரும்
நீள்மறுகிற் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 8

ஊண்டானும் ஒலிகடல்நஞ் சுடைதலையிற் பலிகொள்வர்
மாண்டார்தம் எலும்பணிவர் வரியரவோ டெழிலாமை
பூண்டாரும் ஓரிருவர் அறியாமைப் பொங்கெரியாய்
நீண்டாருங் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 9

குண்டாடிச் சமண்படுவார் கூறைதனை மெய்போர்த்து
மிண்டாடித் திரிதருவார் உரைப்பனகள் மெய்யல்ல
வண்டாருங் குழலாளை வரையாகத் தொருபாகம்
கண்டாருங் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டாரே. 10

கண்ணாருங் கலிக்கச்சி நெறிக்காரைக் காட்டுறையும்
பெண்ணாருந் திருமேனிப் பெருமானை தடிவாழ்த்தித்
தண்ணாரும் பொழிற்காழித் **தமிழ்ஞான சம்பந்தன்**
பண்ணாருந் தமிழ்வல்லார் பரலோகத் திருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

---

**காஞ்சி மாநகரம் தேவாரம் முற்றிற்று**

---

7. மதமத்தம் - செழித்த ஊமத்தை மலர். எற்று - மோதி. ஒரு பாகம் - இடது பாகம்.

8. எழில் வரை - மேரு மலை. புல்கி - நிறைந்து. மறுகு - வீதி.

9. ஊண் தானும் - உணவுதானும். மாண்டார் - இறந்த பிரம விஷ்ணு முதலியோர். ஆமை - ஆமையோடு.

10. கூறை - ஆடை. மெய் - உடலில். மெய்யல்ல - உண்மைகள் அல்ல. வரை ஆகத்து - மலை போன்ற அழகிய உடலில்.

11. கண் ஆரும் - அழகு பொருந்திய. தண் ஆரும் - குளிர்ச்சி பொருந்திய. பரலோகம் - சிவலோகம்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி

# அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்

அவர்கள் காஞ்சிபுரத்தில் நிறுவியுள்ள

# பேரறக் கட்டளைகள்

## 1

## The Three Great Saints Thevaram Prize Endowment Rs. 5,000 at Conjeevaram

This endowment is founded by His Holiness Sri-la-Sri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal of Tirupanandal to encourage the study of the Thevarams of the Three Great Saints of Southern India viz., THIRUGNANA SAMBANDAR, THIRUNAVUKKARASAR & SUNDARAMOORTHY SWAMIGAL and inspire thereby divine spirit in human beings and mould them into good citizens. The Saints had graced the world with their soul-stirring devotional songs in praise of the Almighty, travelled throughout the land and toiled for the uplift of humanity, performing miracles such as,

(i) bringing out a bride's form with life from dead-bones, (எலும்பைப் பெண்ணுருவாக்கியது)

(ii) causing a stone boulder to float in the sea like a raft, (கல்லே தெப்பமாக மிதந்தது)

(iii) bringing into existence a boy devoured by a crocodile (முதலையுண்ட பாலனை அழைத்தது)

and similar others.

2. This endowment shall consist of Government Securities of the face value of Rs. 5,000 (Rupees Five Thousand only) bearing interest at 3% (Conversion Loan of 1946 G. P. Notes CA. 093569 for Rs. 1,000, CA. 093624 for Rs. 2,000 and CA. 093625 for Rs. 2,000). Stock Certificate No. MS. 1932. The administration of the fund shall vest in the committee

managing the funds of the Kasivasi Swaminatha Swamigal Sentamil Kalloori at Tirupanandal.

3. Out of the annual interest accruing from the endowed capital a sum of Rs. 125 (Rupees One Hundred and Twenty Five) will be spent for the award of two cash prizes of Rs. 75 and Rs. 50 to the best Thevaram singers. The balance of interest shall be utilised to meet other incidental charges that may be incurred in printing etc. of the booklets containing the selection of Thevarams. The amount remaining after meeting out the above, shall be added to the corpus of the Fund.

4. The competition is open to the Girl students of IV to VI Form or any other classes that may be substituted as equivalent to them in all the High Schools situated within the limits of the CONJEEVARAM Municipality. They shall memorise according to proper 'Pans' in fine music not less than 15 stanzas from the Thevaram of each Saint at least one stanza from every Pathikam amounting in all to 50 stanzas out of those contained in the booklets which will be issued by the Committee.

5. The following are the conditionsf or the award of the prizes:

(*a*) The prizes shall be awarded to the successful competitors irrespective of Religion, Caste or Creed.

(*b*) The pupils competing for the prize shall memorise and sing according to proper 'Pans' in fine music with full comprehension of the import of the selected Thevarams issued in the form of a booklet (vide para 4 supra).

(*c*) Intending candidates shall send their applications to the Principal of the Sentamil Kalloori, Tirupanandal through the Heads of their respective Schools before the 31st July of each year. The selected candidates will be supplied free, the booklets containing the Thevarams through their respective school authorities

(d) The respective school authorities shall hold a preliminary examination and select five of the best candidates and present them for the final examination which will be conducted by an examining committee composed of the Heads of the respective schools from which the candidates appear for the competition and the Mnnicipal Chairman of the place. The final examination shall be held in December each year and two candidates shall be selected for the award of the prizes. The decision of the majority shall be final.

6. The prize winners of one year shall not compete for the prize a second time.

7. The result of the examination held and the names of the candidates selected for the award of the prize shall be intimated to the committee of the Sri K. V. S. S. Kalloori, Tirupanandal, which will arrange to send the prize amount to the winners through their respective school authorities.

8. The first prize shall be Rs. 75 and second Rs. 50 in cash and they shall be awarded to the candidates scoring the highest number of marks in the final examination and the next highest number of marks respectively, at the place to be selected by the Examining committee every year.

9. The K. V. S. S. Kalloori committee shall send each year an account of the receipts and expenditure together with the names of the prize winners to the Donor and his successors-in-interest.

The funds shall not be diverted to any purpose other than the one intended by the Donor.

*Dated 15—8—48* *(Sd.) Kasivasi Arulnandi Tambiran*

---

**Registered at Tiruvadamarudur Sub Registrar's Office on** *18—8—48* **as No.** *41* **of** *1948* **Book** *4.* **Volume No.** *42* **Pages** *176* **to** *179.* **(on General Stamp of Rs.** *75***).**

## 2

## Sri Manicka Vachaka Swamigal Memorial Scholarship at Kancheepuram

### Endowment Rs. 7,000

This endowment is founded by His Holiness Sri-la-Sri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal of Tirupanandal in revered memory of Saint Manicka Vachaka Swamigal who graced the world and sung soul-stirring devotional songs of Tiruvachakam and Tirukovaiyar in praise of Lord Siva for the uplift of humanity.

2. This endowment shall consist of Government Securities of the face value of Rs. 7,000 (Rupees Seven Thousand only) bearing interest at 3%. Conversion Loan of 1946. Government Promissory Notes No. CA. 109215 for Rs 1000, CA. 109218 for Rs. 1000, CA- 109219 for Rs. 1000, CA. 104581 for Rs. 500, CA. 109222 for Rs 1000, CA. 109223 for Rs. 1000, CA. 109224 for Rs. 1000 CA 104583 for Rs. 500. The administration of the fund shall vest in the donor and his successors-in-interest.

3. This endowment is created for granting scholarships to poor, intelligent and deserving girl students of the IV, V & VI Forms of the Somasundara Kanya Vidyalaya at Kancheepuram irrespective of their religion caste or creed. A sum of Rs. 200 (Rupees Two hundred only) shall be set apart for granting 4 scholarships at Rs 50 each per annum. The number and amount of scholarships may vary according to the interest received on the capital.

4. A Committee consisting of the Chairman of the Municipal Council Kancheepuram, the Municipal Commissioner, Kancheepuram, the Head Mistress of the Somasundara Kanya Vidyalaya and the Secretary of the Somasundara Kanya Vidyalaya

shall make the selection each year. The students competing for the scholarships shall memorise and sing Tiruvembavai and Tirupalliyezhuchi of Sri Manickavasaga Swamigal each year in addition to 25 pasurams from Tiruvachakam previously prescribed by the committee. The 25 pasurams of Tiruvachakam selected by the committee shall be announced in the month of January each year so that the students shall have sufficient time to memorise them. The portion so prescribed shall vary each year. The examination shall consist of two parts, one oral and the other written, for each of which 50 marks will be allotted. Intending candidates shall send their applications to the Chairman, Municipal Council through the Head of the said Vidyalaya on or before the 1st June of each year.

5. The competition and selection shall be held by the committee in the month of June soon after the reopening of the said Vidyalaya. On receipt of intimation of the names of the selected candidates a sum of Rs. 20 per month for ten months will be sent to the Headmistress, Somasundara Kanya Vidyalaya, Kancheepuram for disbursement to the selected candidates. The Headmistress shall obtain their acquittance and forward it to the donor every month.

6. If the scholarship holder shall discontinue her studies in the middle of the term the fact shall be intimated to the donor and the amount thus left unpaid shall be added to the corpus of the fund.

7. If the scholarship holder does not get promotion to a higher form or class she shall not be eligible for the scholarship.

8. The balance left over the stipulated scholarship sum of Rs. 200 shall be spent in meeting the incidental expenses as M. O. Commission for sending the scholarship amount, postage etc.

9. If in any year the committee does not meet and make the selection the donor and his successors-in-interest shall be at liberty to utilise the amount for a like purpose in another school as he deems fit.

*Dated 24—4—50* *(Sd.) Kasivasi Arulnandi Tambiran*

---

**Registered at Tiruvidamarudhur Sub Registrar's Office on** *24—4—50* **as No.** *31* **of** *1950* **in Book No. IV Volume** *43* **pages** *128—130*.

---

## 3

## காஞ்சிபுரத்தில் ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரியர் நினைவு அன்னம்பாலிப்பு சேமவைப்பு ரூ. 7,000

காஞ்சிபுரத்துச் சிவ வேதியரும், குமரகோட்டத்து அருச்சகராயிருந்த காளத்தியப்ப சிவாசாரியரது தவப்புதல்வரும், தென்மொழி வடமொழிக் கடல்களைக் கரைகண்டுணர்ந்தவரும், நவின்றோர்க் கினிமையும் நன்மொழி புணர்த்தலும் நவையின்மையும் அமையக் கவிபாடலில் வல்ல அருட் புலமையாளரும், 10346 பாடல்களையுடைய அறுமுக முடையவோர் அமலன் மாக்கதையாகிய **கந்த புராணம்** பாடுவதற்குத் "**திகடசக்கர**" என்று முருகப்பெருமானால் அடியெடுத்துக் கொடுக்கப்பெற்றவரும், புராண நன்னயகமாகிய இந்நூலைக் குமரகோட்டத்தில் அரங்கேற்றுவதற்குத் தொண்டை மண்டலத்து இருபத்துநான்கு கோட்டகத்தாராலும் தந்தப் பல்லக்குச் சிவிகையும் தாங்கிவரப்பெற்ற பெருமையாளரும், புலவர் குழாம் மகிழ்ந்து போற்றச் "சகாத்தம் எழுநூற்றின் மேலாய் இலகு கந்தபுராணம்" அரங்கேற்றிய வித்தாரகவியும், மாசித் திங்களில் மிருகசீருஷ நாளில் சிவப்பேறு பெற்றவருமாகிய கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளை நினைவு கூர்ந்து, அவர்கள் குலத்தில் உதித்த சிவவேதியர்களுக்கும், மற்றுமுள்ள சிவனடியார்களுக்கும் ஆண்டுதோறும் மாசி

மிருகசிருஷ நாளில் அன்னம் பாலித்தற் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இந்நிதி நிறுவப்பெற்றது. இது 'காஞ்சிபுரத்தில் ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரியர் நினைவு அன்னம்பாலிப்பு' என்று பெயர் பெறும்.

2. இதற்குரிய மூலதனம் ரூ. 7000 (ரூபா ஏழாயிரம்). இது ஆண்டொன்றுக்கு ரூ. 100-க்கு ரூ. 3 வீதம் வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரங்களாக உள்ளது. (கன்வர்ஷன் லோன் ஆப் 1946 சிஏ. 131519 ரூ. 5000; சிஏ. 129808 ரூ. 1000, சிஏ. 129809 ரூ. 1000 ஆக ரூபாய் 7000). இந்நிதி நம்பேரிலும் நமக்குப் பின்வரும் உரிமை உள்ளவர்பேரிலும் இருந்துவரும்.

3. இம்மூலதனத்தினின்று கிடைக்கும் வட்டித்தொகையைக்கொண்டு காஞ்சிபுரத்தில் 'கருக்கடல் முருக்கி முத்திக் கரைதருகாந்த நூல்' அரங்கேற்றப் பெற்ற குமரகோட்டத்தில் ஆண்டுதோறும் மாசித் திங்கள் மிருகசீருஷ நட்சத்திரம் கூடிய நாளில் சிவவேதியர்க்கும் சிவனடியார்களுக்கும் அன்னம்பாலிக்கப் பயன்படுத்தப்பெறும்.

4. ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி வருமானத்திற்கு ஏற்பவும், கால விலைக்கு ஏற்பவும், தயாரிக்கப்பெறும் திட்டஜாப்தாவின்படி இவ்வன்னம்பாலிப்பு நடைபெறும்.

5. இத்தருமம் வேறு எம்முறையிலேயும் பயன்படுத்தப் பெறமாட்டாது. நம்மாலும் நமக்குப் பின்வரும் உரிமையுள்ளவர்களாலும் இத்தருமம் பரிபாலனஞ் செய்யப்பெற்றுவரும்.

Tirupanandal
27—2—1953. *(Sd.) Kasivasi Arulnandi Tambiran*

---

**Registered at Tiruvidamarudhur Sub Registrar's Office on *2—3—53* as No. *21*, Book No. 4, Volume No. 44, pages 262—*264*.**

749 / A... TRIPLICANE P.O., MADRAS



# 4

## காஞ்சிபுரத்தில்
## கமலை வெள்ளியம்பலவாணவர் நினைவு
## முதுமொழிமேல் வைப்புப் பரிசு சேமவைப்பு ரூ. 5000

கமலை என்ற திருவாரூரிற்பிறந்தவரும், தருமபுரவாதீனத்து நான்காவது குரவராகிய ஸ்ரீ மாசிலாமணி தேசிகஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளிடத்தில் சைவசந்நியாசம் பெற்றவரும், ஸ்ரீ காசியில் ஸ்ரீ ஆதி குமரகுருபரசுவாமிகளிடத்தில் கல்வி பயின்று தென்மொழி வடமொழிக் கடல்களைக் கரைகண்டுணர்ந்தவரும், தருமையாதீனத்து ஐந்தாவது மகாசந்நிதானம் ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக சுவாமிகளிடம் ஞானதீக்கை பெற்றவரும், திருநெல்வேலியில் சிந்துபூந்துறையில் தங்கியிருந்த காலத்துக் கற்பனைக் களஞ்சியம் எனப் போற்றப்பெறும் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளுக்கு இலக்கணக் கல்வி நிரம்பச் செய்தவரும், கந்தபுராணச் சுருக்கம் இயற்றிய சம்பந்த சரணலய சுவாமிகள் முதலானவர்களுக்குப் போதகாசிரியராகத் திகழ்ந்தவரும், தருமையாதீன முதற் குரவராகிய குரு ஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த "முத்தி நிச்சயம்" எனும் பண்டார சாத்திரத்துக்குப் பேருரைஒன்றும் சிற்றுரை ஒன்றும் அருளிச் செய்தவரும், சைவசமய சந்தானசாரியருள் ஒருவராகிய அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் அருளிய "சிவ ஞானசித்தியார்" எனும் சைவ சித்தாந்த சாத்திரத்துக்கு "ஞானவரண விளக்கம்" எனும் பாஷ்யம் இயற்றியவரும், நீதிகளை விளக்கும் வரலாறு முன்னும் அதற்கியைந்த திருக்குறளைப் பின்னும் அமைத்துப் பாடப்பெற்றதும் - அறம் பொருள் இன்பங்களை விளக்கும் நீதிகட்குத் திருக்குறளும், வீட்டின் பகுதியை விளக்கச் சைவ சமய சந்தானசாரியருள் ஒருவராகிய உமாபதி சிவாசாரியசுவாமிகள் அருளிய சித்தாந்த சாத்திரங்களுள் ஒன்றாகிய திருவருட் பயனும் அமைக்கப் பெற்றதும்-இனிய எளிய 196 வெண்பாக்கள் கொண்டதும் ஆகிய முதுமொழிமேல் வைப்பு என்னும் நூலை அருளியவரும், சிதம்பரத்தில் சிவப்பேறு அடைந்தவருமாகிய **கமலை வெள்ளி**

**யம்பலவாண முனிவரை** நினைவு கூர்தற்பொருட்டும், அவர் அருளிய **முதுமொழிமேல் வைப்பினை** மாணவர் கசடறக் கற்று அதற்குத்தக நின்று நல்வாழ்வு பெறுதற் பொருட்டும் திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இப்பரிசு நிறுவப்பெற்றது. இது 'காஞ்சிபுரத்தில் கமலை வெள்ளியம்பலவாண முனிவர் நினைவு முதுமொழிமேல் வைப்புப் பரிசு' எனப்பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 5000 (ரூபாய் ஐயாயிரம்). இத்தொகை நூற்றுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 3 வீதம் வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யவேண்டும். 3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946. இது காஞ்சிபுர நகராட்சி மன்றத்தினரின் பரிபாலனத்தில் இருக்கும்.

3. இம்முதற் பொருளினின்று ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டித் தொகை ரூ. 150. இவ்வட்டித் தொகையினின்று ரூ. 140 பரிசாக அளிக்கப் பயன்படுத்தவேண்டும். எஞ்சிய தொகையைப் பரிசுத் தேர்வு நடத்துதல் பரிசளிப்பு விழா முதலிய செலவுகளுக்குத் தேவையிருப்பின் பயன்படுத்தலாம்.

4. பரிசுக்குரிய கட்டுப்பாடுகளாவன :—

(அ) காஞ்சிபுர நகர ஆட்சி எல்லைக்குட்பட்ட உயர்நிலைக் கல்விக்கூடங்களில் 4, 5, 6 பாரங்களில் படிக்கும் மாணவர்க்கு ஆண், பெண், சாதி, மத, குல வேறுபாடின்றிப் பரிசுகள் வழங்கப்பெறும்.

(ஆ) பரிசுகளுக்குப் போட்டியிடுபவர் கமலை வெள்ளியம்பலவாண முனிவர் அருளிச் செய்த முதுமொழிமேல் வைப்பு எனும் நூலில் 98 வெண்பாக்களை மனப்பாடஞ் செய்தல் வேண்டும்.

(இ) ஆங்கிலயாண்டில் ஒற்றைப்படை எண் உள்ள ஆண்டில் முதுமொழிமேல் வைப்பு எனும் நூலில் ஒற்றைப்படை எண் உள்ள பாடல்களும், ஆங்கிலஆண்டில் இரட்டைப்

படை எண் உள்ள ஆண்டில் இரட்டைப்படை எண் உள்ள பாடல்களும் இப்பரிசுப் போட்டிக்குப் பாடமாகும்.

(ஈ) பரிசுக்குரியதேர்வு இரண்டுபிரிவுகளுடையது. ஒன்று எழுத்துத் தேர்வு; 50 கூறுகள்; இரண்டு மணி நேரம்; முதுமொழிமேல் வைப்பில் போட்டிக்கென்றே அமைக்கப்பெற்ற 98 வெண்பாக்களிற் கண்ட பொருளைப்பற்றியும், சொற்சுவை பொருட்சுவை குறித்தும் வினவப்பெறும். இரண்டாவது வாய்மொழித்தேர்வு; 50 கூறுகள்; அந்த 98 வெண்பாக்களில் தேர்வுக்குழுவினர் கேட்கும் எல்லாப் பாடல்களையும் மனப்பாடமாகச் சொற்பொருள் விளங்கும் வண்ணம் ஒப்பிக்க வேண்டும்.

(உ) இப்பரிசுக்குரிய மனப்பாடத் தேர்வினை நடத்த ஒரு தேர்வுக்குழு அமைக்கப்பெறும். காஞ்சிபுரம் நகராட்சி மன்றத் தலைவரும், பரிசுத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் மாணவர் கற்கும் உயர்நிலைக் கல்விக்கூடத்துத் தலைமையாசிரியர் அல்லது அவர்களால் அனுப்பப்பெறும் தமிழாசிரியர்களும் இத்தேர்வுக் குழுவின் உறுப்பினராவர். காஞ்சிபுரம் நகராட்சி மன்றத் தலைவரே இத்தேர்வுக் குழுவின் தலைவரும் ஆவர். இவரே தேர்வு முடிவுகளை வெளிப்படுத்துவார். இத்தேர்வுக் குழுத் தலைவர் தீர்ப்பே முடிவானது.

(ஊ) பரிசுக்குப் போட்டியிடும் மாணவர் தம்விண்ணப்பங்களைத் தத்தம் தலைமையாசிரியர் வழியாக ஆண்டுதோறும் ஜூலைத் திங்கள் 31-ம் நாளுக்குள் காஞ்சிபுரம் நகர மன்றத் தலைவருக்கு அனுப்புதல் வேண்டும். பரிசுக்குரிய மனப்பாடத் தேர்வு டிசம்பர்த் திங்களில் தேர்வுக் குழுத் தலைவர் குறிப்பிடும் ஓரிடத்தில் நடைபெறும்.

(எ) பரிசுத் தேர்வில் முதல் கூறு பெற்றவர்க்கு முதற் பரிசு ரூ. 45 (ரூபாய் நாற்பத்தைந்து). இரண்டாவது கூறு பெற்றவர்க்கு இரண்டாவது பரிசு ரூ. 40 (ரூபாய் நாற்பது), மூன்றாவது கூறு பெற்றவர்க்கு மூன்றாவது பரிசு ரூ. 30 (ரூபாய் முப்பது), நான்காவது கூறு பெற்றவர்க்கு நான்கா

வது பரிசு ரூ. 25 (ரூபாய் இருபத்தைந்து) ஆக நான்கு பரிசுகள் அளிக்கப்பெறும்.

(ஏ) இறுதித் தேர்வினை எளிதில் நடத்துதற் பொருட்டு ஒவ்வொரு உயர்நிலைக் கல்விக்கூடத்திலும் விண்ணப்பித்துக் கொண்ட மாணவர்கட்கு அவ்வத் தலைமையாசிரியர் நவம்பர்த் திங்களில் முதனிலைத் தேர்வு நடத்தி அவர்களுக்குள் நல்ல தேர்ச்சி காட்டக்கூடிய மாணவர் நான்கு பேரை மேல் (ஈ) பிரிவில் குறித்தவாறு டிசம்பரில் நடத்தப்பெறும் பரிசுத் தேர்வுக்கு ஒவ்வொரு உயர்நிலைக் கல்விக்கூடமும் அனுப்புதல் வேண்டும்.

(ஐ) ஒருமுறை பரிசு பெற்றவர் மறுமுறை பரிசு பெறற் குரியரல்லர்.

5. இக்கட்டளையை ஏற்படுத்தியவர்களால் முன்நிறுவப் பெற்றுக் காஞ்சிபுர நகர ஆட்சித் தலைவரால் நடத்தப்பெற்று வரும் மூவர் தேவாரப் பரிசு முதலியன அளிக்கப்பெறும் நாளில் இப்பரிசுகளும் அளிக்கப்பெறல் வேண்டும்.

6. பரிசுகள் அளித்தல், தேர்வு நடத்துதல், ஆகிய இவற்றுக்குச் செலவாகும் தொகை அந்தந்த ஆண்டில்வரும் வட்டித் தொகைக்கு உள்ளாகவே இருத்தல் வேண்டும். எஞ்சிய தொகைகள் மூலதனத்தோடு சேர்க்கப்பெறல் வேண்டும்.

7. முதலீடு செய்யப்பெற்றுள்ள இம்முதற்பொருள் தவணை முடிந்து திரும்ப அளிக்கப்பெற்றால் உயர்ந்த வட்டி தரக்கூடிய அரசியல் கடன் தாள்களில் முதலீடு செய்ய வேண்டும்.

8. ஆண்டுதோறும் வரவு செலவுக் கணக்கையும், பரிசுத் தொகை பெற்றவர் விளக்கம் ஆகியவற்றையும், பரிசு அளிக்காத ஆண்டில் பின் 9-வது பிரிவில் கூறியவாறு திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்துக்குத் தொகை அனுப்பிய விவரமும் இக்கட்டளை நிறுவியவர்கட்கும் அவர்கட்குப் பின் உரிமை உள்ளவர்கட்கும் அனுப்பிவர வேண்டும்.

9. இவ்வறத்தை வேறு எம்முறையிலும் பயன்படுத்துதல் கூடாது. எந்த ஆண்டேனும் பரிசுத் தேர்வு நடத்தாவிடில் அந்த ஆண்டுக்குரிய பரிசுத் தொகை ரூ. 140 (ரூபாய் நூற்று நாற்பதும்) ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்து நிரந்தரத் தலைவர் அவர்கட்கு அனுப்பப்பெறல் வேண்டும். ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரன் சங்கத்துத் தலைவர் அத்தொகையைக்கொண்டு ஸ்ரீவைகுண்டத்திலுள்ள குமரகுருபரன் கலைக்கோவில் - நூல் நிலையத்திற்குத் தமிழ் நூல்கள் வாங்கி நூல் நிலையத்தில் சேர்த்த செய்தியை இந்த அறத்தை ஏற்படுத்தியவர்கட்கும் அவர்கட்குப் பின்வரும் உரிமை உள்ளவர்கட்கும் தெரிவித்துக்கொள்ளவேண்டும்.

திருப்பனந்தாள்
2-11-1953. (Sd.) *Kasivasi Arulnandi Tambiran*

---

**Registered at Tiruvidamarudhur Sub Registrar's Office on** *21-1-1954* **as No.** *3* **of** *1954*, **Book No.** *4*, **Volume** *45* **pages** *50* **to** *54*.

---

## 5

*"Siva Siva"* Neon Sign light at Swamimalai,
**Kancheepuram Kumara Kottam**
Tiruchendur, Tiruthanigai,
Mylapore Kapaleeswarar Temple-etc., Rs. 8,510.

---

## 6

## காஞ்சிபுரத்தில் கந்தபுராணப் பிரசங்க நிதி ரூ. 3500

ஸ்ரீ முருகப் பெருமானின் கருணைப் பெருக்கினை உலக மக்கள் எளிதில் பெற்றுய்யுமாறு வாரிவாரி வழங்குவதும், மாந்தரைக் "கருக்கடல் முருக்கி முத்திக்கரை" தனில் சேர்க்க வல்லதும், பத்திச்சுவை நனி சொட்டச் சொட்ட அமைதியான

ஆற்று நீரோட்டம் போன்று செந்தமிழ் நடையிலுள்ளதும், மெய்யடியார்களால் நாடோறும் பாராயணம் செய்யும் பனுவலாகத் திகழ்வதும், "உரைப்போர் கேட்போர் முன்னெலாம் புரிந்த வினை அனைத்தும் தீர்த்து முத்தி" தரவல்லதும், "புராண நன்னுயகம்" என்று புகழப்பெறுவதும், 10345 பாடல்களைக் கொண்டதும், முருகப்பெருமானால் "திகட சக்கர" என்று அடியெடுத்துக் கொடுக்கப்பெற்றுக் கச்சியப்பசிவாசாரியரால் அருளப்பெற்றதும், பொய்யடிமையில்லாத புலவர் குழாம் மகிழ்ந்து போற்றக் காஞ்சிபுரம் குமரக்கோட்டத்தில் "சகாத்தம் எழுநூற்றின் மேலாய்" அரங்கேற்றப் பெற்றதுமான கந்தபுராணத்தைச் "சொற்றிடும் ஆராய்ந்திடுவாரும் துகளுறுமே கற்றிடும் கற்பான் முயல்வாரும் கசிந்து கேட்கல் உற்றிடும் வீடு நெறிப்பாலின் உறுவர்" ஆகலின் ஆறுமுகமுடையவோர் அமலன் மாக்கதையாகிய கந்தபுராணத்தைக் காஞ்சிபுரம் குமரகோட்டத்தில் கந்தசட்டித் திருவிழா நாட்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்துவித்தும் கேட்பித்தும் மக்களை நற்பேறடைவித்தற் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இந்நிதி நிறுவப்பெற்றது. இது "காஞ்சிபுரத்தில் கந்தபுராணப் பிரசங்க நிதி" எனப்பெறும்.

2. இதற்குரிய சேமவைப்பு ரூ. 3500 (ரூபாய் மூவாயிரத்து ஐந்நூறு) ஆண்டொன்றுக்கு ரூ. 4 வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரமாக உள்ளது. **(4 percent Madras Loan of 1953-Book Debt Certificate No. MS. 471 of Madras.)** இந்நிதி நம் பேரிலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும் இருந்துவரும்.

3. இம்மூலதனத்தினின்று கிடைக்கும் வட்டித் தொகையினின்று ஆண்டுதோறும் காஞ்சிபுரம் குமரகோட்டத்தில் கந்த சட்டித் திருவிழாவில் கந்தபுராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்த ரூ. 96 (ரூபாய் தொண்ணூற்றாறு) செலவு செய்யப் பெறும். தபாற் செலவு முதலிய சில்லறைச் செலவு போக எஞ்சிய தொகையைக்கொண்டு நம்மாலும் நமக்குப்பின் உரிமை

யுள்ளவர்களாலும் காஞ்சிபுரம் குமரகோட்டத்துக் கந்தப் பெருமானுக்கு நிவேதனப் பொருள் படைத்துக் கந்தசட்டித் திருவிழாவில் பிரசங்கம் கேட்பவருக்குப் பிரசாதமாக வழங்கு வதற்குப் பயன்படுத்தப்பெறும்.

4. கந்தபுராணச் சொற்பொழிகள் நிகழ்த்தக் கட்டுப் பாடுகளாவன :—

(அ) ஆண்டுதோறும் காஞ்சிபுரம் குமரகோட்டத்தில் கந்த சட்டித் திருவிழா ஆறு நாட்களிலும் கந்தபுராணச் சொற் பொழிவுகள் சைவ சீலமுள்ள பழுத்த தமிழ்ப் புலவர் ஒருவரால் நிகழ்த்தப்பெறும்.

(ஆ) ஷை புலவர் பல்கலைக்கழகத்து வித்துவான் அல்லது புலவர் தேர்வில் வெற்றிபெற்றவராகவும் அல்லது பி. ஏ., பி. ஓ. எல். முதலிய பட்டதாரிகளாகவும், சொல்வன்மையுடையவரா கவும், சைவ சித்தாந்த சாத்திரப் பயிற்சி பெற்றுச் சைவ நல் லொழுக்கமும் உடையவராகவும் இருத்தல் வேண்டும். இத் தகைய தகுதிகள் உடைய ஒருவர் ஆண்டுதோறும் நம்மாலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்வளாலும் கந்தபுராணப் பிரசங் கம் செய்ய நியமிக்கப் பெறுவர்.

(இ) நியமனம் பெற்றவருடைய பெயரும் விலாசமும் காஞ்சி புரம் குமரகோட்டத்து டிரஸ்டி அவர்களுக்கு உரிய காலத்தில் அறிவிக்கப்பெறும். ஷை டிரஸ்டி அவர்கள் ஷை சொற்பொழி வாளரைக் கொண்டு குமரகோட்டத்தில் கந்தசட்டித் திருவிழா வில் ஆறு நாட்களிலும் நாடோறும் மாலையில் சொற்பொழிவு களை நிகழ்த்துவிக்க வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காண்டம் வீதம், ஆறு நாட்களும் கந்தபுராணத்து ஆறு காண்டங்களிலுள்ள பொரு ளைச் சொற்பொழிவாளர் தெளிவாகக் கேட்போர் மனங் கொள்ளுமாறு பக்திப்பெருக்குடன் சொற்பெருக்காற்ற வேண் டும். உசிதம்போல் சிறிது மாற்றியமைக்கச் சொற்பொழிவாள ருக்கு உரிமையுண்டு.

(உ) மேற்குறித்தவாறு சொற்பொழிகள் ஆற்றியதற்கு அத்தாட்சியாகக் காஞ்சிபுரத்துக் குமரகோட்டத்து டிரஸ்டி அவர்களிடம் சான்றிதழ் பெற்று நமக்கும் நமக்குப்பின் உரிமை உள்ளவர்களுக்கும் ஷெ சொற்பொழிவாளர் அனுப்பவேண்டும்.

(ஊ) கந்தசட்டி நாளில் நிகழ்த்தப்பெறும் ஆறுவது சொற்பொழிவு நிகழ்த்தி முடிந்ததும் (6×16ஆக) ரூ. 96 சன்மானமாகச் சொற்பொழிவாளருக்கு அளிக்கப்பெறும். வட்டி வருமானத்துக்கு ஏற்ப இத்தொகை கூட்டவும் குறைக்கவும் பெறும். இச் சன்மானத் தொகை பிரசங்க சன்மானம், பிரயாணச் செலவு, நித்தியப் படிச்செலவு முதலிய செலவினங்களையும் உட்கொண்டதாகும்.

(எ) மேற்குறித்த சன்மானத் தொகை கந்தசட்டித் திருவிழாத் தொடக்கத்திலேயே காஞ்சிபுரம் குமரகோட்டத்து டிரஸ்டி அவர்களுக்கு அனுப்பப்பெறும். அச் சன்மானத் தொகையைச் சொற்பொழிவாளருக்கு அளித்து இரசீது பெற்று நமக்கும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களுக்கும் ஷெ டிரஸ்டி அவர்கள் அனுப்பவேண்டும்.

(ஏ) நம்மாலும் நமக்குப் பின் உரிமை உள்ளவர்களாலும் நியமிக்கப்பெற்று அனுப்பப்பெறும் சொற்பொழிவாளர் தவிர்க்கமுடியாத காரணங்களால் சொற்பொழிவாற்றக் காஞ்சிபுரத்துக்குச் செல்லத் தவறினும், சொற்பொழிவாற்றுகையில் தவிர்க்கமுடியாத காரணங்களால் சொற்பொழிவாற்ற முடியாது போயினும் ஷெ குமரகோட்டத்து டிரஸ்டி அவர்கள் தக்கவர் ஒருவரை உடனே நியமித்து இச்செய்தியை நமக்கும் நமக்குப் பின்வரும் உரிமையுள்ளவர்களுக்கும் தெரிவித்து ஒப்புதல் பெறவேண்டும். இங்ஙனம் நியமிக்கப்பெற்றவருக்கு நாட் சொற்பொழிவுக்கு ரூ. 16 (ரூபாய் பதினாறு) வீதம் சன்மானம் அளித்தல் வேண்டும். இவரும் இப்பகுதியில் குறித்துள்ள கட்டுப்பாடுகளின்படியே நடந்துகொள்ளக்கடவர்.

(ஐ) ஒரு ஆண்டு சொற்பொழிவாளராக நியமிக்கப்பெற்றவர் மீண்டும் மூன்று ஆண்டுகள் வரை நியமிக்கப்பெறற்குரியவரல்லர்.

5. இத்தருமம் வேறு எம்முறையிலேயும் பயன்படுத்தப் பெறமாட்டாது. நம்மாலும் நமக்குப்பின் உரிமை உள்ளவர்களாலும் இக்கந்தபுராணப் பிரசங்க நிதி பரிபாலனஞ் செய்யப் பெற்றுவரும்.

கந்தப் பெருமான் திருவருள் வாழ்க!

Tirupanandal
26—1—1954 } (*Sd.*) *Kasivasi Arulnandi Tambiran*

---

**Registered at Tiruvadamarudhur Sub Registrar's office on** *27—1—1954* **as No.** *6* **of** *1954*. **Book No.** *4* **Volume No.** *45* **pages** *56* **to** *59*.

---

# 7

## காஞ்சிபுரத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் நினைவுநாள் அன்னம்பாலிப்பு சேமவைப்பு ரூ. 5000

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்களின் வரிசையில் ஒரு தனிச்சுடர்மணியாக விளங்கியவர்களும் கல்வியாற்றலும், கூரிய மதியும், இணையற்ற தமிழன்பும், அறநினைவும், கேட்டார்ப்பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் சொல்வன்மையும் உடையவர்களும் 'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண்விடல்' என்ற குறட்கேற்பச் செயலாற்றியவர்களும், கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர் பரம்பரையில் உதித்தவர்களும், திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் 22-ம் பட்டத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ-ல-ஸ்ரீ மாணிக்கவாசக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்பால் சிவஞானோபதேசம் பெற்றவர்களும், 23—2—1930 முதல் 26—3—1944-வரை ஸ்ரீ காசிமடத்துத் தலைவராக எழுந்தருளியிருந்தவர்களும், சென்னைப் பல்கலைக்கழகத்து வித்துவான் தேர்வில் முதல் எண் பெற்றவர்க்குப் பரிசு ரூ. 1000 ஆண்டுதோறும் கொடுப்பதற்கு ரூ. 35,000 முதற்பொருள் வழங்கி

அதுமுதல் அப்பரிசு வழங்கச்செய்தவர்களும், தமிழ் இலக்கணப் பயிற்சியும், சைவ சித்தாந்த நூற்பயிற்சியும், இசைப்பயிற்சியும் தமிழ்நாட்டில் ஓங்கிப் பரவும் பொருட்டு அண்ணமலைப் பல்கலைக்கழகத்தில் 13 பரிசுகளை நிறுவி ரூ. 94,500 மூலதனத்தை அளித்தருளிய வள்ளன்மைமிக்க தாளாளரும், கிராமகர்ணம், ஆசிரியர், வைத்தியர் ஆகியவர் தமிழ்ப்புலவராகத் திகழவேண்டும் எனக்கருதி அரசியலாரிடம் ஒரு லட்சம் மூலதனம் அளித்தருளியவர்களும், ராஜ ராஜ அபயகுலசேகர சோழ மகாராஜா நினைவாகத் தேவாரத் திருமுறைப் பரிசும், தமிழ் இலக்கிய இலக்கண வெளியீட்டுத் திட்டமும் ஏற்படுத்தி 118 ஏக்கர் 75 செண்டு நன்செய் நிலத்தை அண்ணமலைப் பல்கலைக்கழகத்தினரின் பரிபாலனத்தில் அளித்தவர்களும், பல தமிழ் நூல்களை வெளியிட்டவர்களும், சுபானு ஆண்டு பங்குனித் திங்கள் வளர்பிறை துதியை திதியில் பரிபூர்ணம் அடைந்தவர்களும் ஆகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் அவர்களை நினைவு கூர்ந்து அவர்கள் பரிபூரணமடைந்த திருநாளில் காஞ்சிபுரத்தில் அன்னம்பாலித்தற் பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இந்நிதி நிறுவப்பெற்றது. இது 'காஞ்சிபுரத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் நினைவுநாள் அன்னம்பாலிப்பு' எனப் பெயர்பெறும்.

2. இதற்குரிய முதற்பொருள் ரூ. 5000 (ரூபா ஐயாயிரம்) பெறுமானமுள்ள 3 சத வீதம் வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரங்களாகவுள்ளது. 3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946 சர்க்கார் கடன் பத்திரம் எல். சிஏ. 141217 ரூ. 5000 இந்நிதி நம்மாலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களாலும் பரிபாலனம் செய்யப்பெற்றுவரும்.

3. இம்முதற் பொருளினின்று கிடைக்கும் வட்டித் தொகையைக்கொண்டு ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் பரிபூரணமடைந்த நினைவுநாளாகிய பங்குனித் திங்கள் வளர்பிறை துதியை திதி வரும் நாளில் காஞ்சி

புரத்தில் அந்தணர், அருந்தவர், ஏழைகட்கு அன்னம்பாலிக்கப் பெறும்.

4. ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டி வருமானத்துக்கு ஏற்பவும் காலவிலைக்கு ஏற்பவும் தயாரிக்கப்பெறும் திட்ட ஜாப்தாவின்படி இவ்வன்னம்பாலிப்பு நடைபெறும்.

5. இத்தருமம் வேறு எம்முறையிலும் பயன்படுத்தப் பெறமாட்டாது. முதற்பொருள் அரசினரால் திருப்பியளிக்கப் பெறின் அதிக வட்டி தரக்கூடிய சர்க்கார் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யப்பெறும்.

திருப்பனந்தாள் 13-2-1955 } (*Sd.*) *Kasivasi Arulnandi Tambiran*

---

**Registered at Tiruvadamarudhur Sub Registrar's office on** *17—2—1955* **as No.** *22* **of** *1955*, **Book No.** *4*, **volume** *45* **pages** *248* **to** *250*.

---

## 8

## காஞ்சிபுரத்தில் கச்சியப்ப சிவாசாரியர் நினைவுப் பசுப் பரிசு நிதி ரூ. 3500

காசியின் பெயரைத் தன்னகத்தே அடக்கிக்கொண்ட தன்மையுடையதும், எண்ணிலாகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்புவது பூசனையாகையால் அம்பிகை இறைவரைப் பூசிக்க, அப்பொழுது கம்பையாறு பெருகிவர, அம்பிகை தழுவக் குழைந்தமையால் சிவபெருமான் 'தழுவக்குழைந்தநாதர்' என்றும் திருக்கோயில் 'ஏகம்பம்' என்றும் வழங்கப்பெற்ற பெருமையுடையதும், அம்பிகை திருக்காமக் கோட்டத்தில் எழுந்தருளியிருந்து 'நெல்லிருநாழி நிறையக் கொடுத்தாங்கு எண்ணான்கறமும் இயற்றுதி' என்று இறைவர் பணித்தவாறு அறம் வளர்த்த சிறப்புடையதும், முத்தித் தலங்கள் ஏழனுள் ஒன்றாயதும், பஞ்சபூதத் தலங்களுள் பிருதிவித்தலமாயதும், திருக்காமக்கோட்டம், குமரக்கோட்டம், கச்சபேசம், திருக்

கச்சிமயானம், திருக்கச்சிமேற்றளி, திருவோணகாந்தன்தளி, திருக்கச்சியநேகதம்காவதம், திருக்கச்சிநெறிக் காரைக்காடு முதலிய தலங்களைத் தன்னெல்லைக்குள் உடையதும், சாக்கியர், ஐயடிகள் காடவர்கோன், திருக்குறிப்புத் தொண்டர் ஆகிய நாயனார்கள் திருத்தொண்டு செயப்பெற்றதும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் இடதுகண் பெற்றதும், மூவர் தமிழ்மாலையுடையதும், விகடசக்கர விநாயகர் எழுந்தருளப்பெற்றதும், பல்லவர்களுக்குத் தலைநகரமாயமைந்தமையால் பல்லவனும்புரி என்று கூறப்பெற்ற வரலாற்றுச் சிறப்புடையதும், கச்சியப்ப சிவாசாரியர் கந்தபுராணம் பாடிய பெருமையுடையதும் ஆன கல்வியிற் கரையிலாத காஞ்சிபுரத்தில் கந்தபுராணம் அருளிக் கந்தன் புகழைப் பரப்பிய கச்சியப்ப சிவாசாரியரை நினைவு கூர்ந்து ஆபயன் வளர்த்தற்பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இந்நிதி நிறுவப்பெற்றது. இது 'காஞ்சிபுரத்தில் கச்சியப்ப சிவாசாரியர் நினைவுப் பசுப்பரிசு நிதி' எனப்பெறும்.

2\. இதற்குரிய முதற்பொருள் ரூ. 3500 (ரூபா மூவாயிரத்தைந்நூறு) இதனை ஆண்டொன்றுக்கு ரூ. 100-க்கு ரூ. 3 வீதம் வட்டி தரக்கூடிய அரசியல் கடன்தாள்களில் அதாவது 3% கன்வர்ஷன் லோன் ஆப் 1946-ல் முதலீடு செய்ய வேண்டும். இது காஞ்சிபுரம் நகராட்சி மன்றத்தினரின் பரிபாலனத்தில் இருக்கும்.

3\. இம்முதற்பொருளினின்று ஆண்டுதோறும் கிடைக்கும் வட்டித்தொகையிலிருந்து ரூ. 50, ரூ. 40, என இரண்டு பசுப்பரிசுகள் அளிக்க ரூ. 90 ஒதுக்கவேண்டும். எஞ்சிய தொகை இத்தருமத்தை நடத்துவதற்கெனச் செலவாகக் கூடிய சில்லறைச் செலவுகளுக்குத் தேவையிருப்பின் பயன்படுத்தலாம்.

4\. பரிசுகள் அளிக்கக் கட்டுப்பாடுகளாவன:

(அ) காஞ்சிபுரம் நகர எல்லைக்குள் இருப்பனவும், நல்ல வளமுள்ளனவும் மிக நிறையப் பால் சொரிவனவும்/தருவனவும்

ஆகிய சிறந்த இரண்டு பசுக்களுக்காகப் பரிசு அளிக்கப் பெறும். மிக அதிக அளவுள்ள பால்கறக்கும் பசு உரிமையாளரிடம் முதற்பரிசு ரூ. 50-ம் அடுத்த அளவுள்ள பால் கறக்கும் பசு உரிமையாளரிடம் இரண்டாவது பரிசு ரூ. 40-ம் அளிக்கப் பெறும்.

(ஆ) காஞ்சிபுர நகர ஆட்சி எல்லைக்குள் உள்ள பசு வளர்ப்பவர் யாவரும் இப்பசுப் பரிசுகளைப்பெற உரிமையுடையவர் ஆவர்.

(இ) பரிசுகளைத் தீர்மானிக்க ஒரு குழு அமைக்கப்பெறும். காஞ்சிபுரம் நகராட்சி மன்றத் தலைவரும், காஞ்சிபுர நகராட்சி ஆணையரும் (கமிஷனர்) காஞ்சிபுர நகரசபை அங்கத்தினர் யாரேனும் ஒருவரும், காஞ்சிபுரம் (1) ஏகாம்பரநாதர் (2) குமரக்கோட்டம் ஆகிய இரு தேவஸ்தானங்களின் மானேஜிங் டிரஸ்டிகள் அல்லது அவர்கள் அனுப்பும் இரு பிரதிநிதிகளும் ஆக ஐவர் இக்குழுவின் அங்கத்தினர் ஆவர். காஞ்சிபுரம் நகர மன்றத் தலைவர் மற்ற நான்கு அங்கத்தினர்களுடன் கூடி ஆலோசித்துப் பரிசுக்குரிய இரண்டு பசுக்களைத் தேர்ந்தெடுப்பார். இவர் தீர்ப்பே முடிவானது. காஞ்சிபுரம் நகரசபை அங்கத்தினரை நகர மன்றத் தலைவரே இக்குழுவிற்கு நியமிப்பார்.

(ஈ) பரிசுக்குரிய பசுக்களை ஆண்டுதோறும் டிசம்பர்த் திங்கள் 15-ந் தேதிக்குள் தேர்ந்தெடுத்து அப்பசுக்களின் உரிமையாளருக்கு (சொந்தக்காரருக்கு) ஷெ குழுவினர் அறிவித்தல் வேண்டும்.

(உ) காஞ்சிபுரம் திருவேகாம்பரநாதர் ஆலயத்தில் ஸ்ரீ ஏகாம்பரநாதருக்கு அபிஷேகம் செய்வதற்கு ஜனவரி 1 முதல் 4-ந் தேதி வரை நான்கு நாட்கள் காலையில் கறக்கும் பாலை முதற்பரிசு பெறுபவரும், காஞ்சிபுரம் குமரக்கோட்டத்துக் கந்தப்பெருமானுக்கு மூன்று நாட்கள் காலையில் கறக்கும் பாலை ஜனவரி 1-ந் தேதி முதல் 3-ந் தேதி வரை இரண்டாவது பரிசு பெறுபவரும் முறையே காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் தேவஸ்தான நிர்வாக அதிகாரி (எக்சிகூடிவ் ஆபீசர்) வசமும்.

குமரக்கோட்டத்து நிர்வாக அதிகாரி வசமும் கொடுத்து விவரத்தைக் காஞ்சிபுரம் நகராட்சி மன்றத் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்ளவேண்டும். ஷை இரண்டு நிர்வாக அதிகாரிகளும் தாம் பெற்ற பாலை முறையே ஏகாம்பரநாதருக்கும் கந்தப்பெருமானுக்கும் அபிஷேகம் செய்வித்தல் வேண்டும்.

(ஊ) மேற்குறித்தவாறு அபிஷேகம் செய்யப் பால் கொடுக்காவிட்டால் ஷை பரிசு உரியவர்களுக்குப் பரிசு தரப்படமாட்டாது.

(எ) முதற் பரிசு ரூ. 50 (ரூபா ஐம்பதும்) இரண்டாம் பரிசு ரூ 40-ம் (ரூபா நாற்பதும்) அப்பரிசுக்குரிய பசுச் சொந்தக்காரர்களுக்குத் தை மகர சங்கராந்திக்கு (அதாவது தைப் பெரும் பொங்கலுக்கு) மறுநாள் நிகழும் மாட்டுப் பொங்கல் நாளில் அளிக்கப்பெறும். ஷை பரிசுகள் திரு ஏகாம்பர நாதர் ஆலயத்திலோ, குமரக்கோட்டத்திலோ அல்லது நகர சபை மண்டபத்திலோ அளிக்கப்பெறலாம்.

5. பரிசு அளித்தல் சில்லறைச் செலவுகள் ஆக இவற்றுக்குச் செலவு ஆகும் தொகை அந்தந்த ஆண்டில் வரும் வட்டித் தொகைக்கு உள்ளாகவே இருத்தல் வேண்டும். பரிசுத் தொகை வட்டி வரவுக்கேற்பக் கூட்டவும் குறைக்கவும் பெறும்.

6. முதலீடு செய்யப்பெற்றுள்ள இம்முதற் பொருள் தவணை முடிந்து திரும்ப அளிக்கப்பெற்றால் உயர்ந்த வட்டி தரக்கூடிய அரசியல் கடன்தாள்களில் முதலீடு செய்யவேண்டும்.

7. எந்த ஆண்டிலேனும் பரிசுக்குரியராகியும் முதற் பரிசு பெற்றவர் பாலை அபிஷேகத்திற்குத் தராது போவதால் மேல் 4 (ஊ) பிரிவின்படி பரிசு அளிக்கப்பெறாவிடில் ரூ. 50 காஞ்சிபுரம் திரு ஏகாம்பரநாதர் தேவஸ்தான நிர்வாக அதிகாரி வசம் கொடுக்கவேண்டும். இரண்டாவது பரிசு பெற்றவர் பாலை அபிஷேகத்திற்குத் தராது போனால் அப்பரிசுத் தொகை ரூ. 40 காஞ்சிபுரம் குமரக்கோட்டத்து நிர்வாக அதிகாரி வசம்

கொடுக்கவேண்டும். பிற காரணங்களால் பரிசுகள் அளிக்காவிடினும் ரூ. 50 திரு ஏகாம்பரநாதர் தேவஸ்தான நிர்வாக அதிகாரி வசமும் ரூ. 40 குமரக்கோட்டத்து நிர்வாக அதிகாரி இடமும் கொடுக்கப்பெறல் வேண்டும். அந்நிர்வாக அதிகாரிகள் அத்தொகைக்குப் பால் வாங்கி முறையே ஏகாம்பரநாதருக்கும் கந்தப்பெருமானுக்கும் அபிஷேகம் செய்விக்கவேண்டும்.

8. பசுப்பரிசுகள் இரண்டையும் ஒருவருக்கே இரண்டு பசுக்கள் பொருட்டு மேற்குறித்த கட்டுப்பாடுகளுக்கேற்ப வழங்கினும் வழங்கலாம். பசு வளர்ப்பவர்க்கு ஊக்கம் தருதற் பொருட்டு ஒரு முறை பரிசுக்குரியதான பசு மறுமுறை பரிசுக்குரியதாக வர உரிமையுடையதல்ல.

9. இவ்வறத்தை வேறு எம்முறையிலும் பயன்படுத்தல் கூடாது. ஆண்டுதோறும் வரவு செலவுக்கணக்கையும். பரிசு பெற்றவர்கள் விளக்கத்தையும் மேல் 4 (உ) பிரிவின்படி ஜனவரி 1-ந் தேதி முதல் 4-ந் தேதி முடிய ஏகாம்பரநாதருக்கும், கந்தப்பெருமானுக்கும் பால் அபிஷேகம் செய்வித்த விவரமும், பரிசு அளிக்காத ஆண்டில் மேல் 7-ம் பிரிவின்படி பால் வாங்கி ஏகாம்பரநாதருக்கும் குமரப்பெருமானுக்கும் அபிஷேகம் செய்வித்த விவரமும் இக்கட்டளை நிறுவியவர்கட்கும் அவர்களுக்குப் பின் உரிமையுள்ளவர்கட்கும் அனுப்பிவர வேண்டும்.

**ஏகம் பத்துறை எந்தாய் போற்றி !**
**பாகம் பெண்ணுரு வாளுய் போற்றி !**

திருப்பனந்தாள் }
13—2—1955 } (*Sd.*) *Kasivasi Arulnandi Tambiran*

---

**Registered at Tiruvadamarudhur Sub Registrar's office on** *17—2—1955* **as No.** *23* **of** *1955* **Book** *4*, **Volume** *45*, **pages** *250–254*.

குறிப்பு.—காஞ்சிபுரம் நகர மன்றம் 31—1—1955-ல் நடத்திய கூட்டத்தில் தீர்மான் எண் 561-ன் படிக்கு இந்நிதியை ஏற்று நடத்த ஒப்புறுதியளித்தது. முதற்பொருள் காஞ்சிபுரம் நகராட்சி ஆணையரால் 12—2—1955-ல் ஏற்றுக்கொள்ளப்பெற்றது.

## 9

## காஞ்சிபுரத்தில் திருக்கச்சியேகம்பன் உருத்திராககத் தேவார நிதி ரூ. 50,000

ஸ்ரீ காசியின் பெயரைத் தன்னகத்தே கொண்டதும், எண்ணிலாகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்புவது பூசனை யாகையால் அம்பிகை இறைவரைப் பூசிக்க, அப்பொழுது கம்பையாறு பெருகிவர, அம்பிகை தழுவக் குழைந்தமையால் சிவபெருமான் **'தழுவக் குழைந்த நாதர்'** என்றும், திருக்கோயில் **'ஏகம்பம்'** என்றும் வழங்கப் பெற்றதும், அம்பிகை திருக்காமக் கோட்டத்தில் எழுந்தருளியிருந்து **'நெல்லிரு நாழி நிறையக் கொடுத்தாங்கு எண்ணுன்கறமும் இயற்றுதி'** என்று இறைவர் பணித்தவாறு அறம் வளர்த்த சிறப்புடையதும், முத்தித்தலங்கள் ஏழனுள் ஒன்ருயதும், பஞ்சபூதத் தலங்களுள் பிருதிவித் தலமாயதும், திருக்காமக்கோட்டம், குமரக்கோட்டம், கச்சபேசம், திருக்கச்சி மயானம், திருக்கச்சியநேகதங்காவதம், திருக்கச்சிநெறிக்காரைக்காடு முதலிய தலங்களைத் தன்னெல்லைக்குள் உடையதும், சாக்கியர், திருக்குறிப்புத் தொண்டர், ஐயடிகள் காடவர்கோன் ஆகிய நாயனுர்கள் திருத்தொண்டு செய்ததும், **"கடல் சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்"** என்று சுந்தரரால் போற்றப்பெற்றவரும், கி. பி. 825–850 வரை பல்லவ அரசராகத் திகழ்ந்தவருமாகிய மூன்ரும் நந்திவர்மன் ஆட்சிசெய்த சிறப்புடையதும், கி. பி. 550-575 வரை ஆண்ட பல்லவ அரசர் ஆகிய மூன்ரும் சிம்மவர்மன் என்று ஆராய்ச்சியாளர் கூறும் ஐயடிகள் காடவர்கோன் நாயனுரால் **"என் நெஞ்சே...வண்கச்சி ஏகம்பத்தானை இறைஞ்சு"** என்று க்ஷேத்திரத் திருவெண்பாவில் பாடப்பெற்றதும் ஆய கல்வியிற்கரையிலாத காஞ்சிபுரத்தில் கருவார் கச்சித் திரு ஏகம்பத்தில் திருமுறைகளை நாடோறும் விண்ணப்பிக்கச் செய்து திருமுறைகளைப் பரப்புதற் பொருட்டுத் **திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்** அவர்களால் இக்கட்டளை

நிறுவப்பெற்றது. இது **'காஞ்சிபுரத்தில் திருக்கச்சியேகம்பன் உருத்திராக்கத் தேவார நிதி'** எனப் பெயர் பெறும்.

2. (அ) இதன் சேர்க்கையில் விளக்கம் கண்டிருப்பதும் நமக்குச் சொந்தமாய் நாம் சர்வ சுதந்திரத்துடன் அனுபவித்து வருவதுமான திருப்பனந்தாள் வட்டம் திருப்பனந்தாள் கிராமத்தில் உள்ள மனைகள், வீடுகள், தோப்புகள் முதலியவற்றினின்று வரக்கூடிய வாடகை வருமானத்தில் வரி, சிப்பந்திச்செலவு முதலிய செலவினங்கள் போக எஞ்சியுள்ள நிகர வருமானத்தில் மூன்றில் இரண்டு பங்குத் தொகை பின் மூன்ருவது பாராவில் விவரித்துள்ளவாறு காஞ்சிபுரம் ஸ்ரீ ஏகாம்பரநாதர் ஆலயத்தில் நம்மால் நியமிக்கப்பெற்றுத் தேவாரத் திருப்பதிகங்கள் விண்ணப்பம் செய்யும் ஓதுவார்க்கு ஊதியம் அளிக்கவும், நான்காவது பாராவில் விவரித்துள்ளவாறு உருத்திராக்க மணிகளை வாங்கி அளிக்கவும் பயன்படுத்தப்பெறும்.

(ஆ) முன் பகுதியுள் குறித்துள்ள நிகர வருமானத்தில் மூன்றில் ஒரு பங்குத் தொகை இதன் ஷெடியூலில் விவரித்துள்ள மனைகள், வீடுகள், தோப்புகள், மரந்தலை வகையருக்கள் இவற்றுக்குத் தேவையானல் விருத்தியாம்சம் செய்வதற்குச் செலவிடப்பெறும்.

3. (அ) காஞ்சிபுரத்தில் நம்மால் நியமிக்கப்பெறும் ஓதுவார் ஒருவர் நாடோறும் கச்சித் திருவேகம்பர் திருமுன்னிலையில் காலையிலும், மாலையிலும் தேவாரத் திருமுறைகளை ஓதுதல் வேண்டும். அன்றியும் காலையில் மாணிக்கவாசகர் அருளிய திருப்பள்ளியெழுச்சியும், மாலையில் சேந்தனர் அருளிய திருப்பல்லாண்டும் ஓதுதல் வேண்டும். மார்கழி மாசத்தில் திருவாதிரைத் திருவிழா நாட்களில் திருவெம்பாவையை ஓதுதல் வேண்டும். ஒவ்வொரு வேளையிலும் ஒரு மணி நேரத்திற்குக் குறையாமல் சிவவொலி பெருக்கும் திருப்பணியை அவ்வோதுவார் புரிதல் வேண்டும்.

(ஆ) நம்மால் நியமிக்கப்பெறும் மேற்படி ஓதுவார்க்கு மாசம் ஒன்றுக்கு ரூ. 50 (ரூபா ஐம்பது) வீதம் சம்பளம்

அளிக்கப்பெறும். வாடகை வரவுக்கு ஏற்ப இவ்வூதியம் குறைக்கவும் கூட்டவும் பெறும்.

(இ) திருப்பதியம் விண்ணப்பிக்கும் ஓதுவாரை நிய மிக்கவும், நீக்கவும் நமக்கும் நமக்குப்பின் உரிமையுள்ளவர் களுக்குமே உரிமையுண்டு.

(ஈ) மேற்படி ஓதுவார் மாசம் ஒன்றுக்கு 27 நாட்க ளாவது தன் பணியைச் செய்யின் முழுச்சம்பளம் பெற உரிமையுண்டு. இவ்வூதியம் காஞ்சிபுரம் திரு ஏகாம்பரநாதர் தேவஸ்தான நிர்வாக அதிகாரி மூலம் அனுப்பப்பெறும். மேற்படி நிர்வாக அதிகாரி ஓதுவார்க்குச் சம்பளத்தையளித்து இரசீது பெற்று அனுப்புதல் வேண்டும்.

4. மேற்படி மூன்றுவது பாராவில் விவரித்துள்ள தருமத் திற்குச் செலவான தொகை போக எஞ்சியுள்ள தொகையுள் ரூ. 100 முதல் ரூ. 150 வரை உருத்திராக்க மணிகள் வாங்கச் செலவிடப்பெறும். முப்போதும் சிவபெருமான் திருமேனி யைத் தீண்டிப் பூசிக்கும் உரிமை பூண்ட சிவ வேதியர்களுக் கும், சிவ தீக்ஷை பெற்றுத் தேவாரம் ஓதும் சிவ பூசகர்க்கும் மட்டுமே மேற்படி உருத்திராக்க மணிகள் நம்மாலும் நமக்குப் பின் உரிமையுள்ளவர்களாலும் வழங்கப்பெற்றுவரும்.

5. மேலே விளக்கம் பெற்றுள்ள செலவினங்கள் நிகர வருமானத்துக்கு ஏற்பக் கூட்டவும் குறைக்கவும் பெறும். எஞ்சியுள்ள தொகைகள் எல்லாம் நம்மாலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்களாலும் தம் விருப்பம்போல் இதுபோன்ற இதர தருமங்களுக்குப் பயன்படுத்த உரிமையுண்டு.

6. இதிற்குறித்த மனைகளும், வீடுகளும், தோப்புகளும், மரந்தலை வகையறுக்களும் நம் பேரிலும் நமக்குப்பின் உரிமையுள்ளவர்கள் பேரிலும், சுவாதீனத்திலும், அனுபவத்தி லும், பரிபாலனத்திலும் இருந்துவரும்.

7. இதிற்குறித்த வீடுகள் முதலியவற்றினின்று ஆண்டு தோறும் வரக்கூடிய உத்தேச வருமானம் ரூ. 1,200. இவற்றின் உத்தேச மதிப்பு ரூ. 50,000 (ரூபா ஐம்பதினாயிரம்).

ஆகப் புன்செய், அயன், ஜாயின்டு உள்பட 2—58 இரண்டு ஏக்கர் ஐம்பத்தெட்டு சென்டு நிலமும், ஓட்டுவில்லை வீடுகள் இருபதும், கூரை வீடுகள் இரண்டும், மனைகள் இருபத்தி ஒன்றும் இவைகளிலுள்ள பல விருட்சங்கள் உள்பட இந்தத் தருமத்திற்கு உட்பட்டது.

**எந்தை ஏகம்பம் ஏத்தித் தொழுமினே!**

திருப்பனந்தாள்,<br>17—2—1955. } (*Sd.*) *Kasivasi Arulnandi Tambiran.*

---

Registered at Tiruvadamarudhur Sub-Registrar's Office on 21—2—1955 as No. 216 of 1955, Book No. 1, Volume 1039, Pages 401 to 411.

ORIENTAL MSS
2 AUG 1955
P.O., MADI

உ

செந்திலாண்டவன் துணை

**திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவராக எழுந்தருளியிருக்கும்**

**ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி**

**அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்**

தமிழ்க்கல்வி, சைவசித்தாந்தம், தேவாரத் திருமுறைகள், இசைத்தமிழ், அன்னதானம், வைத்தியம் இவற்றின் அபிவிருத்திக்காகவும் பொது மக்களின் அனுகூலத்துக்காகவும் மனமுவந்து அமைத்திருக்கும் பேரறக் கட்டளைகள்.

| தொடர் எண் | தரும விவரம் | மூலதனம் ரூபாய் |
|---|---|---|
| 1. | சிவஞானசித்தியார் உபந்நியாசக் கட்டளை அண்ணுமலைப் பல்கலைக்கழகம் ... | 15,000 |
| 2. | கொட்டையூரில் நடுத்தரக் கல்விச்சாலை ஏற்படுத்த ... | 11,500 |
| 3. | திருவாங்கூர் மகாராஜா தேவாரப் பரிசு ... | 5,000 |
| 4. | சேரமான் பெருமாள் தேவாரப் பரிசு, கொச்சி. ... | 5,000 |
| 5. | மூவர் தேவாரப் பரிசு சீகாழி, திருவாரூர் திருவையாறு, திருப்பனந்தாள், ஆடுதுறை... | 10,000 |
| 6. | ஸ்ரீகாசிப் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்தப் போதகாசிரியர் நியமிக்க. (62 பார்க்க) ... | 60,000 |
| 7. | அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த உபகாரச் சம்பளம் அளிக்க. ... | 30,000 |
| 8. | திருப்பனந்தாளில் தமிழ்க் கல்லூரி நிறுவ நிலப்பெறுமானம் ... | 1,50,000 |
| 9. | இசைத் தமிழ்க் கல்விக்கு நிலப்பெறுமானம். | 1,00,000 |
| 10. | திருப்பனந்தாளில் கால்நடை வைத்திய சாலை ஏற்படுத்தவும், குடந்தைக் கல்லூரியில் உபகாரச் சம்பளமளிக்கவும் நிலப்பெறுமானம் ... | 20,000 |

| | |
|---|---|
| 11. ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு நாள் அன்னதானம் (வைகாசி அமர பக்ஷம் திருதியை) ... | 10,000 |
| 12. இராமேசுவரத்தில் ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நினைவுநாள் அன்னதானம் (வைகாசி அமரபக்ஷம் திருதியை) ... | 10,000 |
| 13. திருநள்ளாற்றில் ஆவணிமூல அன்னதானம்... | 3,000 |
| 14. ஸ்ரீ காசியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு மார்கழி மாத அன்னதானம் ... | 17,000 |
| 15. திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி மாணவர் உணவு நிதி நிலப்பெறுமானம் ... | 1,00,000 |
| 16. திருப்பனந்தாளில் ஜன வைத்தியசாலை நிறுவ நிலப்பெறுமானம் ... | 66,000 |
| 17. திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் கேதார கட்டம் ... | 2,900 |
| 18. திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் அரிச்சந்திர கட்டம் ... | 3,300 |
| 19. கும்பகோணத்தில் மணிக்கூண்டு ... | 25,000 |
| 20. தஞ்சையில் காசநோய் வைத்தியசாலை ... | 29,500 |
| 21. ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ குமரகுருபரர் நினைவு நாள் அன்னதானம் (வைகாசி அமரபக்ஷம் திருதியை) ... | 9,000 |
| 22. மைசூர் மகாராஜா தேவாரப் பரிசு ... | 5,000 |
| 23. தருமை ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் ... நினைவுத் தேவாரப் பரிசு, மாயூரம் ... | 5,000 |
| 24. சென்னை விவேகானந்தா கல்லூரியில் ராஜாஜி சைவசித்தாந்தக் கட்டளை ... | 10,000 |
| 25. ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சர். எஸ். ராதாகிருஷ்ணன் சைவசித்தாந்தக்கட்டளை... | 20,000 |
| 26. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுத் தேவாரப்பரிசு, ஸ்ரீ வைகுண்டம் ... | 5,000 |
| 27. மதுரைத் திருமலை நாயக்கர் தேவாரப்பரிசு... | 10,000 |

| | | |
|---|---|---|
| 28. | ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர், திருநெல்வேலி மாணவிகளுக்கு நிலப்பெறுமானம் ... | 1,00,000 |
| 29. | ஸ்ரீ காசியில் மகாத்மா காந்தியடிகள் நினைவு அன்னதானம் (ஜனவரித் திங்கள் 30-ம்நாள்) ... | 5,000 |
| 30. | ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ காசி, மதுரை, குடந்தை மாணவிகட்கு நிலப்பெறுமானம் ... | 1,50,000 |
| 31. | டாக்டர் சுவாமிநாத அய்யர் நினைவுத் திருக்குறட் பரிசு, சென்னை ... | 3,500 |
| 32. | குடந்தையில் காந்தியடிகள் பசுப் பரிசு ... | 1,000 |
| 33. | காந்தியடிகள் நினைவு அரியநாயகிபுரத்தில் ஹரிஜன மாணவ உபகாரநிதி ... | 3,000 |
| 34. | ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நித்திய மகேசுவர பூசை கட்டிடம் ... | 10,000 |
| 35. | திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமிக்கு வெள்ளிக் கவசம் ... | 5,400 |
| 36. | விஷ்ணுபுரத்தில் மகாத்மா காந்தி நினைவு ஹைஸ்கூல் படிப்பக நிதி ... | 1,000 |
| 37. | குடந்தையில் ராஜாஜி அபிராமி அந்தாதிப் பரிசு ... | 3,500 |
| 38. | திருநெல்வேலியில் ஸ்ரீ அரியநாயக முதலியார் நினைவு அபிராமி அந்தாதிப் பரிசு... ... | 3,500 |
| 39. | திருப்பனந்தாளில் அப்பூதி அடிகள் நினைவு தண்ணீர்ப்பந்தல் தர்மம் ... | 3,500 |
| 40. | ஸ்ரீவைகுண்டத்தில் படிப்பக நிதி ... | 3,500 |
| 41. | சிதம்பரம் உயர்தரப் பாடசாலை மாணவர்களுக்கு உணவு நிதி ... | 35,000 |
| 42. | சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை, ஆனி உத்தர நாட்களில் அன்னதானம் ... | 12,000 |

43. இராமேசுவரத்தில் ஆடி, தை அமாவாசைகளில் அன்னதானம் ... 3,500
44. ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நூல் நிலையக் கட்டிடம் ... 26,025
45. பஞ்சாப் அகதிகளுக்கு நன்கொடை ... 5,000
46. அரியநாயகிபுரத்தில் நூல் நிலைய நிதி ... 3,500
47. ஸ்ரீ காசி கேதாரீசுவரர் கோயிலில் ஸ்ரீ குமாரசாமி அன்னதானம் நவராத்திரி விஜயதசமி நாட்களில் ... 5,000
48. ஸ்ரீவில்லிபுத்தூரில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் நினைவுத் தேவாரப் பரிசு ... 35,00
49. திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி கோயிலில் மின்சார தீபம்போட ... 7,500
50. **காஞ்சியில் மூவர் தேவாரப் பரிசு** ... 5,000
51. திருவஞ்சைக்களத்தில் ஆடிச்சுவாதியில் சேரமான் பெருமாள் நினைவு அன்னதானம்... 7,000
52. 28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ வைகுண்டம் இரண்டாண்டு உதவி நிதி ... 23,500
53. 30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்திற்கு நான்கு ஆண்டு மூலதனம் ... 28,000
54, 28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் திருச்செந்தூர் மூன்றாண்டு உதவி மூலதனம் ... 20,500
55. ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் படிப்பகப் பராமரிப்புக்காகக் கட்டிடமும் நிலமும் ... 15,000
56. மாளவியாஜி பெயரால் கல்கத்தா, டெல்லி, அலகாபாத், லக்னோ, ஆக்ரா, அலிகார் முதலிய பல்கலைக் கழகங்களில் சைவசித்தாந்த உபன்னியாசக் கட்டளை ... 5,000

| | | |
|---|---|---|
| 57. | செந்திலாண்டவன் அன்னதானம் சிதம்பரம், மதுரை, திருச்செந்தூர் (ஆவணி மூலத்தில்) நிலப்பெறுமானம் ... | 60,000 |
| 58. | திருப்பனந்தாள் மண்ணியாற்றங்கரையில் சோமேசர் ஸ்நான கட்டம் நிறுவ ... | 2 275 |
| 59. | ஸ்ரீவைகுண்டத்தில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி நிறுவ ... | 45,000 |
| 60. | ஸ்ரீவைகுண்டம் தேவார மாணவர்கள் காசியாத்திரை நிதி ... | 5,000 |
| 61. | பனைசைக் கல்லூரியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பரிசு ... | 5,000 |
| 62. | (6) ஸ்ரீ காசிப் பல்கலைக் கழகத்தில் சைவ சித்தாந்த நிதிக்கு அதிகப்படியாக அளித்தது ... | 16,000 |
| 63. | 30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் மதுரை இரண்டாண்டு உதவி மூலதனம் ... | 14,000 |
| 64. | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் உயர் நிலைப்பள்ளி மாணவிகள் ஹாஸ்டல் ஏற்படுத்த நன்செய் நிலக்கிரயம் ... | 14,000 |
| 65. | 28-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீவைகுண்டம் வகையறு - திருநெல்வேலி இரண்டாண்டு உதவி மூலதனம் ... | 10,000 |
| 66, | 30-வது ஸ்ரீ செந்திலாண்டவன் அன்னதானம் ஸ்ரீ காசி வகையறு கும்பகோணம் இரண்டாண்டு உதவி மூலதனம் ... | 14,000 |
| 67. | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப்பள்ளிக்கு நன்கொடை ... | 15,000 |
| 68. | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்திற்கு அச்சகம் வாங்க நன்கொடை கட்டிடம் உள்பட ... | 27,975 |

| | | |
|---|---|---|
| 69. | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாணவிகளுக்கு உபகாரச் சம்பளமளிக்க நெல்லை ஜில்லா போர்டாரிடம் ... | 10,000 |
| 70. | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு இடம் வாங்க நன்கொடை ... | 8,000 |
| 71. | ஸ்ரீ காசியில் தை மாசத்தில் இந்தியக் குடியரசு தினம் அன்னதானம் ... | 10,000 |
| 72. | ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு மாணவர்கள் உணவு நிதி நிலப்பெறுமானம் ... | 1,50,000 |
| 73. | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ ஆதிகுமரகுருபர சுவாமிகள் மடத்திற்குப் பன்னிரு திருமுறைகள் அச்சிட நிலப் பெறுமானம் ... | 50,000 |
| 74. | சண்டேசுவர நாயனுர் நினைவு தண்ணீர்ப் பந்தல் தருமம் திருவாப்பாடி ... | 3,500 |
| 75. | **காஞ்சிபுரத்தில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவு உபகாரச் சம்பள நிதி** | 7,000 |
| 76. | திருச்செந்தூரில் ஸ்ரீ செந்திலாண்டவன் தேவாரப் பரிசு நிதி ... | 5,000 |
| 77. | சென்னையில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவுத் திருக்குறள் பதிப்பு நிதி ... | 35,000 |
| 78. | ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் மங்கையர்க்கரசியார் நினைவுப் பரிசு நிதி ... | 3,500 |
| 79. | கும்பகோணம் தாலூகா மேலச் சூரிய மூலை கண்டியன் பழவாற்றின் மீது பாலம் கட்ட ... | 8,390 |
| 80. | ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுத் தண்ணீர்ப்பந்தல் நிதி ... | 3,500 |

| | | |
|---|---|---|
| 81. | பழுத்த தமிழ்ப் புலவர் காசியாத்திரை நிதி செந்தமிழ்க் கல்லூரி திருப்பனந்தாள்... | 5,000 |
| 82. | திருச்செங்காட்டங்குடியில் சிறுத்தொண்டர் நினைவு அன்னதானம் சித்திரைப் பரணியில் ... | 7,000 |
| 83. | திருவஞ்சைக்களத்தில் ஸ்ரீ சேரமான், ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் நினைவு வாசகசாலை நிறுவ ... | 5,000 |
| 84. | திருநாரையூரில் ஸ்ரீ நம்பியாண்டார் நம்பிகள் நினைவுத் திருமுறை நிதி ... | 35,000 |
| 85. | இராமநாதபுரத்தில் ஸ்ரீ தாயுமானவர் சன்மார்க்க சங்க நூல் நிலைய நிதி ... | 5,000 |
| 86. | லால்குடியில் ஸ்ரீ காரைக்கால் அம்மையார் நினைவு மாணவிகள் உபகாரச் சம்பள நிதி ... | 15,000 |
| 87. | அவிநாசியில் முந்நூல் அணியும் கலியாண நிதி திருப்பனந்தாளில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் நினைவுப் பரிசு நிதி ... | 5,000 |
| 88. | குடந்தையில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதிநெறி விளக்கப் பரிசு... | 5,000 |
| 89. | திருப்பூந்துருத்தியில் அப்பர் நினைவு அன்னம் பாலிப்பு-சித்திரைச் சதயத்தில்... | 15,000 |
| 90. | திருநெல்வேலி ஜில்லாவில் ஸ்ரீ ஆதி குமர குருபரசுவாமிகள் நினைவுத் தமிழ் பரிசு ... | 5,000 |
| 91. | ஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்தர் நினைவுப் பரிசு ஸ்ரீவைகுண்டம் ... | 3,500 |
| 92. | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு மார்கழிமாத அன்னதானம், இராமேசுவரம் ... | 3,500 |
| 93. | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னதானம் சென்னபுரி அன்னதான சமாஜம் சென்னை (வைகாசி அமரபக்ஷம் திருதியை)... | 5,000 |

| | | |
|---|---|---|
| 94. | காசியில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவு அன்னதானம் (ஆனி மகத்தில்) ... | 5,000 |
| 95. | திருச்செந்தூரில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னதானம் (வைகாசி அமர பக்ஷம் திருதியை) ... | 5,000 |
| 96. | திருச்சிராப்பள்ளியில் ஸ்ரீ தாயுமான சுவாமிகள் நினைவுப் பரிசு நிதி ... | 5,000 |
| 97. | திருநாரையூரில் ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் நினைவுக் கட்டிடம் நிறுவ ... | 7,000 |
| 98. | திருச்சிராப்பள்ளியில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதி நெறி விளக்கப் பரிசு ... | 5,000 |
| 99. | தஞ்சை, கலைக்கூடத்திற்கு நன்கொடை ... | 5,000 |
| 100. | மணிக்குடியில் கடலூர்க்கலயர் புனற்பந்தர் நிதி ... | 3,500 |
| 101. | காசியில் ஸ்ரீ மாசிலாமணித் தேசிக ஞானசம்பந்த சுவாமிகள் நினைவு மாசி மாத அன்னதானம் ... | 5,000 |
| 102. | திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில் திருவள்ளுவர் நினைவுப் பரிசு ... | 5,000 |
| 103. | ஸ்ரீ காசியில் பங்குனி மாதத்தில் கமலை ஞானப்பிரகாசர் நினைவு அன்னம்பாலிப்பு... | 5,000 |
| 104. | திருச்செந்தூரில் ஐக்கிய வேளாள சங்கப் படிப்பக நிதி ... | 5,000 |
| 105. | காசியில் சித்திரை மாதத்தில் அப்பர் நினைவு அன்னம் பாலிப்பு ... | 7,000 |
| 106. | ஆடுதுறையில் ஸ்ரீ குமரருருபர சுவாமிகள் உயர்நிலைப் பள்ளி நிதி ... | 40,000 |
| 107. | செந்திலாண்டவன் திருவருள் பாலிப்பு நிதி நிலப்பெறுமானம் ... | 50,000 |
| 108. | திருச்செந்தூரில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நித்திய மகேசுவரபூஜை நிதி ... | 12,000 |

| | | | |
|---|---|---|---|
| 109. | ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நீதிநெறி விளக்கப் பரிசு-திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் உயர்நிலைப் பள்ளிகளில் | ... | 7,000 |
| 110. | ஸ்ரீ காசியில் கச்சியப்பசிவாசாரியர் நினைவு அன்னம் பாலிப்பு கார்த்திகை மாதத்தில் | ... | 7,000 |
| 111. | சென்னைக் கல்லூரிகளில் ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள் நினைவு சிவபோகசாரம் பரிசு நிதி | ... | 5,000 |
| 112. | தஞ்சையில் ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு—சேமவைப்பு | ... | 5,000 |
| 113. | மதுரையில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு சேமவைப்பு | ... | 5,000 |
| 114. | திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தல் தரும நிதி, தத்துவாஞ்சேரி | ... | 3,500 |
| 115. | **காஞ்சிபுரத்தில் கச்சியப்ப சிவாசாரியர் நினைவு அன்னம் பாலிப்பு மாசி-மிருகசீருஷம்** | ... | 7,000 |
| 116. | திருக்காளத்தியில் கண்ணப்பர் நினைவு அன்னம் பாலிப்பு | ... | 5,000 |
| 117. | ஸ்ரீ காசியில் சுந்தரர் நினைவு ஆடிமாத அன்னம் பாலிப்பு சேமவைப்பு | ... | 7,000 |
| 118. | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சகலகலாவல்லி மாலைப் பரிசு—அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளி மாயூரம் | ... | 1,000 |
| 119. | சிதம்பரத்தில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு | ... | 5,000 |
| 120. | வெள்ளியம்பலவாண முனிவர் நினைவு முதுமொழிமேல் வைப்புப் பரிசு–திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத்தில் | ... | 3,500 |
| 121. | காசியில் ஜாபள்ளி ஜமீன்தார் அன்னம் பாலிப்பு சேமவைப்பு | ... | 6,000 |
| 122. | மதுரையில் கமலை வெள்ளியம்பலவாணர் நினைவு முதுமொழிமேல் வைப்புப் பரிசு | ... | 5,000 |

| | | | |
|---|---|---|---|
| 123. | திருவாதவூரில் ஸ்ரீமாணிக்கவாசகர் நினைவு அன்னம் பாலிப்பு நிதி | ... | 5,000 |
| 124. | சீகாழியில் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பால் நிதி | ... | 3,500 |
| 125. | திருவண்ணாமலையில் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் நினைவுத் திருவாசகப் பரிசு | ... | 5,000 |
| 126. | கல்கத்தா சர்வகலாசாலையில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் தமிழ்ப் பரிசு நிதி | ... | 3,500 |
| 127. | தில்லையில் பல்லாண்டு விளக்கு நிதி (கட்டிடம்) | ... | 5,000 |
| 128. | ஸ்ரீ காசியில் அரிமர்த்தன பாண்டியன் நினைவு ஆவணித் திங்கள் அன்னம் பாலிப்பு | ... | 7,000 |
| 129. | ஸ்ரீ காசியில் திருமூலர் நினைவு ஐப்பசித் திங்கள் அன்னம் பாலிப்பு | .... | 7,000 |
| 130. | **காஞ்சிபுரத்தில் ஸ்ரீ கமலை வெள்ளியம் பலவாண முனிவர் முதுமொழிமேல் வைப்புப் பரிசு சேமவைப்பு** | ... | 5,000 |
| 131. | திருப்பனந்தாள் ஸ்ரீ அருணசடேசுவரர் கொள்ளிடத் தீர்த்த விழா நிதி (கட்டிடம்) | ... | 12,000 |
| 132. | இராமேசுவரத்தில் கார்வேட் நகர் ராஜா ஸ்ரீ பொம்மராஜு ஸ்ரீ மகாராஜுலிங்காரு நினைவு அன்னதானம் | ... | 5,000 |
| 133. | கும்பகோணத்தில் கார்வேட் நகர் ராஜா ஸ்ரீ வெங்கடப்பெருமாள் ராஜுலிங்காரு நினைவு அன்னதானம் (மாசி மகத்தில்) | ... | 3,500 |
| 134. | திருவண்ணாமலை (பராசக்தியம்மன் சந்நிதியில்) திருவெம்பாவை சலவைக்கல் பதிப்பு | ... | 2,500 |
| 135. | சிதம்பரத்தில் திருப்பல்லாண்டு சிவபுராணம் சலவைக்கல் பதிப்பு, திருவெம்பாவை. எழுத்து, தேர்ச் சீலைகள், தேர்க்கொட்டகை, ஒலிபெருக்கி வகையரு | ... | 14,500 |

136. (கும்பகோணம்) திருப்புறம்பயம் சாட்சி நாத ஸ்வாமி தேவஸ்தானம் திருப்பணி, மின்விளக்கு, தேர்ச்சிலை வகையறு ... 7,700

137. சுவாமிமலை, திருச்செந்தூர், மதுரை, திருத்தணிகை, மைலாப்பூர், திருவண்ணா மலை, திருநெல்வேலி, **கச்சியேகம்பம், கச்சிக்குமரகோட்டம்,** திருப்பனந்தாள் அருணசடேசுவரர் தேவஸ்தானம், கும்ப கோணம், திருப்பரங்குன்றம், திருக்கழுக் குன்றம், திருப்பனந்தாள் விசுவநாத சுவாமி கோயில், வைத்தீஸ்வரன் கோயில் சீர்காழி, திருக்கடவூர், திருவையாறு, தருமபுரம், திருச்சிராப்பள்ளி, திரு வானைக்கா, திருவாதவூர், விருத்தாசலம் ஆகிய தலங்களில் "**சிவ சிவ**" ஒளிவளர் விளக்கு அமைக்க ... 8 510

138. தில்லையில் (சிதம்பரத்தில்) ராஜ ராஜ அபயகுலசேகர சோழன் நினைவு தேவார வைப்பு நிதி (கட்டிடங்கள்) ... 16,000

139. திருப்பனந்தாளில் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி ஆதிகுமரகுருபர சுவாமிகள் மகேசுவர பூசை நிதி(வைகாசி அமரபக்ஷம் திருதியை) நிலப் பெறுமானம் ... 1.00 000

140. **காஞ்சிபுரத்தில் ஸ்கந்த ஷஷ்டி விழாவில் கந்தபுராண பிரசங்க நிதி** ... 3,500

141. திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு நித்திய மகேசுவர பூஜை நிதி நிலப் பெறுமானம் ... 2,00 000

142. காசியில் காளத்தி ராஜா நினைவு காள ஹஸ்தி பசுபதீச்சுர பூசை நிதி ... 5,000

143. நாகர் கோவிலில் ஸ்ரீ தாணுமாலயப் பெருமான் நூல்நிலையப் படிப்பக நிதி ... 3,500
144. காசியில் ஞானசம்பந்தர் நினைவு வைகாசித் திங்கள் அன்னம்பாலிப்பு ... 7 000
145. திருவாரூரில் ஸ்ரீ கமலை வெள்ளியம்பல வாண முனிவர் முதுமொழிமேல் வைப்புப் பரிசு நிதி ... 3 500
146. திருப்பனந்தாளில் ஸ்ரீ செந்திலாண்டவன் அருளிப்பாடு நிதி நிலப்பெறுமானம் ... 2,00,000
147. திருவிடைமருதூரில் தைப்பூச அன்னம் பாலிப்பு ... 5,000
148. தில்லையில் பெரியபுராணப் பிரசங்க நிதி ... 7,000
149. ஸ்ரீ காசியில் ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னதானம் ஆனிமாதம் முழுதும்... 7,000
150. இராமேசுவரத்தில் ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னதானம் ஆடி மாதம் முழுதும் ... 3,500
151. மதுரையில் திருவிளையாடற் புராணப் பிரசங்க நிதி ... 7,000
152. ஸ்ரீ காசியில் ஆதி குமரகுருபர சுவாமிகள் நினைவு அன்னம்பாலிப்பு நிதி புரட்டாசி மாதத்தில் ... 7,000
153. காசியில் ஸ்ரீ-ல-ஸ்ரீ சாமிநாத சுவாமிகள் நினைவுநாள் அன்னம்பாலிப்பு ... 3,500
154. காசியில் கோச்செங்கட் சோழர் நினைவு அன்னம் பாலிப்பு மாசி மாதம் ... 3,500
155. மதுரையில் பெரிய புராணப் பிரசங்க நிதி ... 7,000
156. மதுரையில் கந்தபுராணப் பிரசங்க நிதி (தை வெள்ளி) ... 3,500
157. சிதம்பரத்தில் தில்லைவாழந்தணர் அன்னம் பாலிப்பு ... 1,50,000

| | | | |
|---|---|---|---|
| 158. | கல்கத்தா பல்கலைக்கழகத்தில் ஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமிகள் நினைவு தமிழ்ப் பரிசு நிதி | ... | 3,500 |
| 159. | சிதம்பரத்தில் திருவாசகப் பிரசங்க நிதி | ... | 6,000 |
| 160. | திருக்கழுக்குன்றத்தில் மாணிக்கவாசகர் நினைவு அன்னம் பாலிப்பு ஆனி மகம் | ... | 5,000 |
| 161. | சீகாழியில் சட்டைநாதர் புழுகு நெய் சாத்து நிதி | ... | 3,500 |
| 162. | மதுரையில் ஸ்ரீ-ல-ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நினைவுப் பசுநிதி | ... | 3,500 |
| 163. | ஸ்ரீ காசியில் காரைக்கால் அம்மையார் நினைவு அன்னம்பாலிப்பு (பங்குனி மாதத்தில்) | ... | 5,000 |
| 164. | ஸ்ரீ காசியில் இசை ஞானியார் நினைவு அன்னம் பாலிப்பு (சித்திரை மாதத்தில்) | ... | 5,000 |
| 165. | ஸ்ரீ காசியில் திருநீலகண்டநாயனார் நினைவு அன்னம்பாலிப்பு (வைகாசி மாதத்தில்) | ... | 3,000 |
| 166. | ஸ்ரீ காசியில் நன்பாட்டுப்புலவர் நினைவு ஆனிமாச அன்னம் பாலிப்பு சேமவைப்பு | ... | 3,000 |
| 167. | இராமேச்சுரத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் நினைவுநாள் அன்னம் பாலிப்பு சேமவைப்பு | ... | 3,500 |
| 168. | ஸ்ரீ காசியில் மும்மையால் உலகாண்ட மூர்த்தி நினைவு ஆடிமாச அன்னம் பாலிப்பு சேம வைப்பு | ... | 3,000 |
| 169. | திருவாரூரில் மனுநீதிச் சோழர் நினைவுப் பரிசு நிதி | ... | 3,500 |
| 170. | ஸ்ரீ காசியில் குங்குலியக் கலயர் நினைவு ஆவணித் திங்கள் அன்னம்பாலிப்பு | ... | 3,000 |
| 171. | திருப்பனந்தாளில் ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் நினைவு பிரசவ விடுதி கட்டுவதற்கு நன்கொடை | ... | 5,000 |

| | | |
|---|---|---|
| 172. | ஸ்ரீ காசியில் உருத்திரபசுபதியார் நினைவு புரட்டாசி மாத அன்னம்பாலிப்பு முதற் பொருள் ... | 3,000 |
| 173. | ஸ்ரீ காசியில் நெடுமாறநாயனர் நினைவு ஐப்பசி மாத அன்னம்பாலிப்பு முதற் பொருள் ... | 3,000 |
| 174. | ஸ்ரீ காசியில் ஆனாயநாயனர் நினைவு கார்த்திகை மாச அன்னம்பாலிப்பு முதற் பொருள் ... | 3,000 |
| 175. | இராமேசுவரத்தில் கார்வேட்நகர் ஸ்ரீ பொம்மராஜூ நினைவு அன்னம்பாலிப்பு முதற் பொருள் ... | 6,000 |
| 176. | ஸ்ரீ காசியில் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி இராமலிங்க சுவாமிகள் நினைவு மாசிமாத அன்னம் பாலிப்பு நிதி ... | 3,500 |
| 177. | வடதிருவாலங்காட்டில் காரைக்கால் அம்மையார் நினைவு அன்னம்பாலிப்பு முதற்பொருள் ... | 5,000 |
| 178. | **காஞ்சிபுரத்தில் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் நினைவு நாள் அன்னம் பாலிப்பு சேமவைப்பு** ... | **5,000** |
| 179. | **காஞ்சிபுரத்தில் கச்சியப்ப சிவாசாரியர் நினைவுப் பசுப்பரிசு நிதி** ... | **3,500** |
| 180. | **காஞ்சிபுரத்தில் திருக்கச்சியேகம்ப உருத்திராக்கத் தேவார நிதி** ... | **50,000** |
| 181. | சுவாமிமலையில் அப்பர் நினைவு புனற்பந்தர் நிதி ... | 3,500 |
| 182. | திருப்பனந்தாள் சிவ சிவ கால்நடை வைத்தியசாலைக்குப் புதியகட்டிடம் கட்டுவதற்கு நன்கொடை ... | 3,000 |

183. சிவன் கோயில்களில் தேவாரப் பாசுரங்களைப் பிற தெய்வப் பாடல்களோடு கொண்ட கல்லெழுத்துப் பதிப்பு:— மதுரை, திருக்கழுக்குன்றம், மைலாப்பூர், திருச்செந்தூர் திருநெல்வேலி, காஞ்சிபுரம், திருவாரூர், திருக்குற்றாலம், திருப்பனந்தாள், திருப்புன்கூர், சீர்காழி, வேதாரண்யம், திருவையாறு, அவிநாசி, திருவெண்ணெய்நல்லூர், திருவதிகை, திருமருகல், சுவாமிமலை, வைத்தீசுவரன்கோவில், திருச்சிராப்பள்ளி ,திருவோத்தூர், திருவிடைக்கழி, வடதிருமுல்லைவாயில் ... 22,100

... ORIENTAL ... 22 AUG 1955 ... CANE P.O. MADRAS

இம்பீரியல் அச்சகம், பெரியகம்மாளத்தெரு, திருச்சிராப்பள்ளி.

உ

சிவ சிவ

## சிவ நாமம்

சிவ சிவ என்கிலர் தீவினை யாளர்;
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்;
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்;
சிவ சிவ என்னச் சிவகதி தானே.

—திருமந்திரம்

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க;
மலிவளம் சுரக்க; மன்னன்
கோன்முறை அரசு செய்க;
குறைவிலாது உயிர்கள் வாழ்க;
**நான்மறை அறங்கள் ஓங்க;**
நற்றவம் வேள்வி மல்க;
மேன்மைகொள் **சைவ நீதி**
விளங்குக உலக மெல்லாம்.

—கந்த புராணம்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 28 | கந்தர் கலிவெண்பா—மூலம் மட்டும் ... | 0 | 1 |
| 29 | நீதிநெறி விளக்கம்—ஆங்கிலம்—ஹிந்தி ... | 0 | 8 |
| 30 | சகலகலாவல்லி மாலை—ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ... ... | 0 | 1 |
| 31 | சிவஞான சித்தியார்—ஆங்கிலமும், ஹிந்தியும் கூடியது ... ... | 5 | 0 |
| 32 | ஷை ஹிந்திமட்டும் ... ... | 1 | 0 |
| 33 | திருக்குறள்—அறத்துப்பால்—ஹிந்தி மொழி பெயர்ப்பு ... ... | 1 | 8 |
| 34 | ஷை பொருட்பால் ஷை ... ... | 2 | 8 |
| 35 | ஷை காமத்துப்பால் ஷை ... ... | 1 | 0 |
| | ஷை மூன்று புத்தகங்களும் சேர்த்து ... | 4 | 0 |
| 36 | திருக்குறள்-கே. எம். வேங்கடராமையா M. A., B. O. L., அவர்கள் குறிப்புரையுடன் ... ... | 0 | 12 |
| 37 | முதுமொழிமேல் வைப்பு — ஸ்ரீ வெள்ளியம்பலவாணத் தம்பிரான சுவாமிகள் ... | 0 | 7 |
| 38 | திருவுசாத்தானக் கல்வெட்டுகள் ... | 0 | 6 |
| 39 | திருச்செந்தூர் கந்தர் கலிவெண்பா மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ்—மதுரைக் கலம்பகம் — நீதி நெறி விளக்கம்—மதுரை மீனுட்சியம்மை இரட்டைமணி மாலை — மதுரை மீனுட்சியம்மை குறம் ... | 2 | 12 |
| 40 | திருவாரூர் நான்மணிமாலை — முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ... | 1 | 0 |
| 41 | சிதம்பர மும்மணிக்கோவை— சிதம்பரச் செய்யுட்கோவை — தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணி மாலை ... | 1 | 0 |
| 42 | பண்டார மும்மணிக் கோவை — காசிக் கலம்பகம் — சகலகலாவல்லி மாலை ... | 0 | 8 |
| 43 | தமிழிசைப் பாக்கள் ... | 0 | 8 |

கிடைக்குமிடங்கள் :

1. **ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.**
2. **தியாகராச விலாஸ், திருவல்லிக்கேணி, சென்னை.**

குறிப்பு: ஷை விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச் சாரும்.

உ

# "குமர குருபரன்"

[தமிழ்த் திங்கள் வெளியீடு]

22 AUG 1955 TRIPLICANE P.O. MADRAS

ஸ்ரீவைகுண்டம்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடாலயத்திலிருந்து
**விரோதி ஆண்டு தை மாதம் முதல்**
மாதந்தோறும் வெளிவருகிறது

★

இது
சைவசித்தாந்தம், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தம்,
பன்னிரு திருமுறை ஆராய்ச்சி, இலக்கியம்,
பிற மொழிகள், கலாசாரம் சம்பந்தமான
கட்டுரைகள் கொண்டது

★

நிர்வாக ஆசிரியர்:

**T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L.,**
(நிரந்தரத் தலைவர், குமரகுருபரன் சங்கம்)
மானேஜிங் டிரஸ்டி, ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடம்
ஸ்ரீவைகுண்டம்

வருட சந்தா ரூ. 1—8—0    தனிப்பிரதி ரூ. 0—2—0

இம்பீரியல் அச்சகம், பெரியகம்மாளத்தெரு. திருச்சி-1707-55.